பக்கங்கள்: இருபத்திநான்கு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 சித்திரை 21 செவ்வாய்க்கிழமை (04.05.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 159

## திட்டங்கள் குறித்து அரசு எங்களுடன் ஆலோசனை நடத்தினால்...

# வடக்கு, கிழக்கு அபிவிருத்திக்கு கூட்டமைப்பு முழு ஆதரவு நல்கும்

## இந்தியத் தூதுவர் அசோக்கிடம் நேரில் உறுதியளிப்பு

கொழும்பு, மே 4

வடக்கு, கிழக்கு அபிவிருத்தி குறித்து அந்தப் பிரதேச மக்களால் தெரிவுசெய்யப்பட்ட எம்முடன் அரசாங்கம் திறந்த மனதுடன் பேசினால் - கலந்தாலோசனை நடத்தினால் - நாம் எமது முழு ஆதரவையும் வழங்குவோம்.

பொதுத் தேர்தலில் தெரிவுசெய்யப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 14 நாடாளுமன்ற உறுப்பினர் களும் இந்தியத் தூதுவர் அசோக்கே காந்தவின் அழைப்பின் பேரில் அவரை நேற்று நண்பகல் சந்தித்தனர்.

அப்போதே கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மேற்கண்டவாறு இந்தியத் தூதுவரிடம் உறுதியாகத் தெரிவித்தனர்.

நட்புரீதியாக இடம்பெற்ற இச்சந்திப்பில் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

இச்சந்திப்பில் சுட்டிக்காட்டப்பட்ட முக்கிய விடயங்கள் வருமாறு:-

✱ வன்னி மாவட்டத்தில் மக்களின் மீள் குடியமர்வு முழுமையாக நிறைவேற்றப் படவேண்டும். (24ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். குடாநாட்டில் மாலைவேளை இடியுடன் மழை பெய்யும் சாத்தியம்

யாழ்ப்பாணம், மே. 04

குடாநாட்டில் ஓரிரு தினங்கள் மாலையில் இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடிய காலநிலை தொடரும். அதேவேளை பகல் நேரங்களில் கூடிய வெப்பநிலை காணப்படும் என்று வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

வளிமண்டலத்தில் நீராவியின் அளவு கூடுதலாக இருப்பதால் பொதுமக்கள் அசௌகரியங்களை எதிர்நோக்குவர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-1)

## சாவகச்சேரி மாணவன் படுகொலை வழக்கு; ஈ.பி.டி.பி. பொறுப்பாளருக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், மே 4

சாவகச்சேரியில் மாணவன் கபிலநாத் கொலைசெய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் சந்தேகத்தில் சனியன்று கைதுசெய்யப்பட்ட ஈ.பி. டி.பி. அமைப்பின் தென்மராட்சிப் பொறுப் பாளரான சாள்ஸ் என அழைக்கப்படும் சூசைமுத்து அலெக்ஸாண்டரை எதிர்வரும் 17ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

மாணவன் படுகொலை சந்தேக நபர்களான ஈ.பி.டி.பியின் சார்ள்ஸ், சாந்தீபன், திருச்செல்வம்,தயாராஜ், குமாரசிங்கம் திருப்பதியம்மா, குமாரசிங்கம் குகன்யா ஆகியோரை அடுத்த இருவாரங்களுக்கு விளக்கமறியலில் வைக்கவேண்டுமென சாவகச்சேரி நீதி வான் ரி.ஜே.பிரபாகரன் உத் தரவு பிறப்பித்தார்.

இப்படுகொலையின் பிரதான சந்தேக நபரான சார்ள்ஸ் (24ஆம் பக்கம் பார்க்க)

## போரினால் பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு நீதி வழங்கக் கோருகிறது மன்னிப்புச்சபை

கொழும்பு, மே 04

இலங்கை அரசுக்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான மோதல் முடிவுக்கு வந்து ஒரு வருடகாலமாகின்ற நிலையில், அதில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி வழங்கப்பட வேண்டும் என சர்வதேச மன்னிப்புச்சபை வேண்டுகோள்விடுத்துள்ளது.

இது தொடர்பாக அந்த அமைப்பு மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

இலங்கையில் உள்நாட்டு மோதல் முடிவுக்கு வந்து மே 19ஆம் திகதியுடன் ஒரு வருடமாகின்றது.

மோதலில் ஈடுபட்ட இரு தரப்பினரும் சர்வதேச மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமானச் சட்டங்களை பெரியளவில் மீறிய போதிலும் சட்டத்தின் பிடியிலிருந்து அவர்களுக்கு விதி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

மோதலின்போது தமது உறவினர்களை இழந்தவர்களும், உயிர் தப்பியவர்களும் தேசிய (24ஆம் பக்கம் பார்க்க)

## சாவகச்சேரி நீதிவானுக்கு அச்சுறுத்தல்; சட்டத்தரணிகள் நேற்றுப் பகிஷ்கரிப்பு

யாழ்ப்பாணம்,மே.04

சாவகச்சேரி நீதிவான் ரி.ஜே.பிரபாகரனுக்கு விடுக்கப்பட்டுள்ள அச்சுறுத்தலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து சட்டத்தரணிகள் நேற்று அடையாள பகிஷ்கரிப்பை நடத்தினர்.

சாவகச்சேரி,வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய நீதிமன்றங்களின் சட்டத்தரணிகள் இந்தப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

இதேவேளை-குடாநாட்டில் நீதிபதியின் பணிக்கு இடையூறு விளைவிக்கும் நடவடிக்கைகளுக்கு எதிராக எடுக்க வேண்டிய செயற்பாடுகள் குறித்து ஆராய யாழ். சட்டத்தரணிகள் சங்கம் இன்று காலை ஒன்பது மணிக்கு யாழ்.நீதிமன்ற கட்ட டத் தொகுதியிலுள்ள சங்க அலுவலகத்தில் கூடுகிறது. (24ஆம் பக்கம் பார்க்க)

## மூத்த ஊடகவியலாளர் திஸநாயகத்துக்கு பொதுமன்னிப்பு வழங்கினார் ஜனாதிபதி

கொழும்பு, மே 04

இருபது வருட சிறைத்தண்டனை வழங்கப்பட்டு பின்னர் பிணை வழங்கப்பட்ட சிரேஷ்ட ஊடகவியலாளர் ஜே.எஸ்.திஸநாயகத்துக்கு ஜனாதிபதி நேற்று பொதுமன்னிப்பு வழங்கினார்.

சர்வதேச ஊடக சுதந்திர தினமான நேற்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது நிறைவேற்று அதிகாரத்தைப் பயன் படுத்தி ஜே.எஸ்.திஸ நாயகத்திற்கு பொது மன்னிப்பை வழங்கியுள்ளார் என்று வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார். (24ஆம் பக்கம் பார்க்க)



## அவசரகாலச் சட்ட விதிகளில் திருத்தம்; இன்றும் நாளையும் சபையில் விவாதம்

கொழும்பு, மே 04

அவசரகால ஒழுங்கு விதிகளில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

இந்தத் திருத்தங்கள் இன்று பிரதமரால் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டு அது தொடர்பான விவாதம் இன்றும், நாளையும் நடைபெறும்.

உத்தியோகப் பற்றற்ற முறையில் நேற்று முன்தினம் கூடிய அமைச்சரவைக் கூட்டத்தில் இத்தீர்மானம் எடுக்கப்பட்டது என்று வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் நேற்றுக் கூறினார். இருப்பினும், பயங்கரவாதத்திற்கு எதிரான சட்டங்கள் மற்றும் (24ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டில் மா, பாண் விலைகள்: இன்று அறிவிப்பு

யாழ்ப்பாணம்,மே.04

குடாநாட்டில் கோதுமை மா, பாண் மற்றும் அதுபோன்ற உற்பத்திப் பொருள்களின் புதிய விலை விவரம் இன்று அறிவிக்கப்படவிருக்கின்றது.

யாழ்.அரச அதிபர் கே.கணேஸ் இத் தகவலை நேற்றிரவு தெரிவித்தார்.

(24ஆம் பக்கம் பார்க்க)

## பொன்சேகா மீதான இராணுவ விசாரணைக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் இடைக்காலத்தடை

கொழும்பு, மே 04

முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு எதிரான இராணுவ நீதிமன்ற விசாரணைகள் அனைத்தும் எதிர்வரும் 22 ஆம் திகதி வரை இடைநிறுத்தப்படவேண்டும் என்று மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் குழுத் தலைவர் சத்தியா ஹெட்டிகே தலைமையில் மூன்று பேர் கொண்ட மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் குழு விதித்த இந்தத் தடை உத்தரவு ஜெனரல் சரத் பொன்சேகாவின் வழக்கில் முக்கிய திருப்பமாகக் கருதப்படுகிறது.

இராணுவ நீதிமன்ற விசாரணைகள் மீது தடை விதிக்கவேண்டும் என்று கோரி பொன்சேகாவின் சார்பில் அவரின் மனைவி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்திருந்தார்.

இராணுவ நீதிமன்ற விசாரணைகள் மீது மேன்முறையீட்டு நீதிமன்றம் தற்காலிகஇடைக்காலத் தடை உத்தரவேனும் பிறப்பிக்கவேண்டும் என்றும் அவர் கோரியிருந்தார்.

இம்மனுவில் பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் (24ஆம் பக்கம் பார்க்க)



## வல்வை-ஆவரங்கால் போக்குவரத்துக்கு மாற்றுப் பாதைகள்

யாழ்ப்பாணம்,மே.04

யாழ்-பருத்தித்துறை வீதியை அகலமாக்கும் பணிகள் இடம்பெற்றுவருவதால் வல்லை சந்தியிலிருந்து ஆவரங்கால் சந்தி வரையிலான வீதி ஊடான போக்கு வரத்து எதிர்வரும் 9ஆம்திகதி முதல் தற்காலிகமாக மூடப்படவிருக்கிறது.

(24ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Civil Contractors தேவை

கொழும்பு 09இல் அமைந்துள்ள ICTAD C4 தரத்திலான Civil Contractor நிறுவனம் Premium International க்கு வடக்கு கிழக்கில் பெருமளவிலான கட்டடப் பணிகளுக்காக ICTAD M9 அல்லது M8 தரத்திலான பதிவுகொண்ட Civil Contractors தேவை. அனுபவம், இயந்திர மற்றும் மனிதவள விபரங்களுடன் கீழ்க்காணும் முகவரிக்கு விண்ணப்பிக்கவும். விரைவில் நேர்முகத்தேர்வு பற்றி அறியத்தரப்படும்.

14,கலைப்புலவர் லேன், மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (97551)


## கருத்தரங்கு தொடர் 01

ய/இராமநாதன் கல்லூரி உயர்தர மாணவர் மன்றம் நடத்தும் க.பொ.த உயர்தரம் - 2010August

அரசறிவியல் - திரு- K.செல்வரட்ணம்

05.03.2010 காலை 9மணி - 1மணி வரை

மாணவர்கள் அனைவரும் கலந்து கொள்ளவும்.

## கண்ணீர் அஞ்சலி



எமது குடும்பத்தின் அன்புக்கும் மதிப்பிற்கும் உரிய

**மாணிக்கம் இராஜேஸ்வரன்**

(உரிமையாளர், வேல்முருகன் ரேடர்ஸ்)

அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு ஆழ்ந்த துயரமடைகின்றோம். அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

P.D.சேவியர் குடும்பம்,
கதிசன் காட்வெயார், சின்னக்கடை, யாழ்ப்பாணம். (97572)


## Niru Business College

Kandy Road, Nunavil Center, Chavakachcheri.
Tel: 0217200213, 0773516592

### Spoken English with Grammar

வகுப்புக்கள் யாழ், கொழும்பு ஆசிரியர்களினால் மாணவர்களின் தரத்திற்கு ஏற்ப வகைப்படுத்தி கற்பிக்கப்படும்.

ஆரம்பம்: 05.05.2010 முற்பகல் 10மணிக்கு

கொழும்பிலிருந்து பிரபல ஆசிரியர் திரு. நித்தியானந்தம் அவர்களால் முதல் நாள் இலவசமாக நடத்தப்படும்.

10.05.2010 முற்பகல் 1 மணிக்கு Spoken Sinhala Language வகுப்பும், பிரபல கொழும்பு ஆசிரியர் K.பரமேஸ்வரன் அவர்களினால் ஆரம்பிக்கப்பட உள்ளது. (97542)

அனைத்துக் கற்கை நெறிகளுக்கும் தகுதியான சான்றிதழ்கள் வழங்கப்படும்.


## தவறிவிட்டது

ஸ்ரீ ஆனந்தராஜன் லட்சுமி என்பவருடைய 3 பவுண் சங்கிலி தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலைக்குச் சமீபமாகத் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து T.P. 077-6845377இற்குத் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

### வட்டு. தெற்கு முதலி கோயிலடி
## மின்னல் தாக்கி நீர்த்தாங்கி சேதம்; குடிதண்ணீர் விநியோகம் பாதிப்பு

யாழ்ப்பாணம், மே4

வட்டு. தெற்கு முதலி கோயிலடியில் அமைந்துள்ள கிராமிய குடிதண்ணீர் விநியோக நீர்த்தாங்கி இடிமின்னல் தாக்குதலுக்கு இலக்காகிச் சேதமடைந்தது.

நேற்றுக்காலை 7.30 மணியளவில் இடி மின்னல் தாக்குதலுக்கு இலக்கான இந்த நீர்த்தாங்கியில் சேமிக்கப்பட்டிருந்த குடி தண்ணீர் வெளியேறிவிட்டது. நீர் விநியோகக் குழாய்களும் சேதமடைந்தன.

இதனால் 350 குடும்பங்களின் குடிதண்ணீர் விநியோகம் பாதிக்கப்பட்டது.

இந்தக் குடிதண்ணீர்த் திட்டம் 1982 ஆம் ஆண்டு நெதர்லாந்து அரசின் உதவியுடன் அமைக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

### நெடுந்தீவு ம.விக்கு மூன்றாம் இடம்

மத்திய கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் நடத்தப்பட்ட 'மதர் சிறிலங்கா' போட்டி நிகழ்வில் நெடுந்தீவு ம.வி மணவர்களின் 'நாள் மாறினால் நாடுமாறும்' எனும் நாடக நிகழ்வு யாழ்.மாவட்டத்திலே மூன்றாம் இடம் பெற்றுள்ளது. அண்மையில் யாழ்ப்பாணம்வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெற்ற நிகழ்வின் போது இதற்கான பரிசுகள் வழங்ப்பட்டன. (ஒ-267)


## அனைவருக்கும் கணனிக் கல்வி செயற்திட்டத்தின் கீழ் !!!

ஊடக அனுசரணை (Our Media Partners) :- Enable Sri Lanka Project

G TEC COMPUTER EDUCATION சக்தி TV web - www.gteceducation.com

இந்தியாவில் உள்ள **G - TEC** கணனி நிறுவனமும்

**(ISO 9001 : 2008 Certified Company)**

எமது **UNI** கணனி நிறுவனமும் இணைந்து யாழ் மாணவர்களுக்கு மிகக் குறைந்த கட்டணத்தில் கணனிக் கற்கை நெறியை அறிமுகப்படுத்தியுள்ளது. அந்த வகையில் ரூபா 7000 பெறுமதியான கணனிக் கற்கை நெறியை எமது கீழ்வரும் கணனி நிறுவனங்களில் நீங்கள் ரூபா 1600/= விற்கு கற்க முடியும். சான்றிதழ்கள்யாவும் மேற்படி இந்திய நிறுவனத்தால் உங்களுக்கு வழங்கப்படும் சர்வதேச சான்றிதழ்களாகும்.

எமது கீழ்வரும் நிறுவனங்களில் இக் கற்கை நெறியை நீங்கள் கற்க முடியும், இன்றே விரையுங்கள் :-

விண்ணப்ப முடிவுத் திகதி - 12/05/2010

யாழ்ப்பாணத்தில் :-
UNI - ICT Campus
No - 83, Palaly Road,
Kantharmadam,
Jaffna. T.P - 021 321 6433

மானிப்பாயில் :-
UNI TECHNOLOGY
ICT Education Trainers,
Jaffna Road, Manipay.
T.P - 021 7429325

## யாழ் மாணவர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு !!!

கீழ் வரும் நாடுகளில் உள்ள பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளில்

**New zealand, Netherland, Hungary, Italy, UK, Canada, Poland**

உடனடி அனுமதி வழங்குவதற்கு எமது நிறுவனத்தின் வெளிநாட்டு உயர் பிரதிநிதிகள் யாழ்ப்பாணம் வரவுள்ளனர். (Spot Admissions)

இதற்கான நேர்முகப்பரீட்சை இம் மாதம் 7ம் 8ம் திகதிகளில் எமது நிறுவனத்தில் காலை 9மணி முதல் மாலை 5மணிவரை நடைபெறும்.

இவ் அரிய சந்தர்ப்பத்தை தவற விடாதீர்கள் !!!



Mr.Pim Vis
(Dean of European Business School)



Mr.S.P.Karan
Chairman/MD
Nottingham College of London

மேலதிக விபரங்களுக்கு :-
UNI - ICT Campus, No - 83, Palaly Road
Kantharmadam, Jaffna. T.P - 021 321 6433 / 0777 110 862


## வீட்டுக் கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 26 ★ 11 ★ 1953 | 04 ★ 04 ★ 2010 |

### அமரர் கணேசு செல்லத்துரை

கடந்த 04/04/2010 அன்று சிவபதம் அடைந்த எமது அன்புத் தெய்வத்தின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும், அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவிப்பதுடன், இன்று (04/05/2010) செவ்வாய்க்கிழமை நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

488/1, கே.கே.எஸ் றோட்,
யாழ்ப்பாணம். (97575) குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### முருகேசு நந்தகுமார்



[முன்னாள் கட்டட பரிசோதகரும், பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி, சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி, பண்டத்தரிப்பு சங்கிலியன் விளையாட்டுக் கழகம் ஆகியவற்றின் முன்னாள் பிரபல உதைபந்தாட்ட வீரரும்]

மாதகல் மேற்கைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு நந்தகுமார் 28.04.2010 அன்று காலமானார்.

அன்னார் முருகேசு-மகேஸ்வரி தம்பதியினரின் ஏக புத்திரனும், காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை- தங்கமுத்து தம்பதியினரதும் மற்றும் தவமணியினதும் பெறாமகனும், காலஞ்சென்ற சிவகுரு-நாகரத்தினம் தம்பதியரின் மருமகனும், சிவஞானசக்தியின் அன்புக் கணவரும், விமலகுமார் (அப்பன்), ஷாமிலா(ராஜி), பவனந்தினி (நந்தினி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், அகிலனின் மாமனாரும், றிஹானாவின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற நாகரத்தினம் மற்றும் கிருஷ்ண லீலாவதி, சாந்தகுமார், சாந்தராணி, ஆனந்தகுமார், கமலராணி, யோகராணி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்ற இராசேந்திரம் மற்றும் பரமானந்தம், காலஞ்சென்றவர்களான சிவசோதி, சிவஞானசோதி மற்றும் சிவகுமாரன், சிவஞானதேவி, சிவனேசன், சிவலோகநாதன், இராசலட்சுமி, தர்மரத்தினம், சாயிலதா ஆகியோரின் மைத்துனரும் சரவணபவானந்தன் (செல்லா-பிரான்ஸ்), சதானந்தன் (பாலா-ஹொலண்ட்), கிருபானந்தன் (பபா-ஜேர்மனி), சிவானந்தன் (பாபு-பிரான்ஸ்), ஜெயராணி (நோனா-கனடா), நித்தியானந்தன் (பபி-லண்டன்), மகானந்தன் (கண்ணன்-கனடா), லோகானந்தன் (றமணன்-பிரான்ஸ்), ஜயந்தினி (மானிப்பாய்), நந்தினி (நந்தா-ஜேர்மனி) ஆகியோரின் அன்புமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை மறுதினம் (06.05.2010) வியாழக்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

சென்.ஆன்ஸ் வீதி,
மானிப்பாய்.
001-4164935283 (சி/567270)

தகவல்:
திருமதி ஜயந்தினி சபாரத்தினம் (மருமகன்)
குடும்பத்தினர்.

### சிவஞானவடிவேல் தயாளன்



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், அல்லைப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட சிவஞானவடிவேல் தயாளன் நேற்று (03.05.2010) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவஞானவடிவேல் - விஜயசிறி தம்பதிகளின் அன்பு மகனும், விக்டோறியா ஞானவதியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான அருமைத்துரை - முத்துப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும், விஜி, ரதி, தயானந்தன், தயாபரன், தயாகரன், றேக்கா, தயாகஜன், சலோமியா, வைஷ்ணவி ஆகியோரின் அன்புத் தந்தையும், கமல், டயானா, கிசோ ஆகியோரின் மாமனாரும், அபி, வினி, டொனி, அஷ்கான் ஆகியோரின் பேரனும், குணாளன், மாலா, பப்பி, ராயு, தேவி, ஜெயாளன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், யோகா, லலிதா, ராஜேஸ்வரி, தேவதாஸ், தவராசா, சத்தியசீலன், பேபி, ரஞ்சன், ராதா, றாகினி, சகாயம், குமார், குணம் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (04.05.2010) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணியளவில் புனித பிலிப்பினியார் ஆலயத்தில் நடைபெற்று அல்லைப்பிட்டி சேமக்காலையில் அவரின் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

2ஆம் வட்டாரம்,
அல்லைப்பிட்டி. (97549)

தகவல் :
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## குடாநாட்டில் மீண்டும் பாதுகாப்பு இறுக்கம்!

யாழ்ப்பாணக் குடாநாட்டில் கொலை, கொள்ளை, கடத்தல், கப்பம் கோருதல் ஆகிய வன்செயல்களைத் தடுக்கும் பொருட்டு சிறிதுகால இடைவெளியின் பின்னர் மீண்டும் இங்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் உடனடியாக இறுக்கமாக்கப்படவுள்ளன.

அரசாங்கத்தின் பாதுகாப்புத்துறையின் சார்பில் யாழ்.பிராந்திய கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க இதனை உத்தியோகபூர்வமாக அறிவித்திருக்கிறார்.

படையினரும் பொலீஸாரும் வன்செயல்களை நிறுத்துவதற்குத் தீவிரமாகவும் அர்ப்பணிப்புடனும் செயற்பட்டு சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவர் என்பதனையும் கட்டளைத் தளபதி தாம் நேற்றுமுன்தினம் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் விளக்கினார்.

யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் வடக்கு - கிழக்கின் ஏனைய மாவட்டங்களிலும் மிகமிக இறுக்கமான - அங்கிங்கு அசைய முடியாது என்ற அளவுக்கு - அதீதமான பாதுகாப்பு இறுக்கங்கள் இரண்டரைத் தசாப்தங்களுக்கு மேலாக மக்களை "குத்தி இரத்தம் எடுத்தது" என்று கூறும் அளவுக்கு மலிந்து அவர்களின் வாழ்வைச் சிதைத்தது.

குடாநாட்டைப் பொறுத்தமட்டில், கடந்த சுமார் ஒரு வருடமாக ஏ-9 பாதை ஊடான பயணத்திலும் சரி உள்ளூர் நடமாட்டத்திலும் சரி [illegible]காப்புக் கெடுபிடிகள் நீங்கி ஓரளவு சீர்பெறத் தொடங்கியது. இப்போது முன்னரைப் போல் நினைத்தவுடன் தெற்கே பயணம் செய்து பாதுகாப்பாக திரும்பி வந்து சேரக்கூடியதாக உள்ளது. மொத்தமாகக் கூறினால் மெத்தச் சீர்பெற்ற நிலையாக மாறியுள்ளது. சராசரி மூவாயிரம் தென்னிலங்கை மக்கள் குடாநாட்டிற்கு நாளாந்தம் சுற்றுலா வந்து திரும்பும் நிலையும் தோன்றியுள்ளது.

இத்தகைய சூழமைவில், குடாநாட்டின் பாதுகாப்பு இறுக்கங்களும் தொய்ந்து போயின. மக்களும் மன நிம்மதியான, அச்சம் நீங்கிய நாளாந்த வாழ்வை அனுபவிக்கும் வாய்ப்பும் கிடைத்தது.

பாதுகாப்பு என்ற பெயரிலான தொந்தரவுகள் தொலைந்து போச்சு என்ற குடாநாட்டு மக்களின் நிம்மதி நீங்கி, பேதலிக்கும் அளவுக்கு இப்போது சமூக விரோத வன்செயல்கள் குடாநாட்டைச் சுட்டெரிக்கத் தொடங்கியுள்ளன. நிம்மதியான வாழ்வு [illegible]ள்ளிக் கண்ணின் பார்வைக்கு உட்பட்டது போலாயிற்று.

மீண்டும் குடாநாட்டின் பாதுகாப்பு இறுக்கப்பட்டிருக்கிறது. இந்த இறுக்கம் மக்கள் நலன் கருதியதாக இருக்கும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. குடாநாட்டின் சமூக விரோத வன்செயல் என்ற அரக்கனிடம் இருந்து மக்களைப் பாதுகாத்துக் கொள்ள மீண்டும் இறுக்கம் தேவை என்பதால் மக்கள் படையினருக்கும் பொலீஸாருக்கும் ஒத்துழைப்பு நல்கும் விருப்பு மனநிலைக்கு மாற வேண்டியது தவிர்க்கக் கூடியதல்ல. தங்களுடைய பாதுகாப்புக்காகவே இந்த அழுத்தங்கள் என்பதனை மனதில் இருத்தி ஒத்துழைப்பு நல்க வேண்டும்.

அதேவேளை, படையினரும் பொலீஸாரும் சமூகச் சீர்கேட்டு வன்முறைகளை ஒடுக்கும் பணியின் போது, மக்களுக்கு நோவு தராத, பாதிப்பு ஏற்படுத்தாத வழிமுறைகளைப் பின்பற்றுவதற்கு முன்வரவேண்டும். அவ்வாறு செய்தால் மக்கள் - பாதுகாப்புத் தரப்பினரின் நல்லுறவு வீச் சோடு முளைத்து வளரும்.

சமூக விரோத வன்செயல்களை ஒழிப்பதற்கு மக்கள் தகவல் தெரிவித்தால், அதனால் அவர்களை அது 'பூமராங்' ஆகிவந்து திருப்பித் தாக்காதவாறு பாதுகாப்புத்தரப்பு செயற்பட வேண்டும் என்பது மிகவும் இன்றியமையாதது. அப்போதுதான் சமூக விரோதிகளை இனங்காண்பதற்கும் வன்முறைகளைத் தடுப்பதற்கும் வழி திறக்கும்.

இந்த விவகாரத்தில் மக்களை மட்டுமன்றி சட்டம் ஒழுங்கையும் அச்சுறுத்தும் விதத்தில் பகலில் பட்டுப் போர்வையுடனும் இரவில் பாதாள உலகத்திலும் நடமாடும் பேர்வழிகளை இனங்கண்டு வெளிச்சத்துக்குக் கொண்டு வந்து மக்கள் நலனைப் பேணவேண்டிய பெரும் சவால் பாதுகாப்புத் தரப்புக்கு உண்டு. இதனை அவர்களுக்கு நினைவூட்டுகிறோம்.

## சாவகச்சேரி நீதிவான் பிரபாகரனுக்கு அச்சுறுத்தல்; கண்டித்து மன்னார் சட்டத்தரணிகள் பணிப்பகிஷ்கரிப்பு

மன்னார், மே 4

சாவகச்சேரி நீதிவான் ரி.கே. பிரபாகரனுக்கு விடுக்கப்பட்டுள்ள அச்சுறுத்தல்களைக் கண்டித்து மன்னார் மாவட்ட சட்டத்தரணிகள் நேற்றுப் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

இதனால் மன்னார் நீதிமன்றத்தின் செயற்பாடுகள் நேற்று ஸ்தம்பிதம் அடைந்தன.

யாழ்.குடாநாட்டில் கப்பம் கோரி சிறுவர்கள் கடத்தப்பட்டமை, பாலியல் வல்லுறவு போன்ற சட்ட விரோத நடவடிக்கைகளுக்கு எதிராக சாவகச்சேரி நீதிபதி கடும் நடவடிக்கைகளினை மேற்கொண்டு வந்தார். மேற்படி நடவடிக்கைகளை நிறுத்தும் வகையில் கப்பக்காரர்களினாலும், ஆயுதக் குழுக்களினாலும் நீதிபதிக்கு உயிரச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. இதனை கண்டித்தே தாம் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டதாக மன்னார் மாவட்ட சட்டத்தரணிகள் தெரிவித்தனர்.

கப்பக்காரர்களினதும், ஆயுதக் குழுக்களினதும் இதுபோன்ற செயற்பாடுகள் நீதித்துறை மீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கையை சீர்குலைக்கும் செயல் என்றும் சட்டத்தரணிகள் தெரிவித்தனர்.

இது போன்ற சம்பவங்களினால் அரசாங்கத்தினால் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ள நீதித்துறைச் சுதந்திரமும் அர்த்தமற்றதாக போய்விடக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி சம்பவங்களும், அச்சுறுத்தல்களும் தொடரும் பட்சத்தில் தொடர்ந்தும் பணிப்பகிஷ்கரிப்பு இடம்பெறும் என சட்டத்தரணிகள் தெரிவித்தனர்.

சட்டத்தரணிகளின் பணிப்பகிஷ்கரிப்பினால் நீதிமன்ற செயற்பாடுகள் நேற்று ஸ்தம்பிதம் அடைந்தன. இதேவேளை வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு போன்ற நீதிமன்றங்களின் சட்டத்தரணிகளும் நேற்று பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (50-238)

## கோட்டையைப் பார்வையிட குவியும் தென்பகுதி மக்கள்

யாழ்ப்பாணம், மே 04

குடாநாட்டின் புராதன வரலாற்றுச் சின்னமாக விளங்கும் யாழ். கோட்டையைப் பார்வையிட்டுச் செல்வதில் தென் பகுதியிலிருந்து வரும் சுற்றுலாப் பயணிகள் அதிக ஆர்வம் காட்டுவதாகத் தெரிகின்றது.

யாழ்ப்பாணத்துக்கு வருகை தரும் இந்தச் சுற்றுலாப் பயணிகள் முதலில் யாழ்.கோட்டையைப் பார்வையிட்டு அதனைப் புகைப்படம் எடுப்பதில் அதிக அக்கறை காட்டுகின்றனர். இதனைப் பார்வையிடுவதற்கு கடந்த சித்திரைப் புத்தாண்டு முதல் இராணுவத்தினரால் பொதுமக்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது தெரிந்ததே.

ஆனால் குடாநாட்டு மக்கள் இந்தக் கோட்டையைப் பார்வையிடுவதில் அதிக அக்கறை காட்டுவதில்லையெனவும் கூறப்படுகின்றது.

(க-224)

## மக்கள் சபைச் செயலாளர் பதவிக்கு மாவட்ட மட்டத்தில் நேர்முகத் தேர்வு

யாழ்ப்பாணம்,மே 4

மக்கள் சபை செயலாளர் பதவிகளுக்கு விரைவில் மாவட்டமட்டத்தில் நேர்முகத் தெரிவு இடம்பெறும்.

யாழ்.செயலகத்திற்கு ஆயிரத்து 420 பேரின் பெயர், அடையாள அட்டைகள் அடங்கியபட்டியல் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக பொருளாதார அமைச்சின் செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை- யாழ். மாவட்டத்தில் 440 கிராம அலுவலர் பிரிவுகள் உள்ள போதும் எத்தனை பேர் தெரிவாகுவர் எனத் தெரியவரவில்லை.

இப்பதவிக்கு 2720 பேர் விண்ணப்பித்த போதும், ஆய்வுக் கட்டுரை சமர்ப்பித்து அதில் தேர்வானவர்களுக்கு மட்டுமே மாவட்டமட்டத்தில் பகுதி, பகுதியாக நேர்முகத் தேர்வு இடம்பெறவுள்ளது.

நேர்முகத் தேர்வு தொடர்பான விவரங்களை யாழ். செயலகம் விரைவில் அறிவிக்கும் எனத் தெரியவருகின்றது. (04-302)

## மத்திய வங்கி சேமலாப நிதிப்பிரிவின் நடமாடும் சேவை யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணம், மே 4

இலங்கை மத்திய வங்கி ஊழியர் சேமலாப நிதிப்பிரிவின் இருநாள் நடமாடும் சேவை, எதிர்வரும் 19 ஆம், 20 ஆம் திகதிகளில் காலை 9 மணி முதல் மாலை 4 மணிவரை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது என யாழ். உதவித் தொழில் ஆணையாளர் க.கனகேஸ்வரன் அறிவித்துள்ளார்.

யாழ். மாவட்டத் தொழில் திணைக்களத்தின் அனுசரணையுடன் இடம்பெறவுள்ள இந்த நடமாடும் சேவையின் முதலாம் நாள் அமர்வில், ஊழியர் சேமலாப நிதி பிரச்சினை தொடர்பாகவும், அதனை எப்படித் தீர்த்தல் என்பது பற்றியும், ஊழியர் சேமலாப நிதியில் இலத்திரனியல் உபகரணப் பிரயோகம், பற்றியும் விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் யாழ். மாவட்ட தனியார்துறை தொழில் தருநர்களுக்கு நடத்தப்படவுள்ளன.

இரண்டாம் நாள் அமர்வின் போது ஊழியர் சேமலாபநிதி சம்பந்தமான பிரச்சினைகளுக்கான தீர்வுகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இந்த இரண்டு தினங்களும் நடைபெறவுள்ள நடமாடும் சேவைக்கு, யாழ். குடாநாட்டில் உள்ள 10 ஊழியர்களுக்கு மேல் பணியாற்றும் நிறுவனங்களின் தொழில் தருநர் அல்லது பிரதிநிதியும் கணனி அறிவுடைய இன்னொரு உத்தியோகத்தருமாக இருவர் அழைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை- இரண்டாம் நாள் நடமாடும் சேவைக்கு மத்திய வங்கிப் பதிவேடுகளில் பெயர், அடையாள அட்டை இலக்கம், ஊழியர் சேமலாப நிதி இலக்கம் முதலியவற்றில் வேறுபாடு உடையவர்களும், மத்திய வங்கி சம்பந்தமான ஏனைய பிரச்சினைகளையுடைய ஊழியர் சேமலாப நிதி அங்கத்தவர்களும் அழைக்கப்பட்டுள்ளனர்.

பிரச்சினைகளைத் தீர்க்க வரும் ஊழியர் சேமலாப நிதி அங்கத்தவர்கள் பிரச்சினை தீர்வுக்கான உரிய தொழில் தருநர்களின் உறுதிப்படுத்திய கடிதங்களையும், வேறு பொருத்தமான ஆவணங்களையும் சமர்ப்பித்து உரிய திருத்தங்களை மேற்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (50-14)

## கல்லுடைக்கும் தொழிலில் இளைஞர்கள் ஆர்வம்

யாழ்ப்பாணம், மே 4

தற்போது கற்களுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டை அடுத்து அத்தொழிலில் ஈடுபடும் தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதனை கைதடிப் பகுதியில் காணக்கூடியதாகவுள்ளது.

கட்டடங்களின் தேவைகள் அதிகரிப்பைத் தொடர்ந்து கற்களுக்கு மவுசு ஏற்பட்டுள்ளதனால் கைதடியின் பல பகுதிகளிலும் கல்லுடைக்கும் தொழிலில் இளைஞர்கள் பலர் ஆர்வத்துடன் ஈடுபட்டு வருகின்றார்கள். அவர்களால் சேகரிக்கப்படும் கற்களை கொள்வனவு செய்ய 'பெருந்தொகையான லொறிகள், உழவு இயந்திரங்கள் தினமும் கைதடிப் பிரதேசத்துக்கு படையெடுப்பதனையும் இதனால் இப்பகுதி இளைஞர்கள் பெரும் இலாமீட்டுவதனையும் அவதானிக்க முடிகின்றது. (50-288)

## யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராக அருந்தவநாதன்

யாழ்ப்பாணம்.மே 4

யாழ்.மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராக வி.கே.அருந்தவநாதன் நேற்று திங்கட்கிழமை நியமிக்கப்பட்டுள்ளார்.

வவுனியா கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராக இவர் இதுவரை காலமும் பணியாற்றி வந்தார்.

யாழ்.மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளராக இதுவரை காலமும் பணியாற்[illegible] பொ.சிவலிங்கம் திருகோண[illegible] இடமாற்றப்பட்டு[illegible]றும் திணைக்கள வட்டாரங்க[illegible] தெரிவித்[illegible]ன. (04-224)

### நாளை

| | |
|---|---|
| சித்திரை 22 | 05.05.2010 |
| | புதன்கிழமை |
| திதி | : ஸப்தமி |
| | மு.இ. 09.38 வரை |
| நட்சத்திரம் | : உத்தராடம் |
| | மு.ப. 11.36 வரை |
| [illegible] | : 06.26-[illegible] |
| [illegible] | : 11.56-02.22 |

## இந்திய கலாசார மையத்தின் 'அபிக்ஞான சகுந்தலம்' நாளை

யாழ்ப்பாணம்.மே 4

இந்திய கலாசார மையத்தின் ஏற்பாட்டில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள கலாசூரி அருந்ததி ஸ்ரீரங்கநாதனின் இயக்கத்திலான காளிதாசனின் அபிக்ஞான சகுந்தலம் என்னும் இசைநடன நாடக நிகழ்வு நாளை புதன்கிழமை யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் மாலை 5 மணிக்கு இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் துறைசார்ந்த கலைஞர்கள் மற்றும் ஆர்வலர்கள் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வுக்கு வருபவர்கள் கைப்பை மற்றும் ஏனைய பொருள்களைத் தம்வசம் கொண்டு வருவதனைத் தவிர்த்துக் கொள்ளுமாறும், கலந்து கொள்ள வருபவர்கள் மாலை 4.45 மணிக்கு முன்னதாக ஆசனத்தில் அமர்ந்து கொள்ளவேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கட்டணம் இன்றி இலவசமாக இடம்பெறும் இந்த நிகழ்வுக்கான அச்சு ஊடக அனுசரணையை உதயன் வழங்கு கின்றமை குறிப்பிடத்தக்கது. (50-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலையாள் தேவை

யாழ். நகரின் மத்தியில் புதிதாக ஆரம்பிக்கவுள்ள மூக்குக் கண்ணாடி நிறுவனத்திற்கு முன் அனுபவம் நிறைந்த பணியாளர் தேவை.

(ஆண்கள் விரும்பத்தக்கது.)

தொடர்புகளுக்கு : G. Sarwo
தொலைபேசி இல. : 0779363111

## பாராட்டி வாழ்த்துகிறோம்

யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராக சேவையாற்றி பதவிஉயர்வு பெற்று தலைமை அலுவலகத்துக்கு மாற்றலாகிச் செல்லும்

**திரு.பொ.சிவலிங்கம்**

அவர்களின் சேவையைப் பாராட்டி கௌரவிப்பதுடன், 01.05.2010ஆம் திகதி முதல் யாழ்.மாவட்ட கூ.அ.உ ஆணையாளராக பதவிப் பொறுப்புக்களை ஏற்றுள்ள

**திரு.வி.கே.அருந்தவநாதன்**

அவர்களை வரவேற்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம். அவர்களின் சேவையில் எமது பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் வளர்ச்சி மேலும் சிறப்படைய வாழ்த்துவோர்.

தெல்லிப்பழை பனை தென்னை வள
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ.து)
புகையிரதநிலையவீதி,
மல்லாகம்.
தொ.பே.இல.0213211351

பணிப்பாளர்கள்,
பணியாளர்கள்,
அங்கத்தவர்கள்.

(சி/567273)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை திருமதி வாசுகி தயானந்தன் அவர்களின் அன்புத் தாயார்

திருமதி **பத்மாதேவி பாலசுந்தரம்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/கனகரத்தினம் ம.ம.வித்தியாலயம்.

(97556)

## வடிகால்கள் இதுவரை புனரமைக்கப்படாததால் மக்கள் அசௌகரியம்

வண்ணை,மே04

யாழ்.பிரதான வீதியில் இருந்து கிளைவிடும் முதலாம்,2ஆம், 3ஆம் குறுக்கு வீதியில் அமைந்துள்ள வடிகால்கள் தூர்ந்துபோய் நீரோட்டம் தடைப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக பிரதான வீதிக்கு தெற்காக கடற்கரைப் பகுதியைச் சேர்ந்த வீதிகளிலேயே இன்னமும் வடிகால்கள் புனரமைக்கப்படாமல் இருந்து வருகின்றது.

அனர்த்தங்கள் ஓய்ந்து ஒருவருடத்தை அண்மித்தும் குடிமக்கள் பெரும் எண்ணிக்கையில் குடியேறியுள்ள இப்பகுதியில் வடிகால்கள் புனரமைக்கப்படாமையினால் கழிவு நீர் தேங்கி நிற்கின்றன.

மழை நேரங்களில் மழைநீர் கடலுக்குப் போக வழியின்மையால் குடியிருப்புக் காணிகளில் தேங்கி நின்று சொல்லொணா அசௌகரியங்களை ஏற்படுத்தி வருவதாகவும் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

(ஒ-160)

## Personal Class

தரம் 1 - A/L வரையான வகுப்பு மாணவர்களுக்கு English Personal Classஉம் Spoken with Grammar கற்க விரும்பும் மாணவர்களுக்கு வீடுகளில் வந்து கற்பிக்கப்படும். (அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டவை)
தொ.ப: K.K.S Road, Kokuvil East, Kokuvil.
T.P: 0778692979

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள 500xxxxதொடரிலக்கமுடைய Yamaha Mate - 50 மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. பார்வையிடும் நேரம் மாலை 5மணிக்குப் பின்.
இல.218, ஜேர்மனி வீதி, நல்லூர். தொ.பே. 0779008439

## தேவை

சிறிய டிங்கரிங் வேலைசெய்யத் தெரிந்தவர், பிஸ்கட் பொதி செய்பவர்களும் தேவை.
தொடர்புகளுக்கு:- இல.284, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No - 0778285872

## தவறிவிட்டது

மவுண் கார்மேல் வீதியைச் சேர்ந்த செ.பூமணி என்பவருடைய தே.அ.அ.இல 297870807x, ப.மரிய கொறற்றி-தே.அ.அ.இல 606551215v, ப.அ.டினேஷ் 893242570v, மற்றும் Spc I.C 0901035012 மற்றும் பெறுமதிமிக்க ஆவணங்களுடன் கைப்பை உட்பட 3பைகள் யாழிற்கும் கொடிகாமத்திற்கும் இடையில் A9வீதியில் 30.04.2010 அன்று தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.
0212225976, 0775018162.
13, மவுண் கார்மேல் வீதி, யாழ்ப்பாணம்.
(97564)

## கண்ணீர் அஞ்சலி



யாழ்.இந்து ஆரம்ப பாடசாலைக்கு விளையாட்டு மைதானம் அமைத்திட தமது காணியை மனம் விரும்பி விலைக்களித்த திருமதி ராஜேஸ்வரி யோகேஸ்வரன் அவர்களின் பாசமிகு தாயார்

**திருமதி தங்கரட்ணம் இராமச்சந்திரன்** அவர்கள் கனடாவில் சிவபதம் எய்திய செய்தி கேட்டு அவரது மூச்சும், பேச்சும் நிலைநின்ற மண்ணில் நின்று ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தித்து நிற்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அதிபர்,ஆசிரியர்கள்,மாணவர்கள்,
பாடசாலைச் சமூகம்.
யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை
(சி/567274)

## கண்ணீர் அஞ்சலி

### சுப்பிரமணியம் சோதிரூபன்

**(காவலாளர்,யாழ்ப்பாணம் கல்வியியற்கல்லூரி)**



எமது கல்வியியற் கல்லூரி ஆரம்பித்த காலம் தொடக்கம் காவலாளராக கடமை புரிந்த சு.சோதிரூபன் 02.05.2010ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை இறைபதம் அடைந்த செய்திகேட்டு எமது கல்லூரித்தாய் ஆழ்ந்த கவலை அடைகின்றாள். அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய கல்லூரி வித்தக விநாயகரை பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தேசிய கல்வியியற் கல்லூரிச் சமூகம்,
யாழ்ப்பாணம்.

(97526)

## முதலாம் ஆண்டு நினைவலைகள் / 10 ஆம் ஆண்டு நினைவலைகள்

பிறப்பு: 19.03.1941



இறப்பு: 14.05.2009

முத்தையா இரத்தினசிங்கம் (யோகா)
(உள்நாட்டு இறைவரித் திணைக்கள முன்னாள் உத்தியோகத்தர்)

பிறப்பு: 25.07.1975



இறப்பு: 21.10.2000

இரத்தினசிங்கம் நாதரூபன்

அணையாத தீபமே
எம்மை வாழ வைத்த தெய்வமே!!
சுண்ணம் இடிக்கவில்லை
சுமந்து சென்று எரிக்கவில்லை
பேரக் குழந்தைகளும்....!
பந்தம் பிடிக்கவில்லை
ஆண்டவன் விதியா
அரக்கனின் சதியா
ஐயகோ.....
ஓர் ஆண்டாகியும் இந்தத் துயர்
எங்களால் தாங்க முடியவில்லையே
ஆறுதல் சொல்ல யாரும் இல்லையே அப்பா

இன்றைய தினம் எங்கள் இல்லத்தில் நடைபெறவுள்ள ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்: இ.சுஜீவன்
17/34, பண்டாரக்குளம் லேன்,
நல்லூர் வடக்கு, நல்லூர்.
[97560]

**மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**


## மஹஜன சம்பத — அலுவலக முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2235
திகதி 2010.05.02

வெற்றி எழுத்து / வெற்றி எண்கள்: S 7 0 5 2 0 2

பரிசு அமைப்பு - வலமிருந்து இடமாக

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | S | 7 | 0 | 5 | 2 | 0 | 2 | ரூபா. 20,779,337/= | பரிசு | 01 |
| 1ம் பரிசுகள் | | 7 | 0 | 5 | 2 | 0 | 2 | ரூபா. 20,00,000/= | பரிசுகள் | - |
| 2ம் பரிசுகள் | | | 0 | 5 | 2 | 0 | 2 | ரூபா. 100,000/= | பரிசுகள் | 07 |
| 3ம் பரிசுகள் | | | | 5 | 2 | 0 | 2 | ரூபா. 10,000/= | பரிசுகள் | 62 |
| 4ம் பரிசுகள் | | | | | 2 | 0 | 2 | ரூபா. 1,000/= | பரிசுகள் | 571 |
| 5ம் பரிசுகள் | | | | | | 0 | 2 | ரூபா. 100/= | பரிசுகள் | 5967 |
| 6ம் பரிசுகள் | | | | | | | 2 | ரூபா. 20/= | பரிசுகள் | 58,286 |

பரிசு அமைப்பு - இடமிருந்து வலமாக

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7ம் பரிசுகள் | | 7 | 0 | 5 | 2 | 0 | | ரூபா. 10,000/= | பரிசுகள் | 05 |
| 8ம் பரிசுகள் | | 7 | 0 | 5 | 2 | | | ரூபா. 1,000/= | பரிசுகள் | 56 |
| 9ம் பரிசுகள் | | 7 | 0 | 5 | | | | ரூபா. 100/= | பரிசுகள் | 577 |
| 10ம் பரிசுகள் | | 7 | 0 | | | | | ரூபா. 50/= | பரிசுகள் | 5,854 |
| 11ம் பரிசுகள் | S | | | | | | | ரூபா. 20/= | பரிசுகள் | 23,419 |

அடுத்த வார சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூபா. 10,000,000.00

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூபா. 25,357,537.00
ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும் பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட், சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கும் வளமான நாட்டிற்கும்
தேசிய லொத்தர் சபை
கொழும்பு 03. தொலைபேசி: 2470662, 4607000 Hotline:2433631
முடிவுகளை அறிய www.nlb.lk


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி







கந்தசாமி சுபாஜினி (சுபா)
தோற்றம் 17.01.1986

கந்தசாமி லிந்துஜா (லிந்து)
தோற்றம் : 04.08.1991

மறைவு : 15.05.2009
திதி: ஷஷ்டி (04.05.2010)

பாசமாக பலரோடும் பண்பாக உறவாடிய
வண்ணமொழி முகங்கள் சொந்த இடம் திரும்பும் முன்னே
பார்த்திருந்தோர் பரிதவிக்க திசைமாறிச் சென்றதெங்கே?
இமைப்பொழுதில் சென்று ஓராண்டு ஆனதுவே ஓயவில்லை எம் துயரம்.

உம் பிரிவால் வாடும்
குடும்பத்தினர்.

புத்தூர் மேற்கு,
புண்ணியர் அடைப்பு, புத்தூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடல்வளத்தை அழித்து மீன் உற்பத்தியைப் பாதிக்கும் தொழில்களை உடனடியாக இனங்கண்டு நிறுத்துங்கள்

## யாழ்.அரச அதிபருக்கு கடற்றொழில் சமாசம் மகஜர்

யாழ்ப்பாணம், மே 4

யாழ்.மாவட்டத்தின் கடற்றொழிலாளர்கள் பரவலாகத் தொழில் செய்யும் கடற் பிரதேசங்கள் அனைத்திலும் கடல்வளங்களை அழித்து மீனினத்தின் உற்பத்தியை முற்றுமுழுதாகப் பாதிக்கும் தொழில்களை இனங்கண்டு உடன் நிறுத்த நடவடிக்கை எடுங்கள்.

இவ்வாறு, யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளத்தின் சார்பாக அதன் தலைவர் சி.தவரட்ணம் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபருக்கு அனுப்பி வைத்துள்ள மகஜரில் குறிப்பிட்டுள்ளார். அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

யாழ். மாவட்டத்தின் கடற்றொழிலாளர்கள் பரவலாகத் தொழில் செய்யும் கடற் பிரதேசங்கள் அனைத்திலும் ( மன்னார் கரையோரம், தீவகக்கடற்பரப்பு, யாழ். குடாக் கடல், வடகடல் நீள் பிரதேசம்) 2005 ஆம் ஆண்டு மார்கழி மாதத்துடன் தடை செய்யப்பட்டிருந்த இழுவைமடித் தொழில் தற்பொழுது மாவட்டத்தின் ஒரு பகுதியில் அத்துமீறி நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. மேற்படி தொழிலைத் தடுத்து மாற்றுத் தொழில் செய்வதற்கான உதவிகள் பணமாகவும், வலையாகவும் சுழற்சி முறைக்கடனாக, ஒரு படகிற்கு ஒரு லட்சம் ரூபா வீதமும்,ஒரு லட்சத்து 90 ஆயிரம் வீதமும் டிசெம்பர் மாதம் 2004 இல் அரசாங்க அதிபரால் மாவட்ட நிவாரணப் புனர்வாழ்வு அபிவிருத்தித் திட்டம் 2004 நிதியில் இருந்து வழங்கப்பட்டு மே மாதம் 2005 இருந்து முற்று முழுதாக இழு வைப்படகுத் தொழில் நிறுத்தப்பட்டிருந்தது.

துரதிஷ்டவசமாக 2009 இல் நடைபெற்ற மாநகர சபைத் தேர்தல் காலத்தில் மீண்டும் இத் தொழில் சட்ட விரோதமாக 2009 மே மாதம் 27 ஆம் திகதியியலிருந்து நடைமுறைப்படுத்த அனுமதிக்கப்பட்டது. இதன் காரணமாக மாவட்டத்தின் சகல சங்கங்களிலிருந்தும் கண்டனங்களும் வலைகளை இழந்தவர்களுடைய முறைப்பாடுகளும் மாவட்டத்தின் கடல் வளங்கள் முற்று முழுதாக அழிக்கப்படுகின்றன என்ற கடற்தொழிலாளர்களின் ஆதங்கமும் சம்மேளனத்திற்குப் பல பக்கங்களிலிருந்தும் கண்டனக் கடிதங்களாக வந்து கொண்டிருந்தன. இதன் காரணமாக கடந்த 12.02.2004 இலும், 06.04.2010 இலும் நடைபெற்ற சம்மேளனத்தின் நெறியாளர் குழுக் கூட்டத்தில் மேற்படி இழுவைப்படகுத் தொழிலை யாழ்.மாவட்டத்தின் எந்தக்கடல் பிரதேசத்திலும் நடைமுறைப்படுத்தக்கூடாது என்ற தீர்மானத்தினை ஏகமனதாக நிறைவேற்றியுள்ளது என்பதைத் தங்களின் கவனத்திற்கு அறியத்தருகின்றோம். இத்தீர்மானம் 2010 ஆம் ஆண்டு சித்தரை மாதம் 30ஆம் திகதியுடன் இத்தடை நடைமுறைக்கு வருமென்றும் முடிவு செய்யப்பட்டது.

கடந்த போர்க்காலச் சூழ்நிலையில் பகல் காலத்தொழில் நடைமுறையிலிருந்த வேளையில் மீன்களைப் பகல் நேரத்தில் பிடிப்பதற்கேதுவாகத் தங்கூசி வலை பாவிக்கப்பட்டு வந்தன. மேற்படி தங்கூசி வலைகள் மீனினத்தைப் பகல் நேரத்தில் பிடிப்பதற்கு உதவியிருந்தாலும், மீனினத்தின் பெருக்கத்தைத் தடுப்பதற்கும், இனத்தை அழிப்பதற்கும் இது ஏதுவாகியிருந்தது. எனவே தற்போது இரவு நேரக் கடற்றறொழில் செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதினால் தங்கூசி வலை பாவிப்பது 2010ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதியுடன் நிறுத்தவேண்டுமெனவும் ஒருமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

ஆகவே கடற்றொழில் வளங்களைப் பாதுகாத்து கடற்றொழிலாளர்களின் வருமானத்தைப் பெருக்குவதற்கும், முன்னேற்பாடாக எடுக்கப்பட்ட மேற்படி இரண்டு தீர்மானங்களையும் தகுந்த முறையில் கடற்றொழிலாளர் மத்தியில் நடைமுறைப்படுத்தி உதவுமாறும் பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்-என்றுள்ளது. யாழ்ப்பாணம் கடற்றொழில் ரீதியில் வளத்துறை திணைக்கள உதவிப் பணிப்பாளருக்கு ஏற்கனவே அனுப்பி வைத்துள்ள இந்த மகஜர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் அனுப்பிவைக்கப்படவுள்ளதாகத் தெரியவருகிறது. (50-14)

# கட்டாக்காலி மாடுகளைப் பிடிக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம். மே 4

தென்மராட்சி தெற்குப் பிரதேசத்தில் கட்டாக்காலிகளாக அலையும் மாடுகளைப் பிடிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அப்பகுதிக் கமக்கார அமைப்புகளும் சாவகச்சேரி கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகத்தினரும் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மாடுகளைப் பிடிப்பதற்கென தனங்கிளப்புப் பகுதியில் பட்டிகள் அமைக்கப்பட்டு வருவதாகவும், பிடிக்கப்படும் மாடுகளை வளர்ப்பு மாடுகளைக மாற்றி குறியுள்ள மாடுகள் உரியவர்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. இத் திட்டத்திற்கென 5 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (50-207)

# மானிப்பாயில் சைக்கிள் திருட்டுக்கள் அதிகரிப்பு

இரவல் சைக்கிளில் நோயாளியை ஏற்றிக்கொண்டு மானிப்பாய் அரசினர் வைத்தியசாலைக்குச் சென்ற பெண்ணின் சைக்கிள் வண்டி திருடப்பட்ட பரிதாபச் சம்பவம் அண்மையில் நிகழ்ந்துள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை நவாலியைச் சேர்ந்த பெண் ஒருவர் கடுமையாக நோய் வாய்ப்பட்டிருந்த தனது தாயாரை அயல் வீட்டில் இரவலாக வாங்கிய சைக்கிள் வண்டியில் மானிப்பாய் அரசினர் வைத்தியசாலைக்கு ஏற்றிச் சென்றுள்ளார். சிகிச்சை முடிந்த பின்னர் வீடு செல்வதற்காக வைத்தியசாலை வளவில் நிறுத்தப்பட்டிருந்த சைக்கிளைத் தேடியபோதுதான் அது திருடப்பட்ட விடயம் அவருக்குத் தெரியவந்தது. இதேவேளை கடந்தவாரம் மானிப்பாய் இலங்கை வங்கிக் கிளைக்கு முன்பாக நிறுத்தப்பட்டிருந்த மூன்று சைக்கிள் வண்டிகள் ஒரே நாளில் திருடப்பட்டுள்ளன. (க-100)

# பாதைமாறிச் சேவையில் ஈடுபடும் பஸ்களால் பயணிகள் பெரும் சிரமம்

யாழ்ப்பாணம், மே4

யாழ்ப்பாணத்திலிருந்து வெளி மாவட்டங்களுக்கு இடம்பெற்றுவரும் பஸ் சேவையில் ஈடுபடும் பஸ்கள் பாதை மாறி சேவையில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கிளிநொச்சி, வவுனியா, மன்னார், திருகோணமலை, கொழும்பு, கண்டி, கல்முனை, அக்கரைப்பற்று ஆகிய இடங்களுக்குச் சேவையிலீடுபடும் இ.போ.ச மற்றும் தனியார் பஸ்களே இவ்வாறு பாதை மாறிச் சேவையில் ஈடுபடுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ். மத்திய பஸ் நிலையத்திலிருந்து குறித்த வெளியிடங்களுக்குச் செல்லும் பஸ்கள் ஆஸ்பத்திரி வீதி, வேம்படிச் சந்தி, பிரதான வீதி ஊடாக கண்டி வீதியில் செல்ல வேண்டும். அதேபோல வெளியிடங்களிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வரும் பஸ்கள் கண்டி வீதி, பிரதான வீதி, பொது நூலக வீதி, மணிக்கூட்டுக் கோபுரம் ஊடாக ஆஸ்பத்திரி வீதி சென்று பஸ் நிலையத்தை அடையவேண்டும்.

வெளியிடங்களுக்குச் செல்லவும், அங்கிருந்து மீண்டும் யாழ்ப்பாணம் வரவும் இ.போ.ச.வினால் இப்பாதைகளே நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

ஆனால் நிர்ணயிக்கப்பட்ட இப்பாதையடுத்து வெளியிடங்களுக்குச் செல்லும் பஸ்கள் யாழ்.மத்திய பஸ் நிலையத்திலிருந்து ஆஸ்பத்திரி வீதி ஊடாகச் சென்று நேடியாகக் கண்டி வீதியை அடைந்து செல்கின்றன. இதேபோல வெளியிடங்களிலிருந்து யாழ்ப்பாணம் வரும் பஸ்களும் கண்டி வீதி வழியாக கண்டி வீதி வழியாக ஆஸ்பத்திரி வீதி ஊடாக யாழ்.மத்திய பஸ் நிலையத்தை வந்தடைகின்றன.

இது இ.போ.சவின் போக்குவரத்து ஒழுங்குக்கு உட்பட்டதல்ல எனப் பயணிகள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

எனவே வெளியிடங்களிலிருந்து யாழ்ப்பாணத்திற்கும் யாழ்ப்பாணத்திலிருந்து வெளியிடங்களுக்கும் சேவையில் ஈடுபடும் இ.போ.ச. மற்றும் தனியார் பஸ்கள் நகரப் பகுதியில் போக்குவரத்து ஒழுங்குக்கு அமைய பஸ் சேவைகளை மேற்கொள்ளவேண்டும் எனப் பயணிகள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. (50-236)




## கொமர்ஷல் வங்கியினால் ஆரம்பிக்கப்பட்ட

# 'அருணலு' சேமிப்புத் திட்டத்தில் அதிகளவான தென்மராட்சி மாணவர்

யாழ்ப்பாணம், மே 4

கொமர்ஷல் வங்கியினால் ஆரம்பிக்கப்பட்ட ஐந்தாம்தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெறும் மாணவர்களுக்கான 'அருணலு' சேமிப்புத் திட்டத்தில் தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த மாணவர்களே அதிகளவில் பரிசில் பெற்றுள்ளனர்.

கடந்த நான்கு வருடத்தில் சாவகச்சேரிக் கிளையில் 120 மாணவர்கள் இத் திட்டத்தில் பயன் பெற்றுள்ளமை இப் பகுதி மாணவர்களின் கல்வித் திறனுக்கும் சேமிப்புக்கும் எடுத்துக்காட்டாக உள்ளதையிட்டு பெருமிதம் கொள்கிறேன் என சாவகச்சேரிக் கிளையில் நடைபெற்ற 'அருணலு' திட்டத்தில் பரிசில்கள் வழங்கும் நிகழ்வில் உரையாற்றிய கிளை முகாமையாளர் எஸ்.வி.குருபாதம் கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்:-

மாணவர்களை கல்வியில் மட்டு மல்ல சேமிப்பிலும் ஊக்குவிக்கும் திறன் தென்மராட்சிப் பிரதேச மக்களிடம் உள்ளது. இதனால் அருணலு, இசுறு போன்ற சிறுவர் சேமிப்புத் திட்டத்தில் பெருமளவு மாணவர்கள் எமது வங்கி யில் இணைந்துள்ளனர்.

கடந்த இரண்டு வருடங்களாக புலமைப் பரிசில் பரீட்சையில் தேசிய மட்டத்தில் முதலிடத்தினைப் பெற்ற இரு மாணவர்களும் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்பது மாவட்ட மக்களுக்குக் கிடைத்த பெருமையாகும்- என்றார். (50-207)

# அதி உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசங்களில் கண்ணிவெடி அகற்றும் பணிகள் மும்முரம்

## அப்பகுதிகளில் விரைவில் மக்கள் குடியமர்த்தப்படுவர் என்கிறார் தளபதி

யாழ்ப்பாணம்,மே 4

அதிஉயர் பாதுகாப்பு வலயப் பிரதேசங்களான வலி.வடக்கு, வடமராட்சி கிழக்கு ஆகிய பகுதிகளில் கண்ணிவெடி அகற்றும் பணிகள் இடம்பெறுகின்றன.

கண்ணிவெடி அகற்றும் பணிகள் நிறைவடைந்ததும் அந்த இடங்களில் பொது மக்கள் மீளக்குடியமர அனுமதியளிக்கப்படுவர்.

யாழ்.படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க அத்தகவலைத் தெரிவித்தார்.

வலி.வடக்குப் பிரதேசத்தில் 'ஹலோ ரஸ்ட்' நிறுவனமும் வடமராட்சி கிழக்கு, வெற்றிலைக்கேணிப் பிரதேசத்தில் டெனிஸ் கண்ணிவெடி அகற்றும் நிறுவனத்தினாலும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு முழு வீச்சில் நடைபெற்று வருகின்றன.

கண்ணிவெடிகள் அகற்றப்பட்டு அபாயமற்ற பிரதேசம் என உறுதிப்படுத்தப்பட்டதும் அந்த இடங்களில் மக்கள் மீள் குடியமர்த்தப்படுவர்.இது தொடர்பாக யாழ்.அரச அதிபர் கே.கணேஸுடன் தொடர்ந்து கலந்துரையாடி வருகின்றேன். மீள் குடியமர்த்தப்படவிருக்கும் மக்களின் விவரங்களைப் பரிசீலனை செய்யும் பணி இடம்பெறுகின்றது-என்றார் அவர். (50-1)



பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் பொதுச்சந்தை அப்பகுதிப் பொதுமக்கள் மீளக்குடியமர்ந்த பின்னர் துரித கதியில் நிர்மாணிக்கப்பட்டு மக்கள் பாவனைக்கெனத் திறந்து வைக்கும் நிகழ்வு கடந்த மாதம் 30 ஆம் திகதி இடம்பெற்றது. அதன்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

இந்த நிகழ்வில், பளை நகர் கிராம அலுவலர் சி.புவனராஜா மங்கள விளக்கேற்றுவதனையும், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் செல்வி ரி.உமா வைபவ ரீதியாக நாடாவெட்டிப் பொதுச் சந்தையைத் திறந்து வைப்பதனையும், பச்சிலைப்பள்ளி பிரதேச சபைச் செயலாளர் சி.சிவப்பிரகாசம் பொதுச் சந்தை பெயர்ப் பலகையைத் திரைநீக்கம் செய்து வைப்பதனையும், உதவி ஆணையாளர் செல்வி ரி.உமா பொதுச்சந்தையின் வியாபார நடவடிக்கைகளை ஆரம்பித்து வைப்பதனையும் படங்களில் காணலாம்.

[50]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கை மின்சாரசபை வடமாகாண ஊழியர் நலன்புரி மற்றும் விளையாட்டுச்சங்கத்தின் 'மின்ஒளி' நூல் வெளியீட்டு விழா அண்மையில் இடம்பெற்றது.
இதில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட இலங்கை மின்சாரசபையின் வடபிராந்திய பிரதிப் பொதுமுகாமையாளர் இ.முத்துரட்ணானந்தத்திடமிருந்து ஓய்வுபெற்ற மின் பொறியியலாளர் வி.வேலுப்பிள்ளை சிறப்புப் பிரதியைப் பெறுவதையும், இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட ஓய்வுபெற்ற மேலதிகப்பொது முகாமையாளர் வே.இராஜேந்திரனுக்கு நினைவுக் கேடயம் ஒன்றைச் சங்கத்தின் தலைவர் சி.குமாரலிங்கம் வழங்குவதையும், இந்தநிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (50)


## அரியவாய்ப்பு அருமையான சந்தர்ப்பம்

கப்பலில் வேலை செய்வதற்கு தேவையான (CDC) சான்றிதழை மிக எளிதான முறையில் மிகக் குறைந்த கட்டணத்தில் 30 நாள்களில் Steward தரத்தில் பெற்றுக்கொள்ளவேண்டிய பயிற்சிகளை வழங்குவதற்கு உங்களுக்காக திருகோணமலையில் திறக்கப்பட்டுள்ளது.

***Lanka Academy of Technological Studies (Private) Ltd.***

பயிலவிரும்புவோர் உடனடியாக பதிவுகளை மேற்கொள்ளவும்.



தொடர்புகளுக்கு:
இல.28 லோவர் வீதி,
உவர்மலை,
திருகோணமலை.
தொ.பேசி இல:
026 2224521,
0714157002,
0774659362.


## 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்
21✱01✱1920

மறைவு
04✱04✱2010

### அமரர் கதிர்காமு பஞ்சரத்தினம்

உழைப்பினால் உயர்ந்திட்ட உன்னத மனிதனாக
ஊர்வியக்க ஐவருக்காய் உயர்ந்திட்ட அப்பாவே
களைப்பின்றி காணியோடு கல்வீடும் தந்தெமக்கு
காசினியில் கௌரவமாய் தொழிலும் காட்டி
சளைக்காமல் தொழில்திறனை ஊரார்க்கீந்து
செய்தொழிலில் போமனென புகழும் பெற்றாய்
நுழைவாயில் சாலையிலே கைவண்ணச் சித்திரங்கள்
நின் நினைவை எந்நாளும் நினைக்க வைத்தாய்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

குடும்பத்தினர்.

இராசலஷ்மி வாசம்,
வதிரி.

(92243)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 15 ✱ 01 ✱ 1954



மறைவு 15 ✱ 05 ✱ 2009



தோற்றம் 26 ✱ 06 ✱ 1982

நாகமுத்து தங்கம்மா    செல்லமுத்து இதயரஞ்சன் (ரஞ்சன்)

திதி: ஷஷ்டி (04.05.2010)

ஆண்டொன்று சென்றாலும்ஆறாது எம் துயரம்
எம் குடும்பத்திற்கு ஒளியூட்டிய - எம்
குல விளக்குகளின் ஆன்மா சாந்தியடைய
எல்லாம் வல்லனை இறைஞ்சுகின்றோம் நாம்

புத்தூர் கிழக்கு,
ஊறணி, புத்தூர்.

(97548)

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

## சுகாதாரத்துறைக் குழுக் கூட்டம்

சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் இயங்கும் வைத்திய நிறுவனங்களுக்கும், அரச சார்பற்ற நிறுவனங்களுக்குமான மாதாந்த மாவட்ட கண்காணிப்புக்குழுக் கூட்டம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது என யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (204)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 11 ★ 01 ★ 1949



மறைவு 04 ★ 04 ★ 2010

அமரர்

### செ. அ. தேவச்சந்திரன் B.Com (Hons)

(ஓய்வுபெற்ற அதிபர், சமாதான நீதிவான்)

'மக்களாய்ப் பெற்றெம்மை மகிழ்வோடு
வளர்த்தெடுத்து தக்க கல்வி மிகவூட்டி நல்வாழ்வு நமக் கூட்டி
மிக்கவராய் நாமிருக்க தனிவழி நீ சென்றனையோ
எக்காலமு னைக்காண்போம் வாராயோ தெய்வமே'

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய் எங்கள் வாழ்வின் வழிகாட்டியாய் திகழ்ந்து 04.04.2010 இல் சிவபதமடைந்த எங்கள் பாசமிகு தந்தையின் மறைவுச் செய்திகேட்டு ஓடோடி வந்து பலவகையிலும் தோளோடுதோள் நின்று எங்கள் துயரத்தில் பங்குகொண்ட உற்றார், உறவினர் நண்பர்கள் மற்றும் அயலவர்களுக்கும் தொலைபேசி, மின்னஞ்சல் மூலம் தங்கள் அனுதாபங்களைத் தெரிவித்தோருக்கும் அஞ்சலியுரையாற்றிய அறிஞர் பெருமக்களுக்கும் பிரசுரங்கள், பத்திரிகை மூலம் அஞ்சலி செலுத்தியோருக்கும் மற்றும் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டோருக்கும் எம் இதயங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நாளை (05.05.2010) புதன்கிழமை முற்பகல்11.30 மணியளவில் நெல்லை முருகன் திருமண மண்டபத்தில் (நெல்லியடி) நடைபெறவுள்ள அந்தியேட்டி மற்றும் மதிய போசன நிகழ்வில் தங்கள் குடும்ப சகிதம் பங்குபற்றுமாறு பணிவுடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

பிரதான வீதி,
நெல்லியடி, கரவெட்டி.

குடும்பத்தினர்.
தொ.பே: 021 226 3169, 021 321 9597

(சி/567271)

## நெஞ்சைவிட்டகலா ஓராண்டு நினைவலைகள்



| அமரர் பஞ்சலிங்கம் கேதீஸ்வரி | செல்வன் பஞ்சலிங்கம் குறிஞ்சிமாறன். | அமரர் இராமலிங்கம் தியாகலிங்கம் | அமரர் தியாகலிங்கம் ரஞ்சினி |
|---|---|---|---|
| அன்னை மடியில்: 05.10.1976 | 15.07.2003 | 29.11.1971 | 12.11.1973 |

ஆண்டவன் அணைப்பில் : 16.04.2009

எமது அன்புத் தெய்வங்களான இ.தியாகலிங்கம், தி.ரஞ்சினி ஆகியோரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை மஞ்சத்தடி இணுவிலிலும் ப.கேதீஸ்வரி, ப.குறிஞ்சிமாறன் ஆகியோரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை 4 ஆம் வட்டாரம், புங்குடுதீவிலும் நாளை (05.05.2010) புதன்கிழமை நடைபெறும். இந்த நிகழ்வுகளிலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மஞ்சத்தடி,
இணுவில்.

4 ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு.

இ.பஞ்சலிங்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'டிமோ' மோட்டார் வாகன தொழில்நுட்ப பயிற்சி நிலையத் திறப்பு விழா நிகழ்வு நேற்று யாழ்.ஸ்ரான்லி வீதியில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.
இந்த நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் கானத் பண்டிதகே, யாழ்.கிளை முகாமையாளர் வி.சதீஸ் ஆகியோர் மங்கள விளக்கேற்றுவதனை முதல் இருபடங்களிலும், பயிற்சி நிலையத்தின் தலைவர் றஞ்சித் பண்டிதகே வைபவரீதியாக நாடாவை வெட்டி நிலையத்தை திறந்து வைப்பதை மூன்றாவது படத்திலும், மோட்டார் வாகன தொழில்நுட்பசாதனத்தை விருந்தினர்கள் பார்வையிடுவதனையும், நிகழ்வில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரையும் அடுத்துள்ள இருபடங்களில் காணலாம். (படங்கள்:கரன்)

# வாகனத் தொழில் நுட்பத்தில் முதல்தரப் பயிற்சியை யாழ்.மாவட்டத்தில் 'டிமோ' நிறுவனம் வழங்கவுள்ளது

## திறப்பு விழாவில் அதன் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,மே 4

உலகின் பல பாகங்களிலும் வேலை வாய்ப்பைப் பெற்றுக்கொள்ளும் வகையில் மோட்டார் வாகன தொழில்நுட்பத்தில் முதல்தரமான பயிற்சியை இளம் சமூகத்திற்கு வழங்கி வருகின்றோம். அந்தச் சேவையை தற்போது யாழ்ப்பாண மாவட்டத்திலும் வழங்க முன்வந்திருக்கிறோம் என 'டிமோ' மோட்டார் வாகன தொழில்நுட்ப பயிற்சி நிலையத் தலைவர் றஞ்சித் பண்டிதகே தெரிவித்தார்.

அந்த நிறுவனத்தின் யாழ்.மாவட்டத்துக்கான பயிற்சி நிலையத்தின் திறப்பு விழா யாழ்.ஸ்ரான்லி வீதியில் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரைநிகழ்த்துகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

'டிமோ' நிறுவனம் உலகத்தில் முதல் தரமான நிறுவனமாகும். அத்துடன் முதல் தரமான பயிற்சியையும் நாம் வழங்கி வருகின்றோம். டாட்டா, பொஸ்கோ உள்ளிட்ட உலகத்தின் பிரபல நிறுவனங்களுடன் அதிக தொடர்புகளைக் கொண்டுள்ளது எமது நிறுவனம்.

இரண்டு வருட பயிற்சியை வழங்கும் எமது நிறுவனத்திற்கு ஆயிரக்கணக்கான விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறுகின்றன. 16பேரை மட்டுமே தெரிவுசெய்து அவர்களுக்குப் பயிற்சிகள் வழங்குகின்றோம். ஆங்கிலத்திலும் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. இந்த வாய்ப்பு யாழ்ப்பாண மக்களுக்கும் கிடைத்துள்ளது. மிகப்பிந்திய தொழில்நுட்பப்பயிற்சிகள் வழங்கப்படும். சிறப்பாகப் பூர்த்தி செய்யும் மாணவர்களில் எட்டுப் பேருக்கு கொழும்பிலுள்ள தலைமைப் பயிற்சி நிலையத்தில் நடத்தப்படும் பயிற்சி நெறியைத் தொடர அனுமதி வழங்கப்படும். அது மட்டுமன்றி உலக நாடுகளில் வேலை வாய்ப்பைப் பெறுவதற்கும் உதவிவருகின்றோம். எமது நிறுவனத்தின் பணியாளர்கள் அனைவரையும் குடும்ப உறுப்பினராக மதித்து சம உரிமை வழங்கி வருகிறோம்- என்றார்.

இந்த நிகழ்வில் பயிற்சிகளைத் தொடரவிருக்கும் மாணவர்கள், பெற்றோர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். (50-14)

# பற்றிமா திருத்தலத்தின் வருடாந்தப் பெருவிழா

யாழ்ப்பாணம்,மே 4

பண்டத்தரிப்பு பற்றிமா திருத்தலத்தின் வருடாந்தப் பெருவிழா இன்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி எதிர்வரும் 13ஆம் திகதி வியாழக்கிழமை வரை நடைபெறவுள்ளது.

திருவிழாவுக்கான நவநாள் வழிபாடுகள் தினமும் மாலை 4.30 மணிக்கு ஆரம்பமாகும்.

13ஆம் திகதி திருவிழாவன்று முதல் திருப்பலி காலை 6 மணிக்கும், திருநாள் திருப்பலி காலை 7.30 மணிக்கும், நோயாளர்களுக்கான திருப்பலி நண்பகல் 12 மணிக்கும், மாலைத் திருப்பலி மாலை 4 மணிக்கும் ஒப்புக்கொடுக்கப்படும் என ஆலய பரிபாலகர் அருட்பணி ம.யேசுரட்ணம் அறிவித்துள்ளார். (50-112)

# 'ஹவந்தீஷ்' இன வாழைச் செய்கையில் குடாநாட்டு விவசாயிகள் ஆர்வம்

அண்மையில் யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெற்ற சர்வதேச வர்த்தகக் கண்காட்சியில் 'ஹவந்தீஷ்' என்னும் புதியரக வாழைக் குட்டிகள் அறிமுகம்செய்து வைக்கப்பட்டன. முதல் நாளிலேயே அவை விற்றுத் தீர்ந்துவிட்டன. இந்த இன வாழைகளிலிருந்து பெறப்படும் வாழைப்பழங்கள் மிகவும் சுவையுள்ளனவாகக் காணப்படுவதால் சர்வதேச சந்தைகளில் இவற்றுக்கு நல்ல மதிப்பு உண்டு. அத்துடன் அதிக விலைக்கும் விற்கலாம். ஆர்வமுள்ள விவசாயிகள் தென் பகுதியிலுள்ள விவசாய விதைபொருள் விற்பனையாளர்களுடன் தொடர்புகொண்டு இந்த இன வாழைக்குட்டிகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

வவுனியா மற்றும் வன்னிப் பெருநிலப்பரப்பிலிருந்து குடாநாட்டுக்கு வரும் சிறு வியாபாரிகள் இங்குள்ள வாழைச் செய்கையாளர்களிடம் வாழைக் குலைகளை நேரடியாகவே கொள்வனவு செய்வதை அவதானிக்க முடிகிறது.

அத்துடன் தென்பகுதியிலிருந்து பொருள்களை ஏற்றிவரும் வாகனங்கள் திரும்பிச் செல்லும்போது வாழைக்குலைகளை ஏற்றிச்செல்கின்றன. இதனால் வாழைச் செய்கையாளர்கள் நல்ல விலையைப் பெறமுடிகின்றது. (க-121)

# புங்குடுதீவுக்கான மின்விநியோகத்தை விஸ்தரிக்குமாறு மக்கள் கோரிக்கை

புங்குடுதீவு,மே 4

புங்குடுதீவுக்கான மின்சார விநியோகத்தை இதுவரை மின்சாரம் வழங்கப்படாதிருக்கும் இடங்களுக்கும் விஸ்தரிக்குமாறு இப்பகுதி மக்கள் கோரியுள்ளனர்.

தற்போது இப்பிரதேசத்தின் ஆலடி, மண்காடு, ஆஸ்பத்திரி, பெருங்காடு போன்ற பகுதிகளுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவு மின்சாரம் குறிப்பிட்ட நேரங்களில் வழங்கப்பட்டு வருகின்றது. ஆனால் மடத்துவெளி, வல்லன், இறுப்பிட்டி, ஊரதீவு போன்ற பகுதிகளில் மின்சார வசதியின்றி தொடர்ந்து இருளில் மூழ்கியுள்ளன. மேலும் இந்தப் பிரதேசத்தில் பல இந்து ஆலயங்கள் உள்ள போதிலும் அவை கூட மின்னொளியின்றி இருட்டில் மறைந்திருப்பது கண்டு இந்துக்கள் வேதனையடைகின்றனர்.

எனவே பாகுபாடின்றி சகல பகுதிகளுக்கும் மின்சாரத்தை வழங்குவதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அரசாங்க அதிபர், இலங்கை மின்சார சபையினர் ஆகியோர் ஆவன செய்யுமாறு இந்தப் பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-188)

# தொடர்ந்து மூடப்பட்ட நிலையில் வேலணை சனசமூக நிலையம்

புங்குடுதீவு,மே 4

வேலணை, பள்ளம்புலம் கிராமத்தில் அமைந்துள்ள கவியரசு சனசமூக நிலையம் தொடர்ந்தும் பூட்டப்பட்ட நிலையிலேயே காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சரவணை கிழக்கு, வேலணை பள்ளம்புலம் கிராமத்தில் அமைந்துள்ளது கவியரசு சனசமூக நிலையம். இந்த நிலையம் கடந்த 20 வருடங்களாக இயங்கவில்லை. இதனை இயங்க வைப்பதற்கான முயற்சிகள் இந்த வருட ஆரம்பத்தில் மேற்கொள்ளப்பட்டு புதிய நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது. ஆனால் மாதங்கள் பல கடந்துவிட்ட நிலையிலும் இந்த நிலையம் தொடர்ந்தும் பூட்டிய நிலையிலேயே காணப்படுகின்றது.

இதனால் சனசமூக நிலையத்தைச் சூழவுள்ள மக்கள் பத்திரிகைகளைக்கூட வாசிக்க முடியாத நிலையில் உள்ளனர். இந்த நிலையத்துக்கென நாளாந்தம் புதினப் பத்திரிகைகள் கொள்வனவு செய்யப்படுகின்ற போதிலும் அவற்றிக்கு என்ன நடக்கின்றது என்பதே தெரியவில்லை.

எனவே மேற்படி சனசமூக நிலையத்தை இயங்கச் செய்து பொதுமக்கள் நாளாந்தம் பத்திரிகைகளையாவது வாசிப்பதற்கு ஆவன செய்யுமாறு இக்கிராம மக்கள் வேலணை பிரதேச சபையினரைக் கோரியுள்ளனர். (க-188)

# அடையாள அட்டைகளை பெறுவதில் முதியோர் ஆர்வம்

நாவற்குழி,மே 4

யாழ்.மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்களில் முதியோர் அடையாள அட்டைகளைப் பெறுவதில் முதியவர்கள் அதிக அக்கறை காட்டுவதை அவதானிக்க முடிகின்றது.

ஏற்கனவே 1972 ஆம், 1973 ஆம் ஆண்டுகளில் தேசிய அடையாள அட்டை வழங்கப்பட்டபோது விண்ணப்பத்தாரிகளின் வயதை கிராமசேவையாளர்களே உறுதிப்படுதியிருந்தனர். அப்போது தேசிய அடையாள அட்டைகளைப் பெற்றவர்கள் இப்போது முதியோர் அடையாள அட்டை களைப் பெறுவதில் ஆர்வம் காட்டி வருகின்றனர். இதற்கு முக்கிய காரணியாகக் கருதப்படுவது இவர்கள் ஏற்கனவே பெற்றுக்கொண்ட தேசிய அடையாள அட்டைகளைப் புதுப்பித்தலில் ஏற்படும் சிரமங்களே. அதிகார கையளிப்பின் மூலமாக பிரதேச செயலர்கள் முதியோர் அடையாள அட்டைகளை விநியோகிக்கும் பொறுப்புவாய்ந்த அதிகாரிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர். இதனால் இந்த அடையாள அட்டைகளை இலகுவாகப் பெறமுடிகின்றது.

கோப்பாய் பிரதேச செயலர் கடந்த இருவருடங்களில் 3ஆயிரத்து 500 முதியோர் அடையாள அட்டைகளை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-121)




# வேம்படி மாணவி தேசிய மட்டத்துக்கு



யாழ்ப்பாணம்,மே 4

யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை மாணவி செல்வி நிஜானி குமரேசமூர்த்தி மாகாண மட்டத்தில் இடம்பெற்ற ஆங்கில தொடுத்தெழுதுதல் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்று தேசிய மட்டப் போட்டிக்கு தெரிவாகியுள்ளார். (50-302)

# புனரமைக்கப்படும் இரணைமடுக்குளம்

யாழ்ப்பாணம்,மே 4

யாழ்.குடாநாட்டுக்கு குடிதண்ணீர் முழுமையாக வழங்கும் பொருட்டு இரணைமடுக் குளத்தின் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

யாழ்.குடாநாட்டு மக்களின் குடிதண்ணீர் தட்டுப்பாட்டை நீக்கும் பொருட்டு இரணைமடுக் குளத்திலிருந்து குடிதண்ணீர் வழங்குவதற்கான ஏற்பாடுகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதன் முதற் கட்டமாக ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் இரணைமடுக் குளத்தின் புனரமைப்புப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

குளத்திலிருந்து பெரிய குழாய்கள் மூலம் குடிதண்ணீரை விரைவாக யாழ்ப்பாணம் கொண்டு வருவதற்கான ஏற்பாடுகளை தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச்சபை மேற்கொண்டுள்ளது. (க-224)

# பண்ணைப்பாலம் புனரமைப்பு ஆரம்பம்



நல்லூர்,மே 4

யாழ்ப்பாணத்தையும், தீவுப் பகுதியையும் இணைக்கும் பண்ணைப்பால வழித்தடத்தை திருத்தியமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

முதலில் பண்ணையிலிருந்து ஒரு கிலோமீற்றர் தூரத்திற்கு இந்தப் பணிகள் முன்னெடுக்கப்படும். மீதி வேலைகள் ஓகஸ்ட், செப்ரெம்பர் மாதங்களுக்கிடையில் பூர்த்தியாகி விடுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையில் இந்த வீதியை அகலமாக்கும் வேலைகளும் தற்போது நடைபெற்று வருகின்றன. (க-111)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழகத்தில் சிகிச்சை பெற ஏற்பாடு செய்து தாருங்கள்

## முதல்வருக்கு பிரபாவின் தாயார் கடிதம்

கொழும்பு,மே4

தமிழகத்திற்கு வந்து சிகிச்சை பெறுவதற்கு ஏற்பாடு செய்து தருமாறு தமிழக முதலமைச்சர் கருணாநிதிக்கு விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் தாயார் பார்வதி அம்மாள் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து தமிழக முதல்வர் கருணாநிதிக்கு பார்வதி அம்மாள் ஒரு கடிதம் எழுதியுள்ளார். அதன் விவரம் வருமாறு -

நான் நீண்டகாலமாக பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டு வலது காலும் கையும் செயலற்ற நிலையில் இருந்து வருகிறேன். நான் தமிழ்நாட்டில் இருந்த காலத்தில் முசிறியிலுள்ள டாக்டர் ராஜேந்திரனிடம் வைத்தியம் பெற்று வந்தேன். ஆனால் 2003 ஆம் ஆண்டு மே மாதம் இலங்கைக்கு சென்றபடியால் தொடர்ந்து வைத்தியம் செய்ய முடியாமல் போய்விட்டது. வன்னி



யிலும் இராணுவ முகாமிலும் சரியான மருத்துவ வசதிகள் இல்லாதபடியால் எனது உடல்நிலை மேலும் பாதிக்கப் பட்டுவிட்டது.

கொழும்பில் எளிதில் விசா எடுக்க முடியாத சூழ்நிலையில் எனது மகள் விநோதினி இராஜேந்திரம் என்னை மலேஷியாவிற்கு வரவழைத்து அங்கு இந்தியா விசா பெற்று என்னை சென்னைக்கு ஒரு பெண்ணின் உதவியுடன் அனுப்பி வைத்தார்.

கனடிய குடிமகளான எனது மகளுக்கு மலேஷியாவில் இருந்து கொண்டு இந்திய விசாவிற்கு விண்ணப்பித்த போதும் அதனை உரிய நேரத்தில் எடுக்க முடியாமல் போய் விட்டது.

ஆனால் எங்கோ ஒரு தவறு ஏற்பட்டு இருக்க வேண்டும். இல்லாதுவிடின் உரிய கடவுச்சீட்டு, ஆறு மாத விசா அனைத்தும் இருந்தும் சென்னையில் நான் விமானத்தை விட்டு இறங்க முடியாமல் தடுத்து நிறுத்தப்பட்டு என்னையும் என்னுடன் துணைக்கு வந்த பெண்மணியையும் அதே விமானத்தில் திருப்பி அனுப்பி விட்டார்கள்.

எனது வைத்தியத்திற்கு டாக்டர் இராஜேந்திரன் வேறு தகுதி வாய்ந்த மருத்துவர்களையும் ஏற்பாடு செய்வார் என்பதால் தயவுசெய்து நான் கோலாலம் பூரில் இருந்து திருச்சிக்கு விமானத்தில் வருவதற்கு மலேஷியாவிலுள்ள இந்தியத் தூதரகத்தின் ஊடாக ஏற்பாடு செய்து தருமாறு அன்போடு வேண்டுகின்றேன்.

நான் சென்னை விமான நிலையத்தில் இருந்து திருப்பி அனுப்பப்பட்டமை தொடர்பாக தமிழக சட்டசபையில் நடந்த விவாதத்தில் பதில் அளித்த நீங்கள், நான் தமிழகத்தில் மீண்டும் சிகிச்சை பெற விரும்பினால் அதைப்பற்றி பரிசீலித்து மத்திய அரசுக்கு கடிதம் எழுதத் தயார் எனத் தெரிவித்திருந்தீர்கள். உங்களது உறுதிமொழி எனக்கு ஆறுதலைத் தந்துள்ளது - என்றுள்ளது. (சி)

## படகில் சென்றடைந்த 60இலங்கையர் ஆஸி.யில் தடுத்து வைப்பு

கொழும்பு,மே4

படகு மூலம் புறப்பட்ட இலங்கையைச் சேர்ந்த 60 பேர் ஆஸ்திரேலிய நடுக் கடலில் தத்தளித்தபோது ஆஸ்திரே லிய சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வெள்ளியன்று ஆஸ்திரேலிய நேரப்படி மாலை 6 மணிக்கு பெண்கள், குழந்தைகள் உட்பட ஈழ அகதிகள் 60 பேர் ஆஸ்திரேலியக் கடல் எல்லைக்குள் கொகோ தீவுக்கு அருகாமையில் எரிபொருளின்றித் தத்தளித்தபோது ஆஸ்ரேலிய சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு கொகோ தீவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என அங்கிருந்து வந்த தகவல்கள் தெரிவித்தன.

# இலங்கை போர்க்குற்ற விசாரணைகளுக்கு முழு ஆதரவு வழங்கிச் செயலாற்றுவோம்

## பிரிட்டன் தொழிற்கட்சி அறிக்கை

கொழும்பு,மே4

இலங்கையில் இடம்பெற்றவை எனக் கூறப்படும் போர்க் குற்றங்கள் தொடர்பில் சுதந்திரமான விசாரணைகள் நடத்தப்படுவதற்கு நாங்கள் முழுமையான ஆதரவு வழங்கிச் செயலாற்றுவோம் - என்று பிரிட்டன் தொழிற்கட்சி தெரிவித்துள்ளது.

'பிரிட்டன் வாழ் தமிழ் மக்களுக்கு தொழிற்கட்சியின் வேண்டுகோள்' என்ற தலைப்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அதில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

இலங்கை அரசால் தமிழ் மக்கள் இரண்டாம் தர குடிமக்களாக நடத்தப்படுகின்றனர். பல்லாயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். அத்துடன், பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் இடம் பெயர்ந்தும் உள்ளனர். இலங்கையில் உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்திருந்தாலும், தமிழ் மக்களின் அமைதிக்கான போராட்டம் இன்னும் நடந்துகொண்டே இருக்கின்றது.

தமிழ் மக்கள் தொடர்பில் இலங்கை அரசு தனது கொள்கைகளையும், அணுகு முறைகளையும் மாற்றுவதோடு, தமிழ் மக்களின் அரசியல், பொருளாதார மற்றும் சமூக உரிமைகளை மதிக்கவும் வேண்டும். இதுகுறித்து அனைத்துலக சமூகத்தின் கவனத்துக்குக் கொண்டு வந்து தமிழ் மக்களின் அரசியல் விருப்புகளை நிறைவு செய்வதற்கு கொள்கைகளையும், அணுகு முறைகளையும் மாற்ற வேண்டும்.

தொழிற்கட்சியின் முக்கிய பெறுமானங்களான அனைத்துலக தேசியம், சுதந்திரம் மற்றும் சமூக நீதி போன்ற அடிப்படை அம்சங் கள் தமிழ் மக்களின் அடிப்படை அம்சங்களாக அமைகின்றன. அதேவேளை, இப்பெறுமானங்களே இலங்கையில் தமிழ் மக்கள் சுதந்திரத்தையும், அமைதியையும் பெறுவதற்கு முக்கிய அடிப்படை அம்சங்களாக அமைகின்றன.

போர் நடைபெற்ற காலங்களில் இலங்கை மேற்கொண்ட போர்க் குற்றங்கள் தொடர்பில் நீதியான, சுதந்திரமான விசாரணைகள் நடாத்தப்பட வேண்டும் என்பதை தொழிற்கட்சியின் தேர்தல் அறிக்கை வலியுறுத்தியுள்ளது. தமிழ் மக்கள் நீதியையும், சுதந்திரத்தையும் பெறுவதற்கான நீண்ட பயணத்தில் தொழிற் கட்சி உங்களுடன் தொடர்ந்து தோளுக்குத் தோள் நின்று உழைத்து வரும் என்பதை உறுதி செய்கின்றோம் -என்றுள்ளது. (சி)

# நான்கு கை,நான்கு கால்களுடன் விசித்திரச் சிறுவன் இந்தியாவில்



தனது நெஞ்சுப் பகுதியில் மேலதிகமாக இரு கைகளையும் கால்களையும் சுமந்து கொண்டுள்ள இச்சிறுவன் வடஇந்தியாவில் பீகார் மாநிலத்தில் வசித்து வருகின்றான்.

சிறிய கிராமமொன்றில் வாழும் மிக வறிய குடும்பத்தில் பிறந்துள்ள இச்சிறுவன் பிறப்பிலேயே இரு கைகளையும் தொடையுடன் கூடிய முழுமையான கால்கள் இரண்டையும் கொண்டவனாகக் காணப் படுகின்றான்.

நெஞ்சுப் பகுதியும் வயிற்றுப் பகுதியும் இணையும் இடத்தில் வெளியில் பிதுங்கியவாறு இந்த அவயங்களுடன் காணப்பட்ட இவன் பிறக்கும் போதே இறந்துவிடுவான் என்றே மருத்துவர்கள் நம்பினார்கள். ஆனால் அவன் பிறந்து சாதாரணமான சிறுவனாகவே வளர்ந்தான். அவனுடன் கூடவே அவனது உடற்பகுதியில் தொங்கியவாறு காணப்படும் கைகளும் கால்களும் வளர்ந்தன.

தற்போது அச்சிறுவனின் பெற்றோர் அந்த மேலதிக அவயங்களை அகற்றிவிடுவதற்காக மருத்துவர்களின் தயவைக் கோரி நிற்கின்றனர்.

தீபக் பஸ்வான் என்ற இச்சிறுவன் லக்சுமியின் அவதாரமாக இருக்கலாம் எனக் கருதும் ஒரு தரப்பினரும், இல்லை அவன் மனித உருவில் அவதரித்துள்ளதொரு பேயென இன்னொரு தரப்பினரும் கருதி வருகின்றனர். இதன் காரணமாக தீபக்கை வணங்கிப் பூசை புனஸ்காரங்களைச் செய்வோரும் கற்கள் போன்றவற்றால் தாக்குவோரும் அக்கிராமத்தில் இருக்கின்றனர். அவனது பெற்றோருக்கு இது பிரச்சினைக் குரியதாகியுள்ளது.

பாடசாலைக்குச் சென்று வரும் தீபக் நன்றாகவே படிக்கிறான். என்றாலும் அவனது வித்தியாசமான தோற்றம் காரணமாக அடிக்கடி பல அசௌகரியங்களை அவன் பட்டனுபவிக்க வேண்டி நேர்ந்துவிடுகிறது. நாளொன்றில் சுமார் 175 ரூபாய்களையே சம்பாதிக்கும் அவனது தந்தையாரான விரேஷ் பஸ்வான்,

''நான் தினம் தினம் இறைவனிடம் இவனைச் சாதாரண சிறுவனாக்கிவிடும் யாராகிலுமொரு மருத்துவர் எமக்குக் கிடைக்க அருள்வாய் தெய்வமே என்றே பிரார்த்தித்துக் கொள்கிறேன் என்றார்.



இவையனைத்துக்கும் மேலாக முக்கியமான பிரச்சினையாகியிருப்பது, இதுவரையில் எக்ஸ்றே (X-Ray) பரிசோதனைக்கோ, ஸ்கான் (Scan) பரிசோதனைக்கோ அச்சிறுவன் உட்படுத்தப்படாததன் காரணமாக அவனது உடலின் உட்பகுதியில் மேற்படி அவயங்களின் அமைவு குறித்து எதுவுமே தெரியாத நிலையே காணப்படுகின்றது.

# ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பொறுப்பு சஜித் பிரேமதாஸவிற்கு வழங்கப்பட வேண்டும்

## ஜோன் அமரதுங்க வலியுறுத்து

கொழும்பு, மே 4

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பொறுப்பு ஹம்பாந்தோட்டை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவின் புதல்வருமான சஜித் பிரேமதாஸவிற்கு வழங்கப்பட வேண்டும் - என்று எதிர்க் கட்சியின் பிரதம கொறடா ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியை வழிநடத்தக் கூடிய ஆளுமை கொண்ட ஒரே தலைவர் சஜித் பிரேதாஸ என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவின் கொள்கைகளைப் பின்பற்றி கட்சியை மீளக் கட்டியெழுப்பக் கூடிய வல்லமை சஜித் பிரேமதாஸவிடம் காணப்படுகிறது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸவின் நினைவு தினத்தை முன்னிட்டு நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

பொதுமக்களுக்கு நன்மை அளிக்கக் கூடிய பல்வேறு திட்டங்களை ரணசிங்க பிரேமதாஸ ஜனாதிபதி முன்னெடுத்துள்ளார் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

'கம் உதாவ' போன்ற பல்வேறு திட்டங்களின் மூலம் ஏழை எளிய மக்களுக்கு அவர் சேவையாற்றியுள்ளார் என்றும் தெரிவித்துள்ளார்.

எனினும், 1994 ஆம் ஆண்டுக்கு பின்னர் ஆட்சி பீடமேறிய எந்தவொரு அரசும் பொதுமக்களின் பிரச்சினைகளை முன்னிலைப்படுத்தி நடவடிக்கை மேற் கொள்ளவில்லை என்றும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார். (சி)

## ஆளும்கட்சி அவைத் தலைவராக நிமல் சிறிபால டி சில்வா நியமனம்

கொழும்பு,மே4

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவராக விவசாய அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஆறாவது நாடாளுமன்றத்தின் அவைத் தலைவராகவும் நிமால் சிறிபால டி சில்வே கடமையாற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, ஆளும் கட்சியின் பிரதம கொறடா பதவிக்கு அமைச்சர் தினேஷ் குணவர்தன நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த நாடாளுமன்றத்திலும் தினேஷ் குணவர்தனவே பிரதம கொறடாவாக கடமையாற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்த கால கசப்புணர்புக்களை முற்றாக மறந்து பேரியல் அஷ்ரப் மு.காவுடன் இணைய வேண்டும்

## அம்பாறை மாவட்ட இளம் புத்திஜீவிகள் ஒன்றியம் கோரிக்கை

அம்பாறை, மே 4

''கடந்தகால சசப்புணர்வுகளை மறந்து முன்னாள் அமைச்சர் பேரியல் அஷ்ரப் மீண்டும் முஸ்லிம் காங்கிரஸில் இணைந்து தொடர்ந்து தனது அரசியற் பணிகளை மேற்கொள்ள முன்வர வேண்டும்'' -என்று அம்பாறை மாவட்ட இளம் புத்திஜீவிகள் ஒன்றியம் கோரிக்கை விடுத்துள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை (30ஆம் திகதி) மாளிகைக்காட்டில் நடைபெற்ற இந்த ஒன்றியத்தின் செயற்குழுக் கூட்டத்தில் எதிர்கால முஸ்லிம் அரசியல் நிலைவரம் தொடர்பில் கலந்துரையாடப்பட்ட போது இவ்வாறான தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது என அந்த ஒன்றியத்தின் அரசியல் பிரிவிற்கான பணிப்பாளர் ஏ. றிஸ்வான் தெரிவித்தார்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் திகாமடுல்ல மாவட்டத்தில் ஆளும் தரப்பில் இணைந்து போட்டியிட்ட பேரியல் அஷ்ரப் சிறிய வாக்கு வித்தியாசத்தில் தோல்வியைத் தழுவியுள்ளார். இருப்பினும் அவரது சேவைகள் தொடர வேண்டும். எதிர்காலத்தில் அவரது பணி மேன்மேலும் பல்கிச் சிறக்க, கடந்த கால கசப்பான அனுபவங்களை மறந்து அவரது கணவர் ஆரம்பித்த முஸ்லிம் காங்கிரஸ் கட்சியில் அவர் இணைய வேண்டும்.

கடந்த பொதுத் தேர்தலின்போது அம்பாறை மாவட்டத்தில் இடம்பெற்ற இன மற்றும் பக்கச் சார்பான பல நடவடிக்கைகளையும், எதிர்காலத்தில் இம்மாவட்டத்தில் முஸ்லிம் மக்களின் அரசியல் இருப்புக்களையும் கவனத்திற்கொண்டு முன்னாள் அமைச்சர் பேரியல் அஷ்ரப் தீர்க்கமான முடிவொன்றுக்கு வர வேண்டியுள்ளது. சரி, பிழை என்ற வாதப் பிரதிவாதங்களுக்கு அப்பால் முஸ்லிம் காங்கிரஸின் மூலமாக முஸ்லிம் மக்கள் ஒன்றிணைய முயற்சிக்க வேண்டும்.

இந்த ஒன்றிணைவின் அவசியம் எத்தகையது என்பதை அண்மையில் நடந்த பொதுத் தேர்தல் மூலம் வடக்கு, கிழக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கற்றுத் தந்துள்ள பாடத்தை நாம் எல்லோரும் உணர வேண்டும்.

இதேவேளை, முன்னாள் அமைச்சர் பேரியல் அஸ்ரப்பை மீண்டும் கட்சிக்குள் உள்வாங்கி அவரிடம் கட்சியின் பொறுப்புக்களை வழங்குவதற்கும், அவரூடாக கட்சியை மேலும் வலுவடையச் செய்வதற்கும் முஸ்லிம் காங்கிரஸ் தலைமை சில விட்டுக் கொடுப்புக்களைச் செய்ய முன்வர வேண்டும், இதுவிடயத்தில் சகல முஸ்லிம் பொதுநல அமைப்புக்கள் ஒத்துழைப்பு நல்க வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

(ளி)

# அம்பாறை மாவட்டத்தில் விகாரைகள் புனரமைப்பு

அம்பாறை, மே 4

அம்பாறை மர்வட்டத்தின் தமண பிரதேச செயலாளர் பிரிவில் கலை, கலாசார செயற் திட்டத்தின்கீழ் இங்குள்ள பௌத்த விகாரைகளைப் புனரமைக்கும் வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண சபை உறுப்பினர்கள் சிலரின் 22 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டின் கீழ் இவ் வேலைத்திட்டம், நடைமுறைப் படுத்தப்படுகிறது எனத் தமண பிரதேச செயலகத்தின், உத்தியோகத்தர் நாலிகா தமயந்தி தெரிவித்தார்.

கிழக்கு மாகாண சபையின் கல்வி, கலாசார அலுவலகர்கள், காணி அபிவிருத்தி மற்றும் போக்குவரத்துத்துறை அமைச்சர் விமல வீர திசாநாயக்கவின் ஆலோசனைக்கு அமைவாக இத்திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது. (ளி)

# கிழக்கு மாகாண அரச திணைக்களங்களில் பணிபுரிவோர் பொதுசேவைக்கு உள்ளீர்ப்பு

மட்டக்களப்பு, மே4

கிழக்கு மாகாணசபை நிர்வாகத்தின் கீழ் இயங்கிவரும் சகல அரச திணைக்களங்களிலும் தற்போது பணிபுரிந்து வரும் அனைத்து உத்தியோகத்தர்களையும், கிழக்கு மாகாண பொதுச் சேவைக்கு உள்ளீர்ப்புச் செய்வதற்கு மாகாணசபை நிருவாகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதுவரை மாகாண பொதுச்சேவையில் உள்ளீர்ப்புச் செய்யப்படாத நிலையில் பணி புரிந்து வரும் உத்தியோகத்தர்கள் தொடர்பான விவரங்களைக் கண்டறிந்து அவர்களை உட னடியாக கிழக்கு மாகாண பொதுச் சேவையில் உள்ளீர்ப்புச் செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு திணைக்களத் தலைவர் களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் கிழக்கு மாகாணக் கல்வியமைச்சில் உள்ள திணைக்களங்களில் கடமையாற்றும் இலங்கை கல்வி நிர்வாக சேவை உத்தியோகத்தர்கள், அதிபர் சேவை உத்தியோகத்தர்கள், மற்றும் கல்விசாரா செயற்பாட்டுக் குழுக்களைச் சேர்ந்த அலுவலர்கள் ஆகியோர் உடனடியாக மாகாண பொதுச் சேவைக்கு உள்ளீர்ப்புச் செய்யப்பட உள்ளனர் என மாகாணக் கல்வியமைச்சின் செயலாளர் உபுல வீரவர்தன தெரிவித்துள்ளார்.

மாகாண சபையின் கீழ் வேதனம் பெறும் அனைத்து அலுவலர்களும் மாகாண பொதுச் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

எனினும் 2006ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 22ஆம் திகதிக்குப் பின்னர் புதிதாக நியமனம் செய்யப்பட்டவர்கள் மாகாண சேவை உள்ளீர்ப்பிற்காக விண்ணப்பிக்க வேண்டிய அவசியம் இல்லை எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ளி)

# வெருகல் கறுக்காமுனைப் பகுதிக்கு மின்சார விநியோகம் அவசியம்

## பொதுமக்கள் கோரிக்கை

திருகோணமலை, மே 4

வெருகல் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள இலக்கத்துறை, கறுக்காமுனை கிராம மக்கள் மின்சார வசதிகள் இல்லாமல் பெரிதும் சிரமப்படுகின்றனர் எனக் கவலை தெரிவிக்கின்றனர்.

இலக்கத்துறை, கறுக்காமுனை ஆகிய இரு கிராமசேவையாளர் பிரிவுகளிலும் அதிகளவான தமிழ்க் குடும்பங்கள் வசிக்கின்றன. இங்கு மின்சார வசதிகள் இல்லாமையால் இரவு நேரங்களில் இப்பிரதேசங்கள் இருளில் மூழ்கிக்கிடக்கின்றன. இதனால் இங்குள்ள மக்கள் மின்சாதனப் பொருள்களை பாவிக்க முடியாதுள்ளது எனவும் கூறப்படுகிறது.

இங்குள்ள மாணவர்கள் கல்வி கற்பதில் இரவு நேரங்களில் பெரும் சிரமங்களை எதிர் கொள்கின்றனர். மேலும் இப்பிரதேசங்கள் முழுவதும் இருளில் முழ்கிவிடுவதால் அநேகமானவர் விசக்கடிக்கு இலக்காக நேரிடுகிறது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் இரவு நேரங்களில் கொள்ளை சம்பவங்களும் இடம்பெறுகின்றன எனப் பிரதேச மக்கள் கூறுகின்றனர். (ளி)




# உள்ளூராட்சி மன்றங்களின் அபிவிருத்திக்கு வர்த்தக சமூகத்தின் ஒத்துழைப்பு அவசியம்

மட்டக்களப்பு, மே 4

உள்ளூராட்சி மன்றங்களின் அபிவிருத்திக்கு வர்த்தக சமூகங்களின் பங்களிப்பு மிகவும் அவசியமானதாகும் இதன் மூலமே செழிப்பு மிக்க பிரதேசமென்றை கட்டியெழுப்ப முடியும் -என்று ஆசிய மன்றத்தில் நிகழ்ச்சித் திட்டம் அதிகாரி எம்.ஐ.எம். வலீத் தெரிவித்தார்.

ஆசிய மன்றம் நடைமுறைப்படுத்தி வரும் அரச, தனியார் குழுக்கலந்துரையாடல் சமீபத்தில் அட்டாளைச்சேனை பிரதேச சபை அலுவலகத்தில் நடைபெற்றது. இங்கு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

பிரதேச சபையின் தவிசாளர் எம்.ஏ. ஹன்சில் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் வர்த்தக சங்கப்பிரதி நிதிகள் பலரும் கலந்து கொண்டனர்.

இங்கு அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில் கூறியவை வருமாறு:-

உள்ளூராட்சி மன்றங்களில் பிரதி நிதிகளும் வர்த்தக சமூகமும் ஒன்றிணைந்தே உள்ளூராட்சி மன்ற பிரதேசத்தை அபிவிருத்தி செய்ய வேண்டும் அதன் மூலம் அப்பிரதேசத்தை எழில் மிக்க பிரதேசமாக மாற்ற முடியும். வர்த்தக சமூகம் எதிர்நோக்கின்ற பிரச்சினைகளை உள்ளூராட்சி மன்றங்களினூடாக தீர்த்துவைக்க நடவடிக்கை எடுக்க முடியும் அதற்கு உள்ளூராட்சி மன்ற பிரதிநிதிகளோடு இணைந்து செயற்படுவது முக்கியமானதாகும்.

உள்ளூராட்சி மன்றங்களின் கீழ் பல விடயங்கள் பின்னடைந்து காணப்படுகின்றன இவற்றைக் கட்டியெழுப்புவதும் பொதுமக்களுக்கும் உள்ளூராட்சி மன்றப் பிரதி நிதிகளுக்கும் இடையிலுள்ள இடைவெளியை குறைப்பது மிகவும் அவசியமானதாகும்.

இவ்வாறான பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கு உள்ளூராட்சிமன்றப் பிரதிநிதிகளையும் வர்த்தக சமூகத்தையும் ஒன்றிணைத்து அந்தப் பிரதேசங்களை மேம்படுத்துவதாக ஆசிய மன்றம் பல செயற் திட்டங்களை முன்வைத்து இயங்கி வருகிறது.

உள்ளூராட்சி மன்றங்களும் வர்த்தகர்களும் பூரண ஒத்துழைப்பை வழங்குவதன் மூலமே ஆசிய மன்றம் முன்னெடுக்கின்ற பணிகள் மூலம் நன்மையடைய முடியும் - என்றார். (ளி)

# மு.கா.வின். தேசிய பட்டியல் நியமனம் குறித்து அட்டாளச்சேனை பிரதேச சபையில் தீர்மானம்

அம்பாறை, மே4

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரால் அட்டாளைச்சேனைப் பிரதேசத்துக்கு வழங்கப்படும் என்று வாக்குறுதியளிக்கப்பட்ட தேசியப்பட்டியல் நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தை இப் பிரதேசத்தைச் சேர்ந்த கிழக்கு மாகாணசபை உறுப்பினர் மசூர் சின்னலெப்பைக்கு வழங்க வேண்டும் எனக் கோரும் தீர்மானமொன்று அட்டாளைச்சேனை பிரதேசசபைக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

அட்டாளச்சேனைப் பிரதேச சபை கடந்த வியாழக்கிழமை காலை - தவிசாளர் எம்.ஏ. அன்சில் தலைமையில் கூடியது. இதன்போது, அட்டாளச்சேனைப் பிரதேசத்திற்கான தேசியப்பட்டியல் நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தை வழங்குவது சம்பந்தமாக பிரதேச சபை உறுப்பினர் ஏ.எஸ்.எம். உவைஸ் முன்வைத்த கோரிக்கை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அதைத் தொடர்ந்து, ஆளும்கட்சி மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இவ்விடயம் தொடர்பில் மேற்படி தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றினர்.

''அட்டாளச்சேனைப் பிரதேசத்தைக் கௌரவிக்கும் பொருட்டு, நீண்டகாலமாக இந்த மாவட்டத்திற்கு நாடாளுமன்ற உறுப்பினர் இல்லாதிருந்த குறையை நிவர்த்திக்கும் முகமாக, கடந்த பொதுத் தேர்தலின் போது முஸ்லிம் காங்கிரஸின் தலைவராலும் அதன், உச்சபீட, உயர்பீட உறுப்பினர்களாலும் வழங்கப்பட்ட வாக்குறுதியை நிறைவேற்றுமுகமாகவும் மு.கா. தலைமையில் வாக்குறுதியளிக்க தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை அட்டாளச்சேனைப் பிரதேசத்துக்கு வழங்குமாறும், குறிப்பாக இப்பிரதேசத்தில் எமது கட்சியின் வளர்ச்சிக்காக அரும்பாடுபடும் கிழக்கு மாகாணசபை உறுப்பிணர் மசூர் சின்னலெப்பைக்கு வழங்குமாறு - ஆளும், எதிர்த்தரப்பு உறுப்பினர் அனைவராலும் ஏகமானதாக தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டுள்ளது. -என்று அத்தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்படி தீர்மானத்தின் பிரதியொன்று, முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீமுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என அட்டாளச்சேனைப் பிரதேச சபையின் தவிசாளர் எம்.ஏ. அன்சில் தெரிவித்தார்.

(ளி)

# சம்மாந்துறை இஸ்மாயில்புரத்திற்கு வீதி மின்விளக்குகள் பொருத்தப்பட்டன

## ஹரிஸ் எம்.பி. நடவடிக்கை

மட்டக்களப்பு, மே 4

சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் அண்மையில் நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் தனது முதற் சேவையாக இஸ்மாயில்புரம் கிராமத்திற்கு வீதி மின் விளக்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளார்.

ஆழிப்பேரலை அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட சம்மாந்துறை பிரதேசத்திலுள்ள இஸ்மாயில்புரம் கிராமத்தில் குடிய அமர்த்தப்பட்டுள்ள பொதுமக்களின் அடிப்படை வசதியீனங்கள் தொடர்பாக கவனம் செலுத்தி நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீஸ் முதற் கட்டமாக இக்கிராமத்திற்கு 20வீதி மின் விளக்குகளை வழங்கியுள்ளார்.

கடந்த இரு வருடங்களாக இருள் மயமாகக் கிடந்த இக்கிராமம் ஹரீஸ் எம்.பியின் முயற்சியின் பயனாக தற்பொழுது ஒளிமயமாகக் காட்சியளிக்கிறது. என இங்குள்ள மக்கள் தற்பொழுது எவ்வித அச்சமுமின்றி வாழ்வதற்கான சூழல் தோற்றுவிக்கப்பட்டிருக்கிறது எனவும் மகிழ்ச்சி தெரிவிக்கின்றனர்.

இருளில் மூழ்கிக் கிடந்த இக்கிராமத்தில் யானைகள் மற்றும் திருடர்களின் தொல்லை கடந்த காலங்களில் நிலவி வந்தன எனவும், மக்கள் இரவு நேர நடமாட்டத்தை தவிர்த்து வந்ததாகவும் தெரிவிக்கப்படுவதுடன் இந்நிலமை கள் தொடர்பாக அவ்வப்போது ஊடகங்கள் மூலமாக செய்தி வெளியிடப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

இக்கிராமத்தின் நீண்டகால முதற் தேவையாக இருந்து வந்த வீதி மின் விளக்கு வசதியின்மை உடனடியாகத் தீர்க்கப்பட்டமையையிட்டு இக்கிராமத்திலுள்ள பள்ளிவாசல் நிர்வாகம், இளைஞர் கழகம் நிர்வாகம் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸிக்கு நன்றி தெரிவிப்பதுடன் இக்கிராமத்தின் எஞ்சியுள்ள சில அடிப்படைத் தேவைகளை நிவர்த்தி செய்வதற்கு சகலரும் ஒத்துழைப்பு நல்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கின்றனர். (ளி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப்போட்டி அண்மையில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.
இந்த நிகழ்வில் விருந்தினர்கள் மாணவர்களால் வரவேற்கப்படுவதை முதலாவது படத்திலும், பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கல்வி அமைச்சின் ஜேஐஜிஏ செயற்றிட்ட தேசிய ஆலோசகர் என்.அப்துல் வாஹிட் வெற்றிபெற்ற மாணவனுக்கு வெற்றிக்கேடயம் வழங்குவதை இரண்டாவது படத்திலும், மாணவிகளின் உடற்பயிற்சி நடைபெறுவதை இறுதிப் படத்திலும் காணலாம். *(படங்கள்:ஹரிஸ்)*


## சிவாச்சார்ய அபிஷேக அழைப்பு

அன்புடையீர்!



நிகழும் மங்களகரமான விகிர்தி வருஷம் சித்திரைத் திங்கள் 22ஆம் நாள் (05.05.2010) புதன்கிழமை காலை 9.30 மணிமுதல் 10.30 மணி வரையுள்ள சுப முகூர்த்த வேளையில் அத்தியடி விநாயகப் பெருமான், பள்ளம் புலம் முருகமூர்த்திப் பெருமான், நாரந்தனை ஸ்ரீசிவசுப் பிரமணியப் பெருமான் திருவருளும், குருவருளும் கைகூட

## யோகீஸ்வர சுபாஸ்கர சர்மா

அவர்களுக்கு யாழ்.அத்தியடி வரகத்தி விநாயகர் ஆலய மண்டபத்தில் சிவாச்சார்ய அபிஷேகம் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தீட்சா குரு: சிவஸ்ரீ நா.யோகீஸ்வரக் குருக்கள்

யோகீஸ்வர சுபாஸ்கர சர்மா
வைதேகி தம்பதிகள்.
077-222551

கொழும்பு-10

(97538)



## எங்கள் கிராமத்தின் நவமணிகளைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்



முருகேசன் கயோதரன்
B.A. (Hons) Sociology (SPL)
யாழ்.பல்கலைக்கழகம்



செல்லத்துரை புருசோத்தமன்
B.A. Sociology (SPL)
யாழ்.பல்கலைக்கழகம்



பாலையா ஜெயா
B.A.
பேராதனைப் பல்கலைக்கழகம்

பட்டம் பெற்று பாங்குடையீர்
பாராட்டி மகிழ்கின்றோம்....நீவிர்
வான்புகழ் தந்து பெருமைகள் பெற
வாழ்க வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

நவசமூகம்,
நவபுரம்,
கைதடி.

(97539)



## யாழ்ப்பாணத்தில்

JCB Backhoe Loader

மணித்தியால அடிப்படையில்
வாடகைக்கு பெறலாம்



தொடர்புகளுக்கு:

நிமோவி றெடிமிக்ஸ் நிறுவனம்
Nimovi Readymix (Pvt) Ltd

இல.25 இராமகிருஸ்ண வீதி,
வெள்ளவத்தை,
கொழும்பு-06
011-2363435

கேரதீவு வீதி,
நாவற்குழி,
யாழ்ப்பாணம்.
071-3680291
0777252722


## அரசுடன் பேச்சு நடத்தத் தயார் மு.காவின் தவிசாளர் தெரிவிப்பு

கொழும்பு, மே.4

அரசிடம் இருந்து உத்தியோகபூர்வமாக அழைப்பு விடுக்கப்படும் பட்சத்தில் அதைப் பரிசீலிக்க ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தயாராக இருக்கிறது - என்று அக்கட்சியின் தவிசாளர் பஷீர் சேகுதாவூத் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில் -

மக்கள் நலன் கருதிய பேச்சுக்கு அரசிடம் இருந்து அழைப்பு விடுக்கப்படும் போது அதைப் பரிசீலிக்கத் தயாராக இருக்கிறோம் என்று கூறினார். (சி)

## இராஜகோபுர நிர்மாணப் பணிகள்

புங்குடுதீவு, மே.4

புங்குடுதீவு, மடத்துவெளி பாலசுப்பிரமணிய ஆலயத்தில் இராஜகோபுரம் அமைப்பதற்கான பணி நடைபெற்று வருகின்றது.

மேற்படி இராஜகோபுரம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டுவிழா சென்றமாதம் 28ஆம் திகதி நடைபெற்றது. இதன் பணிகள் யாவும் துரிதமாக முடிவுபெற்று கோபுரத்துக்கான கும்பாபிஷேக நிகழ்வுகள் ஆவணிமாதம் நடைபெறவிருப்பதும் குறிப்பிடத்தக்கது. (க-188)

## முட்டைக்குத் தட்டுப்பாடு

நவாலி, மே.4

நவாலி, ஆனைக்கோட்டை மற்றும் இதர பகுதிகளில் ஊர்க்கோழி முட்டைக்கு பலத்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

கடும் வரட்சி காரணமாகக் கோழிகள் தூக்க நோயினால் திடீர் திடீரென இறந்துள்ளதால் இம்முட்டைகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (50-100)


## 9ஆம் ஆண்டு நினைவுகளில்

மலர்வு 07 ★ 04 ★ 1964



உதிர்வு 13 ★ 05 ★ 2001

திருமதி அருளம்மா நடராசா
திதி: ஷஷ்டி கரசுபரம் (04.05.2010)

ஒன்பது ஆண்டுகள் கரைந்தாலும் அழியாத நின் நினைவை
சுமந்து நிற்கும் இதயங்கள் ஏங்குதம்மா உன் பிரிவால்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ரா.நதியா (மகள்),
ராகவன் (மருமகன்),
பிரசன்னா (மகன்),
பூஜா, றஜி (பேரப்பிள்ளைகள்)

கரணவாய் தெற்கு,
கரவெட்டி.

(92242)



## ஓராண்டு நினைவஞ்சலி

பிறப்பு 22 ★ 10 ★ 1976



இறப்பு 15 ★ 04 ★ 2009

அமரர் நாகரத்தினம் நகுலன்
திதி:- (04.05.2010)

கனவிலும் நினைவிலும் உன் மலர்ந்த
விழியைத் தேடுகின்றோம் நீ வரமாட்டாயா என்று
உன் அன்பு முகத்தை மீண்டும் ஒருமுறை
நாம் பார்க்க வேண்டுமே
விதியின் சதியிதுவோ? வேதனை தான்
வாழ்வின் முடிவோ? வாழ்ந்தது
போதுமென்று வானகம் சென்றாயோ
எமக்கென்று இருந்த ஒளியினை
ஆண்டவன் தனக்கென்று எடுத்துக் கொண்டானோ?
நாமோ உன்பிரிவால் தனிமையிலே உருகுகின்றோம்
உன் அன்பையும் பாசத்தையும் ஈடுசெய்ய முடியாது
உமது ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

கலைமகள் வீதி,
இமையாணன் கிழக்கு, உடுப்பிட்டி.

உன் பிரிவுத்துயரால் வாடும்:
குடும்பத்தினர்.

(97537)



## முதலாம் ஆண்டு நினைவு

தோற்றம் 06★04★1943

மறைவு 14★04★2009



அருணாசலம் வேலுப்பிள்ளை
(ஓய்வுபெற்ற அதிபர்)
திதி:- அபரபக்க ஷஷ்டி

ஆண்டொன்று ஆனதோ உண்மை-ஆனாலும்
ஆழமாய் எம் மனதை ஆழ்வதோ அதிலும் உண்மை

சியாமளா மில் ஒழுங்கை,
மீசாலை வடக்கு, மீசாலை.

குடும்பத்தினர்.



## புதிய இடத்தில் எமது சேவைகள்

பொலிமர் றபர் ஸ்ராம் 200ரூபா
பிறீ இங்க் றபர் ஸ்ராம் 500ரூபா
வரிக்கணக்கோ, அளவோ இல்லை. உங்கள் விருப்பம் போல் இக் கட்டணத்தில் செய்து கொள்ளலாம் நகரில்.



S.S.யசோதரன் ஆட்ஸ்,
(வண்ணை சிவன் கோவில் அருகில்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீன், இறைச்சி, மரக்கறி என்பவற்றையெல்லாம் பச்சையாகவே பதம்பார்க்கும் ஜப்பானியர்

**இலங்கை மற்றும் ஜப்பான் அரசுகளின் ஏற்பாட்டில் 'சமாதான முன்னெடுப்பு பயணம்' என்ற திட்டத்தின் கீழ் இலங்கையிலிருந்து ஐவர் சமீபத்தில் ஜப்பானுக்கு ஒருவார சுற்றுப் பயணத்தை மேற்கொண்டிருந்தனர். அவர்களுள் ஒருவரான 'உதயனின்' சகோதரப்பத்திரிகையான 'சுடர்ஒளி' யின் உதவி ஆசிரியர் செ. அற்புதன் தமது அனுபவத்தை இங்கு தொடராகப் பகிர்ந்துகொள்கிறார்.**

பகுதி 2

### ஜப்பான் இலங்கைக்கு நல்ல ஆதரவு

பதில் தூதர் வீரக்கோன் செயலாளர் சந்தன வீரக்சேன, மற்றோரு அதிகாரி மாப்பா பத்திரன ஆகியோர் எங்களோடு உரையாடினர். எங்களது வருகை மிகவும் சந்தோஷமாக இருக்கிறது என்று கூறிய அவர்கள், இதுபோன்ற வருகை இரு நாடுகளுக்குமிடையில் அடிக்கடி இடம்பெறவேண்டும் அப்போதுதான் இருநாட்டு உறவு மேலும் இறுக்கமடையும் என்றார்கள். ''ஜப்பானுடனான இலங்கையின் ராஜதந்திர உறவு 1952 ஆம் ஆண்டு ஏற்பட்டது. அன்று தொடக்கம் ஜப்பான் எங்களுக்கு எவ்வளவோ உதவிகளைச் செய்து வருகிறது. சமீகாலத்தில் கூட ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் மேற்கு நாடுகள் இலங்கைக்கு எவ்வளவோ அழுத்தங்களைக் கொடுத்தனர். அப்போதெல்லாம் ஜப்பான்தான் எங்களுக்கு நண்பனாக இருந்து எமது அரசின் சகல நடவடிக்கைகளுக்கும் ஒத்துழைத்து உதவியது'' என்றார் பதில் தூதர். இரு நாடுகளுக்கும் இடையிலான மத கலாசாரங்கள் ஒன்றாக இருப்பது இதற்குக் காரணமாக இருக்கலாம் என்று நம்புகிறார் அவர்.

### உள்நோக்கம் இல்லாத உதவி!

அப்போது எங்களில் ஒருவர் கேட்டார் ''சீனா போன்ற மற்றைய நாடுகள் செய்கின்ற உதவிக்கும் ஜப்பான் செய்கின்ற உதவிக்கும் இடையில் ஏதேனும் வித்தியாசம் இருக்கின்றதா?''. சற்று யோசித்துவிட்டு பதில் சொல்லத் தொடங்கினார் தூதர் வீரக்கோன். ''இதுகொஞ்சம் சிக்கலான கேள்வி. அதனால் இதற்கு நான் தூதர் என்ற முறையில் பதில் சொல்ல முடியாது. ஆனால், தனிப்பட்ட முறையில் சொல்வதென்றால், சீனா, அமெரிக்கா உட்பட ஏனைய நாடுகள் இலங்கைக்கு உதவி வழங்குகின்றபோது ஏதோ ஒரு உள்நோக்கம் இருக்கும். ஆனால் ஜப்பான் அப்படி அல்ல. அது எங்களுடைய உண்மையான நண்பன். இதைவிட சீனா போன்ற நாடுகள் இலங்கைக்கு பெரிமளவு உதவிகளை கடனாகவே தருகின்றன. ஆனால் ஜப்பான் நன்கொடையாக - இலவசமாக - வழங்குகின்றது''

தகவல் தொழில்நுட்பம் போன்ற துறையில் இலங்கை மாணவர்கள் ஜப்பானில் உயர்கல்வி கற்பதை தாங்கள் ஊக்குவிக்கின்றார்கள் என்று தெரிவித்த அவர், இருநாடுகளைச் சேர்ந்த பல்கலைக் கழகங்களுக்கு இடையில் தகவல்.தொழில்நுட்ப ஒத்துழைப்பு தொடர்பான ஒப்பந்தங்களும் கைச்சாத்திடப்படுகின்றன என்றும் சுட்டிக்காட்டினார்.

### ஆங்கிலம் பேசுவதற்கு ஜப்பானியர்களுக்கு பயம்!

'ஜப்பானியர்கள் ஏன் ஆங்கிலம் பேசுவதில்லை' என்பதைப் பற்றி ஒரு கட்டத்தில் பேசிக்கொண்டிருந்தோம். ஆங்கிலம் படிப்பதில் அவர்களுக்கு அவ்வளவாக ஆர்வம் கிடையாது. தங்களுடைய மொழி மட்டுமே போதும் என்று அவர்கள் நினைக்கிறார்கள் என்று சிலர் கூறிய போது குறிக்கிட்ட தூதரகச் செயலாளர் சந்தன வீரசேன ''இல்லை... இல்லை... ஜப்பானியர்களில் பலருக்கு ஆங்கிலம் தெரியும். ஆனால் மற்றவர்களுடன் பேசும் போது வாயில் ஏதேனும் உச்சரிப்பு தவறாக வந்துவிடுமோ என்று அவர்கள் பயப்படுகிறார் கள். அதனால்தான் பேசுவதில்லை. யாரேனும் கேட்டால் 'தெரியாது' என்று சொல்லி நழுவி விடுவார்கள்'' என்றார். எதைவைத்து இதைக் கூறுகிறீர்கள் என்று கேட்டதற்கு, ''ஜப்பானியர்களுக்கு நாங்கள் ஆங்கிலத்தில் ஈமெயில் அனுப்பினால் அவர்கள் அதை வாசித்து புரிந்துகொண்டு எங்களுக்கு பதில் கூட அனுப்புகிறார்கள்'' என்கிறார். இரண்டரை வருடங்களுக்கு மேலாக ஜப்பானில் பணிபுரிகிறார் வீரசேன. அவர் சொல்வதிலும் உண்மை இருக்கக் கூடும்.

மறுநாள் இரவு தனது வீட்டில் எங்களுக்கு விருந்து ஏற்பாடு செய்திருக்கிறார் என்று கூறிய பதில் தூதர் அதற்கு நிச்சயமாக வாருங்கள் என்று கூறி விடைகொடுத்தார். அங்கிருந்து மதிய உணவு எடுப்பதற்காக எமக்கென ஒழுங்கு செய்யப்பட்டிருந்த ஹோட்டலுக்குச் சென்றோம்.

### சமைக்கப்படாத மீன், இறைச்சி!

அது ஓர் ஆடம்பர நட்சத்திர ஹோட்டல். சுமார் 15 மாடி அடுக்குள்ள அந்த ஹோட்ட லின் பெயர் 'பிரின்ஸ் ஹோட்டல்' (Prince hotel) ''ஜப்பானிலுள்ள மிகப் பெரிய ஹோட்டல்களில் இதுவும் ஒன்று. எல்லாவகையான உணவும் இருக்கும். விரும்பியதை நீங்களே எடுத்து உண்ணலாம் (Self service) என்று அறிமுகம் தந்தார் ஒகா. சோறு (நம்மூர் குத்தரிசியோ, சம்பாவோ அல்ல. இது வேறு ஒரு ரகம்), நூடில்ஸ் வகைகள், சூப் வகைகள், கூல்றிங்ஸ், ஐஸ்கிறீம், சலாட் வகைகள் என்று அனைத்துமே இருந்தன. மாடு, கோழி, பன்றி இறைச்சிகள். மீன், இறால், நண்டு, கணவாய், மட்டி உட்பட கடலுணவுகள் எல்லாமே இருந்தன. சமைக்கப்படாத மீன், மாட்டிறைச்சி, மரக்கறி வகைகளும் வைக்கப்பட்டிருந்தன. அந்தப் பக்கமே திரும்பாமல் சில வகையான உணவுகளை கோப்பையில் போட்டுக்கொண்டு வந்து உட்கார்ந்தோம். தனக்குப் பிடித்த உணவு வகைகளை கோப்பையில் எடுத்து வந்து எங்களுடன் உட்காந்தார் ஒகா. அவரது சாப்பாட்டுக் கோப்பையை நோக்கி பார்வையை திருப்பினேன். சமைக்கப்படாத பச்சை மாட்டிறைச்சி, அதேபோல சமைக்கப் படாத மீன், மரக்கறி என்று எல்லாமே கொஞ்சம் முகம் சுழிக்க வைத்த அயிட்டங் கள். கொஞ்சம் கூட கூச்சமே இல்லாமல் பச்சை 'பச்சையாகத் தின்று கொண்டிருந்தார்' ஒகா.

அதைப் பார்ப்பதற்கு கொஞ்சம் அருவருப்பாக இருந்ததால், பார்வையை மறுபக்கம் திருப்பி அடுத்த மேசையை அவதானித்தேன். அங்கும் இரு ஜப்பானிய பெண்கள் மீன், இறைச்சி, மரக்கறி எல்லாவற்றையும் பச்சையாகவே 'மேய்ந்து கொண்டிருந்தார்கள்'. முடியல... திடீரென்று நடிகர் வடிவேலுவின் பாணியில் ஒரு யோசனை தோன்றியது. ''சரி... நாமளும் கொஞ்சம் டெஸ்டு பண்ணிப் பார்ப்போம்...'' மெதுவாக எழுந்து சென்று சமைக்கப்படாத மீனிலும், மாட்டிறைச்சியிலும் ஒவ்வொரு துண்டு வெட்டிக் கொண்டு வந்து 'ரெஸ்ட்' பண்ணிப் பார்த்தேன். அட... நல்லாதானேடா இருக்கு....! இது தெரியாமல் நம்மூர்களில் அநியாயமாக சமைப்பதில் நேரத்தை செலவழிக்கிறார்களே....!

### ஜப்பான் 'பிளாற்போம்'

மதிய உணவு முடிந்ததும் 'ஜப்பான் பிளாற்போம்'(Japan Platfoom) என்ற அமைப்பின் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடல் ஒன்று இருந்தது. அவர்களின் அலுவலகத்துக்குச் சென்றபோது அங்கு எம்மை வரவேற்பதற்கு சில இளைஞர்களும் யுவதிகளும் காத்திருந்தார்கள். 'ஜப்பான் பிளாற்போம்' என்பது அந்த நாட்டிலுள்ள அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம். சர்வதேச அளவில் அனர்த்தங்கள், அழிவுகள் ஏற்படுகின்ற சந்தர்ப்பங்களில் அங்கு தமது கிளை அமைப்புகள் ஊடாக தொண்டுப் பணிகளை ஆற்றுவதுதான் இதன் பிரதான நோக்கம். அந்த அமைப்பின் அவசர நடவடிக்கைப் பிரிவின் இயக்குனர் நொறியுகிஷினா (Noriyuki Shiina) தங்களுடைய செயற்பாடுகளை விளக்கினார். ''எமது அமைப்பில் 32 அரசசார்பற்ற தொண்டு நிறுவனங்கள் உள்ளன. அந்த அமைப்புகள் ஊடாக இயற்கை அனர்த்தங்கள் நிகழ்ந்த கெய்ட்டி, சுமாத்தரா உட்பட பல்வேறு நாடுகளில் உதவிப்பணிகளில் ஈடுபடுகின்றோம்.



'ஜப்பான் பிளற்போம்' அமைப்பின் பிரதிநிதிகளுடன் இலங்கைக் குழுவினர்

### இலங்கையில் பணிகள்

சுனாமி அனர்த்தத்தின் பின்னரும் கடந்த வருடம் யுத்தத்தினால் வடக்கில் ஏற்பட்ட மனித அவலத்தின் பின்னரும் இலங்கையிலும் பணியாற்றுகின்றோம்'' இலங்கையில் 2004 ஆம் ஆண்டு சுனாமி அனர்த்தம் ஏற்பட்ட பின்னர் மட்டக்களப்பு மாவட்டங்களில் அவசர மனிதாபிமானப் பணிகளையும் மீள் கட்டுமானப் பணிகளையும் அவர்கள் ஆற்றியிருக்கிறார்கள். வன்னியிலிருந்து மக்கள் இடம் பெயர்ந்து வந்து வவுனியா 'மெனிக்பார்ம்' முகாமில் தங்கியிருந்த போதும் கைகொடுத்திருக்கிறார்கள். இன்றுவரை அந்தப் பணியைத் தொடருகிறார்கள்.

இலங்கையைப் பொறுத்த வரையில் அங்குள்ள உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்கள் ஊடாகவும் தாங்கள் உதவிப் பணிகளை முன்னெடுக்கிறார்கள் என்று ஷிபா விளக்கம் அளித்தார்'' அங்குள்ள உள்ளூர் நிறுவனங்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்காக ஏதாவது திட்டங்களைத் தயாரித்து எமக்கு வழங்கினால், அதற்கு நாங்கள் நிதி வழங்குகின்றோம்.'' என்றார் அவர்.

வவுனியாவிலுள்ள யென்(Jen) என்ற தமது அமைப்பின் அலுவலகத்தின் ஊடாக, பெனிக்பார்ம் முகாம் திறக்கப்பட்டதிலிருந்து அந்த மக்களுக்கு குடிப்பதற்கும் ஏனைய தேவைகளுக்கும் தாங்கள்தான் தண்ணீர் விநியோகிக்கின்றார்கள் என்கிறார். மற்றொரு திட்ட இணைப்பாளர் கொஹி ஹொரி (KOHEI HORY). '' இப்போது எமது பணிகளை மீள்குடியேற்றம் இடம்பெறும் கிளிநொச்சி போன்ற பகுதிகளுக்கு விரிவுபடுத்தியுள்ளோம். அதற்காக இலங்கை அரசின் அனுமதிக்கு காத்திருக்கிறோம். பெரும்பாலும் அந்த அனுமதி எங்களுக்கு கிடைத்துவிட்டது என்று அங்கிருந்து தகவல் கிடைத்தது'' என்றும் ஹொரி சொன்னார். அப்போது குறிக்கிட்ட ஷனா ''அங்கு(இலங்கையில்) எமது உதவித்திட்டங்களுக்கு அனுமதி பெறுவது கொஞ்சம் சிரமமாக இருக்கிறது'' என்று சலித்துக் கொள்கிறார்.

'' உங்கள் நாட்டில் பணியாற்றும் ஏனைய நிறுவனங்கள் மக்களால் பரந்த அளவில் அறியப்பட்டவையாக இருக்கின்றன். ஆனால் யப்பான் அமைப்புகள் அந்தளவுக்கு அறியப்பட்டவையாக இல்லை அது எங்களுக்கு சற்றுக் கவலையாக இருக்கிறது; சவாலாகவும் இருக்கிறது'' என்றும் அவர் வருத்தப்பட்டார்.

ஏனைய நிறுவனங்கள் உள்ளூர் பத்திரிகைகள் மற்றும் ஏனைய ஊடகங்களுடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணுகிறார்கள். தங்களுடைய வேலைத்திட்டங்களை ஊடகங்கள் மூலம் தெரியப்படுத்துகிறார்கள். அதனால் அந்த நிறுவனங்களின் பணிகளை எல்லோரும் அறிந்து விடுகிறார்கள். ஆனால் நீங்கள் அப்படிச் செய்வதில்லையே என்று நான் கூறிய போது அதனை அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள். அப்போது, எங்களோடு வந்திருந்த சிங்கள நண்பர் ரங்க ஒரு விடயத்தை சுட்டிக்காட்டினார். ''பொதுவாக பிரபலமான சர்வதேச தொண்டு. அமைப்புக்கள் எல்லாமே வடக்கு கிழக்கில் மட்டும்தான் பணியாற்றுகின்றன என்றும், விடுதலைப்புலிகளுக்கு கூட அவர்கள் நிதி கொடுத்து உதவினார்கள் என்றும் சிங்கள மக்கள் மத்தியில் குற்றச்சாட்டு உள்ளது. அந்த அமைப்புகளுக்கு எதிராக அவர்கள் ஆர்ப்பாட்டங்களைக் கூடநடத்தியிருக்கிறார்கள். எனவே, நீங்களும் உங்களை வெளிப்படுத்துகின்ற போது இந்த விடயத்தில் அவதானமாக இருப்பது நல்லது''

எங்களில் மற்றொருவரான குரூஸ் வடக்கில், குறிப்பாக வன்னியில் செய்யப்படவேண்டிய வேலைகள், மக்களுக்கான தேவைகள் தொடர்பாக சில ஆலோசனைகளை வழங்கினார்.

(பயணம் தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை, ஓகஸ்ட் 2010.
General Certificate of Education (Advance Level) Examination - August 2010.

# பொருளியல் - 01 | பகுதி - I

01. சமூகம் ஒன்றின் மொத்த வெளியீட்டை வீட்டுத்துறையினரிடையே எவ்வாறு பங்கீடுசெய்வது?
1) எந்தப் பொருளை எந்தளவு உற்பத்திசெய்தல் வேண்டும்.
2) எவ்வாறு உற்பத்திசெய்தல் வேண்டும்.
3) யாருக்காக உற்பத்திசெய்தல் வேண்டும்.
4) உள்நாட்டுத் தேவைக்கும், ஏற்றுமதித் தேவைக்கும் இடையே எவ்வாறு உற்பத்தியைப் பங்கீடுசெய்தல் வேண்டும்.
5) நுகர்வுக்கும் முதலீட்டுக்கும் இடையே வளங்களை எவ்வாறு ஒதுக்கீடுசெய்தல் வேண்டும்.

02. சந்தை முறைமையில் எந்தப் பொருளை எந்தளவு உற்பத்திசெய்ய வேண்டும் என்பது,
1) அரசாங்கத்தின் நெறிப்படுத்தல்கள் மூலம் தீர்மானிக்கப்படுகின்றது.
2) உற்பத்தியாளர்களின் சுய விருப்பத்திற்கு ஏற்ப தீர்மானிக்கப்படுகின்றது.
3) நுகர்வோரின் செலவுக்கோலத்தை அடிப்படையாகக்கொண்டு நிர்ணயிக்கப்படுகின்றது.
4) ஒரு பகுதி அரசாங்கத்தின் தீர்மானங்கள் மூலமும், மறுபகுதி தனியாரின் தீர்மானங்கள் மூலமும் மேற்கொள்ளப்படுகின்றது.
5) நுகர்வோர் தமது தேவைகளைத் தாமே உற்பத்திசெய்வதன் மூலம் தீர்மானிக்கப்படுகின்றது.

03. A - B ஆகிய இரு பண்டங்களை மட்டும் உற்பத்திசெய்யும் ஒரு பொருளாதாரத்தில் B பண்டத்திற்கான நுகர்வோர் முன்னுரிமை அதிகரித்து அதன் உற்பத்தி அதிகரித்துள்ளது. இது,
1) உற்பத்திச் சாத்தியவளையியை B பண்டம் சார்பாக வலப்புறம் பெயர்ச்சியடையச் செய்யும்.
2) உற்பத்திச் சாத்தியவளையியை முழுவதும் வலப்புறமாகப் பெயர்ச்சியடையச் செய்யும்.
3) உற்பத்திச் சாத்தியவளையியின் வழியே உற்பத்திப்புள்ளி A பண்டம் குறைவடைய B பண்டம் அதிகரிக்கும் வகையில் அசைவுறும்.
4) உற்பத்திச் சாத்தியவளையி A பண்டம் சார்பாக உட்புறம் பெயர்ச்சியடைய B பண்டம் சார்பாக வெளிப்புறம் பெயர்ச்சியடையும்.
5) உற்பத்திச் சாத்தியவளையியின் உட்புறமான புள்ளியிலிருந்து வளையியை நோக்கி நகர்வு காணப்படும்.

04. x,y ஆகிய இரு பண்டங்களை மட்டும் உற்பத்திசெய்யும் எளிய பொருளாதாரம் ஒன்றிற்கான பொருட்சேர்க்கைகளைப் பின்வரும் அட்டவணை காட்டுகிறது.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| x பண்டம் (அலகு) | 0 | 14 | 26 | 36 | 44 | 50 | 54 | 56 | 57 |
| y பண்டம் (அலகு) | 24 | 21 | 18 | 15 | 12 | 9 | 6 | 3 | 0 |

இப் பொருளாதாரம் பற்றிய சில கூற்றுக்கள் பின்வருமாறு:
அ. அமையச் செலவுகள் அதிகரித்துச் செல்கின்றன.
ஆ. அமையச் செலவுகள் மாறாதிருக்கின்றன.
இ. அமையச் செலவுகள் குறைந்து செல்கின்றன.
ஈ. 57 ஆவது x பண்டத்தை உற்பத்தி செய்வதற்கான அமையச்செலவு 3 அலகு y பண்டம்.
இக்கூற்றுக்களுள் சரியானது,
1) அ, ஆ மட்டும். 2) ஆ மட்டும். 3) இ, ஈ மட்டும்.
4) ஈ மட்டும். 5) அ மட்டும்.

05. நிறைபோட்டிச் சந்தை உற்பத்தியில் பண்டம் ஒன்றிற்கான கேள்வி, வழங்கல் அட்டவணைகள் பின்வருமாறு (மில் அலகு) :

| விலை (ரூபா) | கேள்வித்தொகை/ மாதம் | வழங்கல் தொகை/ மாதம் |
|---|---|---|
| 50 | 90 | 35 |
| 15 | 70 | 55 |

இப் பண்டம் பற்றிய சரியான கூற்று பின்வருவனவற்றுள் எது?
1) சந்தைச்சமநிலை விலை ரூபா 5இற்கும் ரூபா15 இற்குமிடையில் காணப்படும்.
2) சந்தைச்சமநிலை விலை ரூபா 5 இற்குக் குறைவாகக் காணப்படும்.
3) சந்தைச்சமநிலை விலை ரூபா 15 இற்குக் கூடியதாகக் காணப்படும்.
4) இப் பண்டத்திற்கு உறுதியற்ற சந்தைச்சமநிலை காணப்படும்.
5) இப் பண்டத்தின் கேள்வித்தொகையும் நிரம்பற் தொகையும் எந்தவொரு விலையிலும் சமப்படமாட்டாது.

06. தரப்பட்டுள்ள அட்டவணை வெவ்வேறு வெளியீட்டு மட்டங்களில் நிறுவனம் ஒன்றின் மொத்தச் செலவுகளைக் காட்டுகின்றது.

| வெளியீடு | மொத்தச் செலவு (ரூபா) |
|---|---|
| 0 | 1500 |
| 1 | 1700 |
| 2 | 1850 |
| 3 | 1950 |

வெளியீடு 3 அலகுகளாக இருக்கும்போது சராசரி மாறும் செலவு (AVC), எல்லைச்செலவு (MC) என்பவற்றைத் தெரிவுசெய்க.
1) AVC ரூபா 150, MC ரூபா 100. 2) AVC ரூபா 150, MC ரூபா 450.
3) AVC ரூபா 650, MC ரூபா 100. 4) AVC ரூபா 650, MC ரூபா 450.
5) AVC ரூபா 450, MC ரூபா 100.


07. கைத்தொழில் ஒன்றின் மாதாந்த வெளியீட்டில் தற்பொழுது 10,000 அலகுகள் விற்பனை செய்யப்படுகின்றன. முன்னைய அனுபவங்களின்படி இப் பண்டத்திற்கான கேள்வியின் விலை நெகிழ்ச்சி -1.5. இக் கைத்தொழில் விலையை ரூபா 1 இலிருந்து ரூபா 0.9 ஆகக் குறைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஏனைய காரணிகள் மாறாத நிலையில் தற்பொழுது இக் கைத்தொழிலில் எதிர்பார்க்கப்படும் விற்பனை (அலகுகள்) எத்தனை?
1) 6,500 2) 10,500 3) 11,000
4) 11,500 5) 9,500

08. பின்வரும் கூற்றுக்கள் தனியுரிமைப் போட்டிச்சந்தை பற்றியவை. சரியான கூற்றைத் தெரிவு செய்க. நீண்டகாலச் சமநிலையில் நிறுவனம் ஒன்று,
1) இழிந்தமட்டச் சராசரிச் செலவுள்ள வெளியீட்டு மட்டத்தை உற்பத்திசெய்யும்.
2) இழிந்தமட்டச் சராசரிச் செலவுள்ள வெளியீட்டு மட்டத்திலும் குறைந்த உற்பத்தியை உற்பத்தி செய்யும்.
3) இழிந்தமட்டச் சராசரிச் செலவுள்ள வெளியீட்டு மட்டத்திலும் கூடிய உற்பத்தியை மேற்கொள்ளும்.
4) இழிந்தமட்ட எல்லைச்செலவு காணப்படும் வெளியீட்டு மட்டத்தை உற்பத்தி செய்யும்.
5) இழிந்தமட்டச் சராசரி மாறும்செலவு காணப்படும் வெளியீட்டு மட்டத்தை உற்பத்தி செய்யும்.

09. இசைநிகழ்ச்சி அரங்கில் ஆசனங்களின் எண்ணிக்கை 800. வேறுபட்ட கட்டணங்களில் பிரபல பாடகரின் இசைநிகழ்ச்சிக்கான கேள்வியை வரைபு காட்டுகின்றது.
நிகழ்ச்சி அமைப்பாளர் வரைபில் காட்டப்பட்ட ஒரு விலையைத் தெரிவுசெய்வார். இசைநிகழ்ச்சிக்கான சந்தைச்சமநிலை விலை, நெகிழ்ச்சி அமைப்பாளர் ஆகக்கூடிய வருமானத்தைப் பெறத் தெரிவுசெய்யும் விலை என்பன முறையே,

SPECIAL GUIDE FOR 2010 A/L ARTS, COMMERCE STUDENTS

1) ரூபா 6, ரூபா 8.
2) ரூபா 4, ரூபா 6.
3) ரூபா 6, ரூபா 10.
4) ரூபா 8, ரூபா 6.
5) ரூபா 4, ரூபா 10.




10. சந்தையில் குறித்த பண்டம் ஒன்றிற்கான கேள்வி, நிரம்பல் ஆகிய இரண்டும் விலை சார்பாக ஒருமை நெகிழ்ச்சியுடையன. இப் பண்டத்தின் நிரம்பல் வளையி இடப்புறம் பெயர்ச்சியடையும் ஆயின், யாது நிகழும்?
1) விலை மாற்றமின்றி இருக்கும்.
2) விற்பனைத்தொகை அதிகரிக்கும்.
3) விலை அதிகரிக்கும். ஆனால், நிரம்பலாளரின் வருமானம் மாற்றமின்றி நிலையாக இருக்கும்.
4) விலை அதிகரிக்கும். ஆனால், விற்பனைத்தொகை மாற்றமின்றி நிலையாக இருக்கும்.
5) விலை அதிகரிக்கும். அத்துடன் குறித்த பண்டத்தின் மீதான நுகர்வோர் செலவும் அதிகரிக்கும்.

11. X எனும் பண்டத்திற்கான வாராந்தக் கேள்வி நிரம்பல் அட்டவணை பின்வருமாறு:
இப்பண்டத்தின் மீது அரசாங்கம் அலகு ஒன்றிற்கு 3 ரூபாவை விற்பனை வரியாக விதித்துள்ளது எனக் கருத்திற்கொள்க. வரிவிதிப்பிற்குப் பின் X இன் சந்தைச்சமநிலை விலை யாது?

1) ரூ. 12.00
2) ரூ. 11.00
3) ரூ. 10.00
4) ரூ. 9.00
5) ரூ. 8.00

| விலை (ரூபா) | கேள்வி (மில்.) | நிரம்பல் (மில்.) |
|---|---|---|
| 12 | 60 | 160 |
| 11 | 70 | 130 |
| 10 | 80 | 110 |
| 9 | 90 | 90 |
| 8 | 100 | 70 |

12. பொருளாதாரம் ஒன்றில் மொத்தக் கேள்வி என்பது பின்வருவனவற்றுள் எதைக் குறிக்கும்?
1) சந்தையில் பண்டம் ஒன்றிற்கான தனிநபர் கேள்விகளின் கூட்டுமொத்தத்தினைக் குறிக்கின்றது.
2) பணத்திற்கான உத்தேச நோக்கக் கேள்வியைக் குறிக்கின்றது.
3) முழுப் பொருளாதாரத்திற்குமான திட்டமிட்ட எல்லாச் செலவீடுகளினதும் கூட்டுமொத்தத்தைக் குறிக்கும்.
4) காரணிச் சந்தையில் உற்பத்திக் காரணிகளுக்கான வழிவந்த கேள்வியைக் குறிக்கும்.
5) ஒரு பொருளாதாரத்தில் வீட்டுத்துறையினரின் நுகர்வுப் பண்டங்கள் மீதான திட்டமிடப்பட்ட செலவீட்டைக் குறிக்கும்.

13. அரச செயற்பாடுள்ள மூடப்பட்ட பொருளாதாரம் சமநிலையிலுள்ளது. அங்கு அரசாங்க வரவு-செலவுத் திட்டம் பற்றாக்குறை நிலையில் காணப்படுகின்றது. பின்வருவனவற்றுள் எது இப் பொருளாதாரம் பற்றிய கூற்று?
1) முதலீட்டிலும் பார்க்க சேமிப்புக் கூடுதலாக இருக்கும்.
2) சேமிப்பும், முதலீடும் சமனாக இருக்கும்.
3) சேமிப்பும், வரியும் சமனாக இருக்கும்.
4) மொத்த வெளிப்பாய்ச்சல்களிலும் பார்க்க மொத்த உட்பாய்ச்சல்கள் கூடுதலாக இருக்கும்.
5) வரி வருமானத்திலும் பார்க்க அரசாங்கச் செலவு குறைவாக இருக்கும்.

14. ஒரு பொருளாதாரத்தில் தேசிய வருமானம் அதிகரித்துச்செல்லும்போது எல்லை நுகர்வு நாட்டமும் (MPC) அதிகரித்துச்செல்லும். பின்வரும் கூற்றுக்களுள் சரியானதைத் தெரிவுசெய்க.
1) எல்லைச்சேமிப்பு நாட்டம் அதிகரித்துச்செல்லும்.
2) எல்லைச்சேமிப்பு நாட்டம் மாறாதிருக்கும்.
3) மொத்த வெளிப்பாய்ச்சல்கள் அதிகரித்துச்செல்லும்.
4) பெருக்கியின் பருமன் கூடிச்செல்லும்.
5) பெருக்கியின் பருமன் குறைந்துசெல்லும்.

15. பின்வருவனவற்றுள் எது ஒரு நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியைக் குறிக்கின்றது?
1) குறித்த ஆண்டில் ஒரு நாட்டின் புவியியல் எல்லைக்குள் இடம்பெற்ற அனைத்து விற்பனைகளினதும் [illegible]றுமதி.
2) குறித்த ஆண்டில் ஒரு நாட்டின் மொத்தத் தேசிய உற்பத்தியிலிருந்து பெறுமானத் தேய்வைக் கழிப்பதன் மூலம் பெறப்படுவது.
3) குறித்த ஆண்டில் ஒரு நாட்டின் மொத்தத் தேசிய உற்பத்தியுடன் வெளிநாடுகளுக்கு அனுப்பிய காரணி வருமானங்களைக் கூட்டி, வெளிநாடுகளிலிருந்து பெற்ற காரணி வருமானங்களைக் கழிப்பதன் மூலம் பெறப்படுவது.
4) குறித்த ஆண்டில் ஒரு நாட்டின் மொத்தத் தேசிய செலவுடன் தேறிய பொருள்கள் காரணியல்லாத சேவைகளின் ஏற்றுமதியைக் கூட்டுவதன் மூலம் பெறப்படுவது.
5) குறித்த ஆண்டில் ஒரு நாட்டின் புவியியல் எல்லைக்குள் இடம்பெற்ற நுகர்வுச் செலவீட்டினதும், முதலீட்டுச் செலவினதும் கூட்டுமொத்தம்.

16. ஓர் எளிய பொருளாதாரத்தில் வருமானம், நுகர்வுச்செலவு என்பவற்றைப் பின்வரும் அட்டவணை காட்டுகின்றது. இப் பொருளாதாரத்திற்கான நுகர்வுத் தொழிற்பாடு,

1) $C = -60 + 0.3Y$
2) $C = 60 + 0.3Y$
3) $C = 60 + 0.7Y$
4) $C = -60 + 0.7Y$

| வருமானம் (மில்.ரூபா) | நுகர்வு (மில்.ரூபா) |
|---|---|
| 0 | 60 |
| 100 | 130 |
| 200 | 200 |
| 300 | 270 |
| 400 | 340 |

17. கேள்விப் பற்றாக்குறை (Demand Deficit) காரணமாக வேலையின்மை காணப்படும் ஒரு பொருளாதாரத்திற்குப் பொருத்தமான இறைக்கொள்கை நடவடிக்கை யாது?
1) வட்டிவீதத்தைக் குறைப்பதன் மூலம் முதலீட்டை அதிகரிக்கச்செய்தல்.
2) வரவு-செலவுத் திட்டத்தில் அரசாங்கச் செலவீனங்களைக் குறைத்தல்.
3) அரசாங்கம் வரவு-செலவுத்திட்டப் பற்றாக்குறைக்கு உள்நாட்டுச் சந்தையில் கடன்பெறுதலை அதிகரித்தல்.
4) அரசாங்கம் முதலீட்டாளர்களுக்கு வரிச்சலுகைகள், வரி விடுதலைகள் போன்றவற்றை வழங்குதல்.

18. அரசாங்கம் வரவு-செலவுத் திட்டக் கொள்கையின் ஊடாகப் பொருளாதார வளர்ச்சி உத்வேகத்தினை விரைவுபடுத்துவதற்காக மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளுள் ஒன்று,
1) பொருளாதாரத்தில் தனியார்துறையின் பங்கினை விட அரசாங்கத்தின் பங்கினை அதிகரித்தல்.
2) பௌதீக உட்கட்டமைப்பினையும், மனித மூலதனத்தினையும் மேம்படுத்தும்பொருட்டு பொது முதலீட்டினை அதிகரித்தல்.
3) பற்றாக்குறையினை நிதியீட்டம் செய்வதற்கு உள்நாட்டுச் சந்தையில் அரசாங்கம் பெருமளவு தங்கியிருத்தல்.
4) மொத்த அரசிறையை மேம்படுத்தும் பொருட்டு முதலீட்டாளர்கள் மீதான வரிவீதங்களை அதிகரித்தல்.
5) உயர் வருமானங்களைப் பெறுபவர்கள் மீது விருத்திமுறை வரிகளை விதித்தல்.

(13 ஆம் பக்கம் பார்க்க்)

தொகுப்பு:- திரு.S.விவேகானந்தன் B.A.(Hons), Dip.in.Edu,
திருகோணமலை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பொருளியல், பகுதி I : தொடர்ச்சி....

19. பின்வரும் கூற்றுக்களுள் நீர் ஏற்றுக்கொள்ள முடியாத கூற்றினைத் தெரிவுசெய்க.
   1) வரவு-செலவுத்திட்டப் பற்றாக்குறை எப்போதும் பணவீக்க விளைவினை ஏற்படுத்தும்.
   2) தூய பொதுப்பண்டங்களை ஓர் அரசாங்கம் மட்டுமே வழங்கமுடியும்.
   3) நடப்புச் செலவீனங்கள் முழுவதும் பொது நுகர்வாகத் தேசிய வருமானக் கணக்கீட்டில் சேர்த்துக்கொள்ளப்படுவதில்லை.
   4) அரசாங்கச் சேமிப்பு அரசின் மூலதனச் செலவின் ஒருபகுதியை நிதிப்படுத்த உதவும்.
   5) அரசாங்கச் செலவீடு இறைக்கொள்கையின் ஒரு கருவியாகும்.

20. வருமான வரி விதிக்கத்தக்க ஆகக்குறைந்த வருமான் எல்லை யாது?
   1) 300,000    2) 350,000    3) 400,000
   4) 450,000    5) 600,000

## பகுதி - II

* இப் பகுதியிலுள்ள 'அ' பிரிவிலிருந்து இரண்டு வினாக்களையும் 'ஆ' பிரிவிலிருந்து இரண்டு வினாக்களையும் தெரிந்து எல்லாமாக நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை அளிக்குக.

### பிரிவு 'அ'

01. எல்லாச் சமூகங்களும் சில பொதுவான இயல்புகளைக் கொண்டிருப்பதே அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினையான சாதன ஒதுக்கீட்டுப்பிரச்சினைக்கு காரணமாகும். இக்கூற்றின் மூலம் நீர் விளங்கிக்கொள்வது யாது?
   அ. உற்பத்தியில் தனியார் செலவுகளும், சமூகச்செலவுகளும் வேறுபடும் சந்தர்ப்பங்களில் சந்தை முறைமையின் கீழ் சாதன ஒதுக்கீடு சமூகரீதியில் உத்தமமட்டத்தை (Optimum Level) அடைவதில்லை.
      1) சமூகரீதியில் உத்தம மட்ட சாதன ஒதுக்கீடு என்றால் என்ன?
      2) எச்சந்தர்ப்பத்தில் உற்பத்தியில் தனியார் செலவுகளும், சமூகச்செலவுகளும் வேறுபடக்கூடும்?
      3) உற்பத்தியில் தனியார் செலவுகள், சமூகச்செலவுகள் என்பவற்றை பொருத்தமான உதாரணம் ஒன்றைப்பயன்படுத்தி வேறுப்டுத்துக.
      4) உற்பத்தியில் தனியார் செலவுகளும், சமூகச்செலவுகளும் வேறுபடும் சூழ்நிலையில் சந்தை முறைமையின் தொழிற்பாடு எங்ஙனம் காணப்படும் என்பதை வரிப்படம் ஒன்றைப் பயன்படுத்திச் சுருக்கமாக விளக்குக.

02. பின்வரும் கூற்றுக்களை ஏற்றுக்கொள்வீரா? உமது விடையைச் சுருக்கமாக விளக்குக.
   அ. சமாந்தரமான இரு கேள்வி வளையிகளில் குறித்த விலையில் நெகிழ்ச்சியும் சமமாக இருக்கும்.
   ஆ. சரிந்து செல்லும் நேர்கோட்டுக்கேள்வி வளையியின் வழியே சாய்வு மாறாதிருக்கும் எனவே, நெகிழ்ச்சியும் மாறாதிருக்கும்.
   இ. ஏனையவை மாறாநிலையில் பண்டம் ஒன்றின் விலை வீழ்ச்சியடையும்போது வருமான விளைவு எதிர்க்கணியமாகவுள்ள எல்லாப்பண்டங்களும் கிபன் பண்டங்களாகும்.
   ஈ. பண்டம் ஒன்றின் மீது அலகு ரீதியான விற்பனை வரி விதிக்கப்படும்போது கட்டாயம் அதன் விலை அல்லது தொகை அல்லது இரண்டும் மாற்றமடையும்.
   உ. கேள்வி நெகிழ்ச்சியுள்ள பண்டம் ஒன்றை விற்பனை செய்யும் வர்த்தகர் ஒருவர் அதன் விலையை அதிகரிப்பதன் மூலம் தனது சொந்த விற்பன்ன வருமானத்தை அதிகரிக்க முடியுமா?

03. அ. எல்லை வருமானம் (MR) சராசரி வருமானம் (AR) என்பவற்றை வேறுபடுத்துக.
   ஆ. மேலே (அ)இல் உள்ள இரு வளையிகள் தொடர்பாக நிறைபோட்டி நிறுவனமொன்றிற்கும் தனியுரிமைப்போட்டி நிறுவனம் ஒன்றுக்கும் இடையிலான வேறுபாடுகளை வரிப்படங்களைப் பயன்படுத்தி விளக்குக.
   இ. ஏனையவை மாறாத நிலையில் பண்டம் ஒன்றின் விலை அதிகரித்தால் அதன் கேள்வியின் அளவு குறைவடையும் ஆனால், அதன் கேள்வி அதிகரித்தால் விலை உயர்வடையும் இவ் இரு கூற்றுக்களையும் வரிப்படங்களைப்பயன்படுத்தி சுருக்கமாக விளக்குக.

04. பின்வரும் கூற்றுக்களுக்கு எவ்வாறு விளக்கமளிப்பீர்?
   (தேவையான இடங்களில் வரிப்படங்களைப் பயன்படுத்துக.)
   அ. நிறுவனம் ஒன்று வெளியீட்டை மேலும் ஓரலகால் அதிகரிக்கும்போது மொத்தச்செலவில் ஏற்படும் செலவு மாற்றமடையமாட்டாது.
   ஆ. நிறைபோட்டி நிறுவனம் ஒன்றின் குறுங்கால நிரம்பல் வளையி அதன் எல்லைச்செலவு வளையியாகும். ஆயினும், எல்லைச்செலவு வளையியின் முழு வீச்சும் அதன் நிரம்பல் வளையி அல்ல.
   இ. குறுங்காலச் சராசரிச்செலவு வளையியும் நீண்டகாலச் சராசரிச்செலவு வளையியும் U வடிவில் காணப்படுகின்றன. ஆயினும், அவற்றின் வடிவத்திற்கான காரணங்கள் வேறுபட்டவை ஆகும்.

### பிரிவு 'ஆ'

05. அ. குறித்த ஆண்டிற்கான ஒரு நாட்டின் தேறிய உற்பத்தியை தேசிய வருமானம் செலவீட்டு அணுகுமுறையில் எவ்வாறு பெறலாம் என்பதை கருதுகோள் ரீதியான புள்ளி விவரங்களைப்பயன்படுத்தி அட்டவணை மூலம் காட்டுக.
   ஆ. ஒரு நாட்டின் உண்மையான உற்பத்தியைத் தேறிய கணக்குகள் குறைத்து மதிப்பீடு செய்யும் சந்தர்ப்பங்களைக் குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக.
   இ. சேமிப்பு ஒரு நாட்டின் தேறிய வருமானத்தின் மீது குறுங்காலத்திலும், நீண்டகாலத்திலும் முரண்பட்ட வகையில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. இக்கூற்றின் மூலம் நீர் விளங்கிக் கொள்வது யாது?

06. கருதுகோள் ரீதியாக மூடப்பட்ட பொருளாதாரமொன்று தொடர்பான தகவல்கள் வழமையான குறியீடுகளுடன் கீழே தரப்பட்டுள்ளது.
   C = 200 + 0.6Yd    I = 10மில்.ரூபா
   G = 20 மில்.ரூபா    T = 20 மில.ரூபா (தொகையீட்டு வரி)
   அ. இப்பொருளாதாரத்திற்கான வருமானம் (Y)0,50,150 மில்லியன் ரூபாய்களில் மொத்தச் செலவீட்டு (E) அட்டவணையைத் தயாரித்து வரைபுத்தாளில் சமனிலைத் தேசிய வருமான மட்டத்தைக் காட்டுக.
   ஆ. நீர் வரைந்த அதே வரைபடத்தில் வெளிப்பாய்ச்சல் (W) உட்பாய்ச்சல் (J) என்பவற்றுக்கான வளையிகளை வரைந்து சமனிலைத்தேசிய வருமான மட்டத்தை காட்டுக.
   இ. அரசாங்க செலவீடு (G) 12 மில்லியன் ரூபாவால் அதிகரிக்கப்படுமாயின் சமனிலைத் தேசிய வருமான மட்டத்தில் எத்தகைய மாற்றம் ஏற்படும்?

07. அ. 1) பொதுப்பண்டங்களை ஏன் இலவச சவாரிக்குரிய பண்டங்கள் (Free Rider goods) எனக் கூறப்படுகின்றன?
      2) கல்வி ஒரு பொதுப்பண்டம் என்பதனாலேயே அரசாங்கம் அவற்றை வழங்கவேண்டி உள்ளது. இக்கூற்றை ஏற்றுக்கொள்வீரா? உமது விடையை விளக்குக.
   ஆ. மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான வரி விகிதம் தொடர்பாக இலங்கை அபிவிருத்தி அடைந்த மற்றும் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுடன் ஒப்பிடுமிடத்து நியம அளவுகளுக்கும் குறைவாக இருக்கின்றது.
      1) அபிவிருத்தி அடைந்த நாடுகளிலும், அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளிலும் இலங்கையிலும் மேற்கூறப்பட்ட விகிதம் எவ்வளவாகக் காணப்படுகின்றது?
      2) வரி மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதம் இலங்கையில் குறைவடைந்து வந்தமைக்கான காரணங்கள் யாவை?

08. அ. இறைக்கொள்கை (Fiscal Policy) என்றால் என்ன? 2008இல் இலங்கையின் இறைக் கொள்கையில் கூடிய கவனத்தைப்பெற்ற விடயங்கள் யாவை?
   ஆ. அரசாங்க வரவு-செலவுத்திட்டத்தில் நடப்புக்கணக்குப் பற்றாக்குறை சமூலப் பற்றாக்குறை முதன்மைக்கணக்குப் பற்றாக்குறை என்பவற்றை வேறுபடுத்துக.
   இ. உயர்ந்தளவிலான வரவு செலவுத்திட்டப்பற்றாக்குறை நெருக்கடி வெளித்தள்ளுகை (Growding Out) விளைவை ஏற்படுத்தும் எனக்கூறப்படுவதன் மூலம் நீர் விளங்கிக் கொள்வது யாது?
   ஈ. 2006 - 2008ஆம் ஆண்டு காலப்பகுதியில் இலங்கை அரசாங்கத்தின் படுகடன் [illegible] விகிதத்தின் போக்கை இக் காலப்பகுதிக்குரிய விகிதங்களைக் குறிப்பிட்டுச் சுருக்கமாக உரைக்குக.

-நிறைவுற்றது-

## உயர்தர அளவையியல்: கற்றல் குறிப்புக்கள்

### பேட்றண்ட் செல் (1872-1970)

* இவர் ஆங்கிலேய தேசத்தைச் சேர்ந்த கணித அறிஞரும் தத்துவ அறிஞரும் ஆவார்.
* குறியீட்டு அளவையியல் முறையை உருவாக்கியவர்.
* கணித தத்துவங்கள் எனும் நூலின் மூலம் முதன் முறையாக எல்லோரது கவனத்தையும் ஈர்த்தவர். ஏ.என்.வைற்ஹட் எனும் அறிஞருடன் இணைந்து பிறின்சிபிபயா மதமற்றிக்கா எனும் நூலை வெளியிட்டார். இந்நூல் கணிதவியல் துறைக்கு அடிக்கல்லாகியது. அத்துடன் கணித அளவையியல் வளர்ச்சிக்கு உதவியது.
* தத்துவம், கல்வி, அரசியல், பாலுணர்வு என்பன தொடர்பாக 40 இற்கு மேற்பட்ட நூல்கள் எழுதி வெளியிட்டார்.
* அனுபவ விஞ்ஞானங்கள் பற்றி ஆராய்ந்து அனுபவ விஞ்ஞான முறைகளை செம்மையாக பயன்படுத்தக்கூடிய கருத்துக்களை விஞ்ஞான முறையில் கணித்தவர்.

### அரிஸ்ரோட்டில் (கி.மு 384-322)

* இவர் கிரேக்க தேசத்தைச் சேர்ந்த பழம்பெரும் அறிஞர், கல்விமான், ஒரு விஞ்ஞானியுமாவார்.
* இவரும் இவரின் குருவுமான பிளேற்றோவும் கிரேக்கத்தின் பழம் பெரும் தத்துவ அறிஞர்களாக கருதப்படுகின்றார்கள்.
* அளவையியல் முறைகளை முதன் முறையாக ஒழுங்காக விருத்தி செய்த காரணத்தினால் அளவையியலின் தந்தை அல்லது மூலகர்த்தா எனப்போற்றப்படுகின்றார். இவரது அளவையியல் மூன்று பகுதிகளாக வகுக்கப்பட்டுள்ளது.
   1. எண்ணக்கருக்களாலும் வரைவிலக்கணங்களாலும் விளங்கிகொள்பவை.
   2. எடுப்பு வடிவில் வெளிப்படுத்துபவை.
   3. அனுமானித்தல்.
* அரசியல் ஒழுக்கவியல் போன்ற பல்வேறு துறைகளினதும் ஆராய்ச்சியில் ஈடுபாடு கொண்ட இவர் நூற்றுக்கணக்கான நூல்களை வெளியிட்டவர். இதில் தர்க்க நூல் முதலிடம் வகிக்கின்றது.
* இவர் அனுபவ ரீதியான ஆய்வுகளை திட்டமிட்டு ஒழுங்கமைத்து இயற்கை விஞ்ஞானத்தின் பல கண்டுபிடிப்புக்களுக்கு வழிவகுத்தார். இவரது பிரதான பங்களிப்பு மெய்யியல் துறைக்குரியது ஆகும். இவர் மெய்யியலை செய்வினைப் பகுதி, செயற்பாட்டுப் பகுதி என இரண்டாக வகைப்படுத்தினார்.

### தோமஸ் கூன் (1922 - )

* இவர் அமெரிக்காவைச் சேர்ந்த மெய்யியலாளர்.
* நவீன விஞ்ஞான வரலாற்றில் தனது கோட்பாடு பற்றிய கருத்தினை பயன்படுத்தினார். அதாவது, ஏதேனுமொரு அடிப்படை வாதத்தினை ஆதாரமாகக்கொண்டு விஞ்ஞானம் கட்டி எழுப்பப்படுவதாகவும், விஞ்ஞான பிரச்சினைகளும் பரிசோதனைகளும் அந்தந்த அடிப்படை வாதத்திற்கு தொடர்பாக அமைவதால் பொது முறையாகவும் இடைவிடாது தொடர்ந்து வரும் வளர்ச்சியும் அவ்வடிப்படை வாதத்தின் மாற்றத்தால் விஞ்ஞான ரீதியாக புரட்சியும் இடையிடையே நடைபெறுவது விஞ்ஞான வளர்ச்சி ஊடாக காணப்படும் தன்மையாகும். இதனால் இடையின்றி வளர்ச்சியடைந்து வருகின்ற பொது முறையொன்று இல்லாது இருப்பது விஞ்ஞானத்தின் உட்கிடை ஆகும் என்றார்.

### பிளேட்டோ (கி.பி 427-347 )

* இவர் கிரேக்க தேசத்தைச் சேர்ந்த உலக புகழ்பெற்ற அறிஞர், தத்துவயியலாளர், கல்விமான்.
* இவர் சோக்கிரடிஸின் முதல் மாணவர். அரிஸ்டோட்டில் எனும் தத்துவ ஞானியின் குரு.
* இவர் பல நூல்களையும், கடிதங்களையும் எழுதியுள்ளார். இவரது நூல்கள் பெரும்பாலும் உரையாடல் வடிவில் அமைந்திருக்கும். உரையாடலானது இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்டவர்கள் சம்பாசிப்பதாக இருக்கும். இவ்வாறு நாடக பாணியில் அமைந்த 25 இற்கு குறையாத உரையாடல்களை எழுதியுள்ளார். இவ்வாறான உரையாடல்களின் மூலம் இவர் தனது தத்துவ கருத்துக்களை வெளியிட்டார். தத்துவ விவாதங்களை மேற்கொண்டார்.
* நீதி, சட்டம், கல்வி முறைகள், அரசியல் முறைகள் பற்றி முதன் முறையாக சிந்தித்து அவை தொடர்பாக பல கருத்துக்களை வெளியிட்ட சிந்தனையாளர்.
* தத்துவம், கணிதம் என்பவற்றை கற்பிப்பதற்கான ஒரு பாடசாலை அமைப்பொன்றினை நிறுவி தமது இறப்பு காலம் வரை அங்கு போதனைகளை நடத்தினார்.

### ஜே.சி.போஸ்/சந்திரபோஸ் (1858-1937)

* இவர் இந்திய நாட்டைச் சேர்ந்த பௌதிகவியல் அறிஞரும் தாவரவியல் அறிஞரும் ஆவார்.
* இவரது முதல் ஆராய்ச்சி மின்சார கதிர்ப்பு பற்றியதாகும். மின்சாரம், ஒளி என்பன தொடர்பாகவும் ஆய்வுகள் மேற்கொண்டவர்.
* தாவரங்களின் வளர்ச்சி பற்றிய ஆய்விற்கு உதவியவர். தாவரங்களிலே உறக்கம், காற்று, மருந்துகள், கிளர்ச்சி, உள்தூண்டல் என்பவற்றால் உண்டாகும் விளைவுகளை எடுத்துக்காட்ட கருவிகளை அமைத்தவர். இவர் அமைத்த "கிறெஸ்கோகிறாப்" (10 மில்லியன்) வளர்ச்சிப் பதிவுக்கருவி தாவரங்களின் வளர்ச்சியை 1,00,00,000 மடங்கு பெரிதாக்கி காட்டக்கூடியது. இது உலக புகழ்பெற்ற ஒரு கருவியாகும்.
* விலங்குகளைப் போலவே தாவரங்களும் தூண்டல் பேறுகளை காட்டுகின்றது என்பதை முதன் முதலில் விளக்கியவர்.
* கல்கத்தாவில் "போஸ் ஆராய்ச்சி நிலையம்" ஒன்றை நிறுவினார்.

### சி.வி.இராமன் (1888-1970)

* இவர் உலகப் பிரசித்தி பெற்ற இந்திய பௌதிகவியலறிஞர்.
* அணுக்களைப் பற்றியும் ஒளியைப்பற்றியும் ஆராய்ந்து பல உண்மைகளைக் கண்டறிந்தார்.
* இராமன் விளைவு என்பதனைக் கண்டுபிடித்தார். ஒளியை புகவிடக்கூடிய திண்ம அல்லது திரவ அல்லது வாயு ஊடகத்தின் ஊடாக ஒளியை செலுத்தும்போது அது சிதறலடைந்து அவற்றின் அலை நீளம், அதிர்வெண் என்பவற்றில் மாற்றம் ஏற்படுகின்றது. இம்மாற்றமே இராமன் விளைவு எனப்படுகிறது.
* பௌதிகவியல் மேற்கொண்ட ஆய்வுகளுக்காக நோபல் பரிசு பெற்றார்.
* கடல்நீர் ஏன் நீல நிறமாக தோன்ற வேண்டும் என்பதற்கான காரணங்களைப் பரிசோதனை மூலம் நிறுவிக்காட்டினார். இதே போன்று கனடா சென்றபோது பனி [illegible] பச்சையும் நீலமும் சார்ந்த நிறத்தை தோற்றிவிப்பதற்கு சூரிய ஒளியே காரணம் குறிப்பிட்டார்.

(வளரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்களின் அரசியல் கட்சி என்பதால்தான் ஜனநாயக முன்னணியை ரணில் ஏமாற்றுகிறார்

## ஐ.ம.முன்னணியின் மனோ கணேசன் சீற்றம்

கொழும்பு, மே.04

தமிழர்களின் அரசியல் கட்சியாக ஜனநாயக மக்கள் முன்னணி விளங்குவதாலேயே தேசியப் பட்டியல் எம்.பி. நியமனத்தைத் தருகின்ற விடயத்தில் ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க மாற்றாந்தாய் மனப்பான்மையோடு நடக்கின்றார் என்று ஜனநாயக மக்கள் முன்னணித் தலைவர் மனோகணேசன் குற்றஞ் சாட்டியுள்ளார்.

தேசியப் பட்டியல் எம்.பி. நியமன விவகாரத்தால் ஐ.தே.கவுக்கும் ஜனநாயக மக்கள் முன்னணிக்கும் இடையில் ஏற்பட்டிருக்கும் முறுகல் நிலை குறித்து 'ஏஷியன் ரிபியூன்' இணையத் தளத்துக்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் இவ்வாறு குறிப் பிட்டுள்ளார்.

அப் பேட்டியில் மனோ கணேசன் மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:-

ஜனநாயக மக்கள் முன்னணி தமிழ் மக்களின் அரசியல் கட்சி ஆகும். சிங்களவர்களையோ அல்லது முஸ்லிம்களையோ பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சி அல்ல. இக்காரணத்தாலேயே எமது கட்சிக்குத் தேசியப் பட்டியல் எம்.பி. நியமனம் வழங்குவதில் மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் ரணில் விக்கிரமசிங்க நடக்கின்றார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஜனநாயக மக்கள் முன்னணி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி - மக்கள் பிரிவு ஆகியன ஐ.தே.கவுடன் கூட்டுச் சேர்ந்து ஐக்கிய தேசிய முன்னணியை அமைத்தன.

இக்கூட்டுக்கான பேச்சுகளின் போது இம்மூன்று கட்சிகளுக்கும் தலா ஒரு தே[illegible]ப் பட்டியல் எம்.பி. நியமனம் வழங்கப்படுமென ஐ.தே.க. வாக்குறுதி அளித்தது. அதன்படி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி - மக்கள் பிரிவு ஆகியவற்றுக்குத் தேசியப் பட்டியல் நியமனங்களை வழங்கியுள்ளது.

ஆனால் எமக்கு வழங்கிய வாக்குறுதியைக் காற்றில் பறக்க விட்டுவிட்டது. ஜனநாயக மக்கள் முன்னணியுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தைக் கௌரவிக்க ஐ.தே.க. தலைவர் தவறிவிட்டார்.

நாம் சிங்களவர்கள் அல்லது முஸ்லிம்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்திருந்தால் இப்படி அவர் குத்துக்கரணம் அடித்திருக்க மாட்டார். (அ-சி)

# இந்திய காங்கிரஸ் பாணியில் ஐ.தே.கவில் கூட்டுத் தலைமை

## ரணில் விக்கிரமசிங்கவுக்கு நெருக்கடி வலுக்கிறது

கொழும்பு, மே 04

இந்திய - காங்கிரஸ் கட்சியின் தலைமைத்துவப் பாணியை ஐக்கிய தேசியக் கட்சியும் பின்பற்றலாம் என கட்சி வட்டாரங்களை மேற்கோள்காட்டி செய்திகள் வெளியாகியுள்ளன.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவம் கடும் நெருக்கடிக்குள்ளாகியுள்ள நிலையில், இந்தியக் காங்கிரஸ் கட்சியின் தலைமைத்துவப் பாணியை அது பின்பற்ற வேண்டும் என்ற கருத்தும் கட்சியின் ஒரு பிரிவினரால் முன்வைக்கப் படுகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியின் கடும் போக்காளர்கள், ரணில் விக்கிரமசிங்கவைத் தலைமைப் பொறுப்பிலிருந்து அகற்றிவிட்டு முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவின் மகன் சஜித் பிரேமதாஸவைத் தலைவராக நியமிக்க வேண்டும் என வாதிடுகின்றனர்.

இன்னுமொரு பிரிவினர் ரணில் விக்கிரமசிங்கவே தொடர்ந்தும் தலைவராக செயற்படவேண்டும் எனத் தெரிவித்து வருகின்றனர்.

இதேவேளை, இன்னுமொரு பிரிவினர் தலைமைத்துவப் பொறுப்பு பகிரப்பட வேண்டும் என்கின்றனர். இந்தியக் காங்கிரஸ் கட்சியின் தலைமைத்துவப் பாணியைப் பின்பற்றவேண்டும் என்பது அவர்களது கருத்து.

இந்தியாவில் ஆளும் காங்கிரஸ் கட்சியின் தலைமைப் பொறுப்பு சோனியா காந்தியிடம் உள்ளதுடன், அவரே கட்சியின் முக்கிய தீர்மானங்களை எடுக்கின்றார்.

எனினும், பிரதமர் பதவியை அவர் மன்மோகன் சிங்கிடம் ஒப்படைத்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் மிதவாதிகள், சஜித் பிரேமதாஸவினால் மாத்திரம் கட்சிக்குத் தலைமை தாங்கமுடியாது என்கின்றனர், எனினும், கிராமப்புற வாக்காளர்களைக் கவர்வதில் அவரது தந்தை போன்று திறமை வாய்ந்தவர் என்பதையும் அவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

அதேவேளை, சர்வதேச ரீதியில் செயற்படுவதற்கான ஆளுமை அவரிடம் இல்லாமையையும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதேவேளை, கிராமப்புற மக்களைக் கவர முடியாமல் போனதே ரணில் விக்கிரமசிங்கவின் பெரும் பலவீனம் என்று கூறப்படுகிறது.

அதேவேளை, ரணில் உலக நாடுகளைக் கையாள்வதில் திறமை மிகுந்தவர் என்றும், ரணில் கூட்டுத் தலைமைத்துவம் குறித்த இணக்கப்பாட்டிற்கு வந்து கட்சி எதிர்கொண்டுள்ள நெருக்கடிக்கு அவர் தீர்வைக் காணவேண்டும் என்றும் ஒரு கருத்து முன் வைக்கப்படுகிறது. (அ-சி)

## ஒன்பதாம் ஆண்டு நினைவலைகள்



மண் மடியில்: 04-04-1970

மனம் நெகிழ: 13-05-2001

அமரர்

### சுப்பிரமணியம் சதீஸ்குமார்

திதி: 04.05.2010

நெஞ்சினிலே நினைவு முகம்
நினைவில் தெரிவது ஆசை முகம்
ஒருயிர் என்று வாழ்ந்தவனே நீ!
ஓடி ஒழிந்தது தெரியவில்லை
இன்னுயிர் என்று வாழ்ந்தவனே - உன் துயர்
ஒன்பதாண்டுகள் சென்றும் மாறவில்லை
புத்துயிர் மூலம் ஒரு வாரிசாக நீ வந்திங்கே பிறக்காயோ?.

உங்கள் பிரிவால் துயருறும்: அப்பா - வி.சுப்பிரமணியம், அம்மா - சு.சித்திரா, தங்கைமார் - த.சதீஸ்வரி, ஈ.சதீஸ்கலா(சுவிஸ்), சு.சதீஸ்குமாரி, தம்பி - சு.சதீஸ்வரன் (லண்டன் பல்கலைக்கழகம்), அத்தான்மார் - ஆ.தங்கராசா, இ.ஈஸ்வரன் (சுவிஸ்), த.சுகுணன், மருமக்கள் - த.சபிதா, ச.சதீஸ்குமார், அக்சரா, சு.சாஜித்தியா, ஈ.அபிரித்தா, த.சாகித்தியன், மைத்துனி - ச.யாழினி (பேராதனைப் பல்கலைக்கழகம்), பெறாமகள் - ச.அஸ்னா ஆதிரா.

வல்லியாவத்தை, காரணவாய் மேற்கு, கரவெட்டி.

# ஆஸி. செல்ல முயன்ற 110 பேர் விடுவிப்பு

கொழும்பு, மே 04

சட்டவிரோதமான முறையில் ஆஸ்திரேலியாவை நோக்கிச் சென்று கொண்டிருந்தபோது கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 110 பேரையும் மாத்தறை நீதிமன்றம் தலா 20 ஆயிரம் ரூபா அபராதமும் ஆறு மாத காலத்துக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனையும் விதித்து கடந்த வெள்ளிக்கிழமை விடுதலை செய்தது.

சுமார் நான்கு மாதங்களுக்கு முன்னர் இவர்கள் காலி கடற்பரப்பில் வைத்துக் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டனர்.

இவர்கள் அனைவரும் கடந்த வெள்ளிக்கிழமை மாத்தறை பிரதம நீதிவான் உதேஷ் ரணதுங்க முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டபோது தமது குற்றத்தை ஒப்புக்கொண்டனர்.

இதனையடுத்து தலா 20 ஆயிரம் ரூபா அபராதமும், ஆறுமாத கால ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது எனத் தெரிவிக்கப்படுகிறது.

# 60 இலங்கையர் கொகோ தீவில் தடுப்பு

கொழும்பு, மே 04

படகு மூலம் புறப்பட்ட இலங்கையைச் சேர்ந்த 60 பேர் ஆஸ்திரேலிய நடுக்கடலில் தத்தளித்தபோது ஆஸ்திரேலிய சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வெள்ளியன்று ஆஸ்திரேலிய நேரப்படி மாலை 6 மணிக்கு பெண்கள், குழந்தைகள் உட்பட ஈழ அகதிகள் 60 பேர் ஆஸ்திரேலியக் கடல் எல்லைக்குள் கொகோ தீவுக்கு அருகாமையில் எரிபொருளின்றித் தத்தளித்தபோது ஆஸ்ரேலிய சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு கொகோதீவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என அங்கிருந்து வந்த தகவல்கள் தெரிவித்தன. (அ-சி)

# அரசுடன் பேச்சு நடத்தத் தயார் மு.காவின் தவிசாளர் தெரிவிப்பு

கொழும்பு, மே 04

அரசிடம் இருந்து உத்தியோக பூர்வமாக அழைப்பு விடுக்கப்படும் பட்சத்தில் அதைப் பரிசீலிக்க ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தயாராக இருக்கிறது - என்று அக்கட்சியின் தவிசாளர் பஷீர் சேகுதாவூத் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில் - மக்கள் நலன் கருதிய பேச்சுக்கு அரசிடம் இருந்து அழைப்பு விடுக்கப் படும்போது அதைப் பரிசீலிக்கத் தயாராக இருக்கிறோம் என்று கூறினார்.


## மாபிள் வகைகள் மலிவு விற்பனை

இறக்குமதி செய்யப்பட்ட உயர்தர மாபிள் வகைகள், கொமட் செட், சிங்வகைகள், பிளாஸ்ரிக் கதவு வகைகள், பைப் வகைகள், மர அடைப்புகள் மற்றும் இறக்குமதி செய் யப்பட்ட 'DUKE' பெயின்ற் வகைகள் என்பவற்றை மலிவான விலையில் பெற்றுக்கொள்ள.

ஸ்ரார் செராமிக்ஸ்

இல.05, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
021- 5672061, 077 7578277- ராஜா

(சி/567231)

இழந்த சக்தியை மீண்டும் பெற்றிடப் பாவியுங்கள்

றோயல் குளுக்கோஸ்

100%சுத்தமானது

உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும் போது குளுக்கோஸ் என்று கேட்காமல்

றோயல் குளுக்கோஸ் தாருங்கள் என்று கேட்டு வாங்குங்கள்

PACKED BY:
ROYAL Industries
Colombo 12, T.P 0777277670

அனைத்துப் பார்மஸிகளிலும் கடைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.




ஏக விநியோகஸ்தர்கள்:
சிவா
நறுமணீயம்
ஸ்டோர்ஸ்

288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

இலவசம்

அன்பார்ந்த வாடிக்கையாளர்களே!

எம்மிடம் 18 டசின் றோயல் குளுக்கோசினைக் கொள்வனவு செய்து 1000 ரூபாய் பெறுமதியான அழகிய வர்ண ரீ-சேட் ஒன்றினை முற்றிலும் இலவசமாய் பெற்றுக்கொள்ளவும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




16.12.1990

★ மாகாண சபைகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யும் பிரேரணை அங்கீகரிக்கப்படுவதை சில எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தடுக்க முயன்றபோது நாடாளுமன்றத்தில் நேற்று பெரும் கைகலப்பு ஏற்பட்டதாக பி.பி.ஸி வானொலி அறிவிப்பு.

★ சென்னையிலிருந்து மத்திய அரசுக்குக் கட்டளைகள் அனுப்பப்பட்ட காலம் முடிந்துவிட்டதெனவும், தேசியப் பிரச்சினைகளில் மத்திய அரசின் ஆலோசனையின்படியே இனிமேல் தமிழக அரசு செயற்படவேண்டுமெனவும் இந்தியப் பிரதமர் சந்திரசேகர் தெரிவிப்பு.

17.12.1990

★ ஜே.வி.பியின் புதிய தலைமைக்கு தென்னிந்தியாவில் இறுக்கமான தொடர்பு இருப்பதாகவும் இந்தியாவில் அதிகாரத்தில் உள்ளோரின் அரவணைப்பு அவர்களுக்குக் கிட்டியிருப்பதாகவும் இலங்கை அரசுக்குத் தகவல் கிட்டியிருப்பதாக கொழும்புப் பத்திரிகைகள் தெரிவிப்பு.

18.12.1990

★ மட்டக்களப்பு மாவட்டம் வாகனேரியில் இலங்கைப் பாதுகாப்புப் படையினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட அதிரடித் தாக்குதலில் 11 இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகத் தெரிவிப்பு.

★ தமிழகத்தில் தங்கியிருப்பதாகச் சந்தேகிக்கப்படும் ஈழத்தமிழ்ப் போராளிகள் மீது நாளைமுதல் இரண்டாம் கட்ட அதிரடி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் என மத்திய உள்துறை இணை அமைச்சர் சவராய் சென்னையில் வைத்துத் தெரிவிப்பு.

19.12.1990

★ திருகோணமலை மாவட்டம் பன்மதவாச்சியில் நேற்று விடுதலைப் புலிகள் நடத்திய கண்ணிவெடித் தாக்குதலில் சிக்கி திருகோணமலை மாவட்ட இராணுவத் தளபதி பிரிகேடியர் லக்ஸ்மன் விஜேரத்ன உயிரிழப்பு.

★ இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் வெளிநாடுகள் தலையீடு செய்வதை சீனா எதிர்க்கும் என சீனப் பிரதமர் லீபெங் ஜனாதிபதி பிரேமதாசவிடம் தெரிவிப்பு.

20.12.1990

★ யாழ்.பல்கலைக்கழகத்துக்கென பிரிட்டிஷ் அரசு அன்பளிப்பாக வழங்கிய ஆறுகோடி ரூபா பெறுமதியான உபகரணங்கள் கொழும்புத் துறைமுகத்தில் கேட்பாரற்றுக் கிடப்பதாகத் தெரிவிப்பு.

21.12.1990

தனது நாட்டின் சகல பிரஜைகளின் உயிர், உடமைகளைப் பாதுகாக்கும் தனது பொறுப்பைச் சரிவரச் செய்யுமாறு இலங்கை அரசை வற்புறுத்தும் விதத்தில் சர்வதேச நல்லொழுக்க ஸ்தாபனம் 50இற்கும் மேற்பட்ட உலக நாடுகளிலுள்ள தனது கிளைகள் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளும் எனத் தெரிவிப்பு.

22.12.1990

★ இலங்கையின் இனப்பிரச்சினைக்குச் சமரசத் தீர்வு காணும் முயற்சியாக கொழும்பிலுள்ள மேற்குல நாடுகளின் தூதரகங்களைச் சேர்ந்த இராஜதந்திரிகள் பலர் பிரிட்டிஷ் தூதுவரின் தலைமையில் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பதாகத் தெரிவிப்பு.

★ கிழக்கு மாகாணத்தில் தற்போது புதிதாக ஆரம்பிக்கப்பட்ட இராணுவ நடவடிக்கைகளின் போது ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக ஏ.எப்.பி. செய்தி ஸ்தாபனம் தெரிவிப்பு.

23.12.1990

★ முன்னேற முயன்ற இராணுவத்தினரை எதிர்த்து விடுதலைப் புலிகள் நேற்று கட்டுவன் பகுதியில் மேற்கொண்ட தாக்குதலில் 10 படையினர் பலியானதாகவும் பெருந்தொகை ஆயுதங்கள் தம்மால் கைப்பற்றப்பட்டதாகவும் விடுதலைப் புலிகள் தரப்பு தெரிவிப்பு.

24.12.1990

காலியிலுள்ள பூசா முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஐந்து ஜே.வி.பி. தீவிரவாத சந்தேக நபர்கள் சுவரேறிக் குதித்துத் தப்பிச் சென்றுள்ளதாகத் தெரிவிப்பு.

★ அரச உணவுக் களஞ்சியத்தில் 400 கோடி ரூபாவுக்கு மேற்பட்ட பெறுமதிகொண்ட அரிசி, சீனி போன்ற அத்தியாவசியப் பொருள்கள் கையாடப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக உணவுத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவிப்பு.

25.12.1990

★ மட்டக்களப்பில் இரண்டு தமிழ்க் கிராமங்களைச் சேர்ந்த சுமார் 50 தமிழ்ப் பெண்கள் சுட்டுக் கொல்லப்பட்டு அவர்களது சடலங்கள் குறிப்பிட்ட கிராமங்களின் வீதி ஓரங்களில் வீசப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிப்பு.

★ திருகோணமலையிலிருந்து ஹொரவப்பொத்தானைக்குச் சென்றுகொண்டிருந்த இராணுவ வாகனமொன்று விடுதலைப் புலிகளின் கண்ணிவெடியில் சிக்கியதில் அதில் பயணம் செய்த 19 படையினர் உயிரிழந்தாகத் தெரிவிப்பு.

26.12.1990

★ தமிழக மாநில அரசைக் கலைக்கும் எண்ணமெதுவும் மத்திய அரசுக்குக் கிடையாது என இந்தியப் பிரதமர் சந்திரசேகர் திட்டவட்டமாகத் தெரிவிப்பு.

27.12.1990

★ இலங்கையில் நடக்கும் மோதல்களுக்கு நிலையான தீர்வு காணப்பட வேண்டுமானால் அங்கு வாழும் சகல இன மக்களுக்கும் சமமான உரிமைகள் வழங்கப்பட்டு அவற்றுக்குப் பாதுகாப்பளிக்கப்பட வேண்டும் என ஐரோப்பிய நாடுகள் சமூகத்தின் நாடாளுமன்றம் நிறைவேற்றிய தீர்மானம் இலங்கை அரசைக் கேட்டுக்கொள்வதாக அறிவிப்பு.

★ புதுவருடப்பிறப்பன்று முதல் இரண்டு அல்லது மூன்று நாள்களுக்கு வடக்கு, கிழக்கில் போர் நிறுத்தமொன்று ஏற்படலாம் என லண்டனிலுள்ள விடுதலைப் புலிகள் இயக்கப் பிரமுகர் கிட்டு கூறியுள்ளதாக ஏ.எப்.பி செய்தி ஸ்தாபனம் தெரிவிப்பு.

28.12.1990

★ இலங்கையில் வடக்கு- கிழக்கு யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்படும் வரை இலங்கையின் புனர்வாழ்வுப் பணிகளுக்கு நிதியுதவி அளிக்கத் தாம் தயாரில்லை என எட்டு மேற்குலக நாடுகள் இலங்கை அரசுக்கு அறிவித்துள்ளதாகத் தெரிவிப்பு.

★ எதிர்வரும் ஜனவரி முதலாம் நாள் முதல் போர் நிறுத்தம் செய்வதாக விடுதலைப் புலிகள் அறிவித்திருப்பது குறித்து எனக்கு எதுவும் தெரியாது என பாதுகாப்புத் துணை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன தெரிவிப்பு.

29.12.1990

★ எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி முதல் காலவரையறையற்ற யுத்த நிறுத்தமொன்றை மேற்கொள்ளவிருப்பதாக தமிழீழ விடுதலைப் புலிகள் உத்தியோகபூர்வமாக அறிவிப்பு. இது, இலங்கை அரசு நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த விரும்புகிறதா? இல்லையா? என்பதை உலகம் கணிப்பிடுவதற்கு ஒரு சந்தர்ப்பம் வழங்கும் பொருட்டான தமது முயற்சியே எனவும் தெரிவிப்பு.

30.12.1990

★ தமிழகத்தில் தங்கியுள்ள ஈழத்தமிழர் அகதிகளைப் பராமரிக்கும் பொறுப்பை ஐ.நாவின் அகதிகளுக்கான தூதரகத்திடம் ஒப்படைக்க இந்தியா முயல்வதாகக் குற்றச்சாட்டு.

★ எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி முதல் காலவரையறையற்ற யுத்த நிறுத்தமொன்றை மேற்கொள்ளப்போவதாக விடுதலைப் புலிகள் விடுத்த அறிவிப்புக் குறித்து அரசாங்க உயர்மட்டத் தலைவர்கள் பரிசீலனை செய்து வருவதாக கொழும்பில் தெரிவிப்பு.

31.12.1990

★ தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் ஒரு தலைப்பட்சமான யுத்த நிறுத்த அறிவிப்பு தொடர்பான அரசின் முடிவை ஜனாதிபதி பிரேமதாச நாளை மறுதினம் நாட்டு மக்களுக்கு அறிவிப்பார் எனத் தெரிவிப்பு.

# பொன்சேகா நாடாளுமன்றம் செல்ல எவரின் அனுமதியும் அவசியமில்லை

## ஜே.வி.பி. நேற்றுமுன்தினம் தெரிவிப்பு

கொழும்பு,மே4

நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா, நாடாளுமன்றக் கூட்டத்தில் கலந்து கொள்வதில் எவ்வித சிக்கலும் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை ஜே.வி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன் நெத்தி கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பொன்றின்போது தெரிவித்துள்ளார்.

சரத் பொன்சேகா நாடாளுமன்றத்துக்குள் நுழைவதற்கு எவருடைய அனுமதியும் பெறவேண்டிய அவசியமில்லை என்றும் அவர் சுட்டிகாட்டினார்.

நாடாளுமன்றமே அனைத்துச் சட்டங்களையும் வகுக்கும் இடமாகக் காணப்படுகிறது. இந்த நிலையில் நாடாளுமன்றமே அனைத்து நிறுவனங்களில் உயர் நிறுவனமாக உள்ளது. எனவே, இதற்கு அவர் வரவேண்டியது அவசியம். அதன்பொருட்டு விசேட அனுமதிகள் கோரத் தேவையில்லை என்றும் தெரிவித்தார். (சி)

# 5 இல் ஐ.தே.கவின் செயற்குழுக் கூட்டம் கட்சி மறுசீரமைப்பு குறித்து ஆலோசனை

## கயந்த கருணாதிலக தெரிவிப்பு

கொழும்பு,மே4

நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலின் பின் ஐக்கிய தேசியக் கட்சியின் முதலாவது செயற்குழுக் கூட்டம் நாளை புதன்கிழமை நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தின்போது கட்சியின் அபிவிருத்தி மற்றும் புனர்நிர்மாண நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடப்படவுள்ளன என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக நாட்டிலிருந்து வெளியேறியுள்ள நிலையில் ஐக்கிய தேசியக் கட்சியில் குழப்ப நிலை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் செயற்குழுக் கூட்டம் ஒன்று கூட்டப்படும்போது கட்சியின் பொதுச் செயலாளர் நாட்டில் இல்லை என்பது சிக்கலை தோற்றுவித்துள்ளது என கட்சி வட்டாரங்கள் கருத்துத் தெரிவித்துள்ளன.

ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க எந்த நாட்டுக்குச் சென்றுள்ளார் என்பது குறித்து கட்சி தலைவர் உட்பட எவருக்கும் அறிவிக்கவில்லை எனவும் தெரியவருகிறது. (சி)

# யுத்தம் நடைபெற்ற காலப்பகுதியில் ஆண்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி

கொழும்பு,மே4

இலங்கையில் யுத்தம் நடைபெற்ற கடந்த 30 வருடங்களில் நாட்டின் சனத் தொகையில் ஆண்களில் எண்ணிக்கை குறைந்து காணப்பட்டுள்ளது என மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளி விவரத் திணைக்களம் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

யுத்தம் ஆரம்பிக்கப்படும் முன்னர், 50.1 வீதமாகக் காணப்பட்ட ஆண்களின் எண்ணிக்கை, யுத்தம் நடைபெற்ற காலப் பகுதியில் 47.6 ஆக வீழ்ச்சியடைந்து காணப்பட்டுள்ளது.

கடந்த 30 வருடங்களில் சனத் தொகை எண்ணிக்கையில் பெண்களின் எண்ணிக்கையானது 49.9 முதல் 52.4 வீதமாக அதிகரித்துள்ளது. அத்துடன் கடந்த 30 வருட காலத்தில் எழுதப் படிக்க தெரிந்த பெண்களின் எண்ணிக்கையானது 18 வீதமாக அதிகரித்துள்ளதுடன் இதில் ஆண்கள் 8 வீத வளர்ச்சியை கொண்டுள்ளனர் என அந்த புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. (சி)

# இலங்கை நாட்டின் ரகசியங்களை வெளியிடுவதை தடுக்க கடுமையான தண்டனைச் சட்டம்?

கொழும்பு,மே4

இலங்கையின் இரகசியங்களை வெளிநாடுகளுக்கு வழங்கப்படுவதை தடுக்கும் நோக்கில், சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு கடுமையான தண்டனை வழங்கும் வகையில் அரச புலனாய்வுச் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ளது தொடர்பாக புதிய அரசு கவனம் செலுத்தி வருகிறது எனத் தெரிவிக்கப்படுகிறது.

வன்னி இராணுவ நடவடிக்கையின் போதும், அதற்கு பின்னர், சிலர் இலங்கையின் தேசிய பாதுகாப்புக்கு எதிரான வகையில் ஐக்கிய நாடுகள் அமைப்பு மற்றும் மேற்குல தூதுவர்களுக்குத் தகவல்களை வழங்கியுள்ளனர் எனப் புலனாய்வுப் பிரிவினருக்கு தகவல் கிடைத்துள்ளது.

இந்தத் தகவல்கள் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைப்பதற்கு முன்னர், வெளிநாட்டுத் தூதரங்களின் உதவியுடன் நாட்டில் இருந்து அவர்கள் தப்பிச் சென்றுள்ளனர் எனப் பாதுகாப்புத்தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

தற்போது நடைமுறையில் உள்ள புலனாய்வுச் சட்டத்தில் காணப்படும் குறைப்பாடுகள் காரணமாக இலங்கையின் பாதுகாப்புக்கு எதிராகச் செயற்படும் நபர்களையும், அமைப்புகளையும் சட்டத்திற்குள் சிக்க வைக்க முடியாதுள்ளது.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தின்போது, பல இரகசிய தகவல்கள் மேற்குல நாடுகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. இதன் காரணமாகவே அரசு புலனாய்வுச் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளது.

இவ்வாறு இரகசியத் தகவல்களை வெளிநாடுகளுக்கு வழங்கிய இராணுவ அதிகாரிகள் சிலர் பிரித்தானியா மற்றும் சுவிடன் நாடுகளில் தஞ்சமடைந்துள்ளனர் எனத் தெரியவந்துள்ளது. (சி)

# சட்டவிரோதமாக ஆஸி. செல்ல முயன்ற 110 பேருக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறை

கொழும்பு,மே4

சட்டவிரோதமான முறையில் ஆஸ்திரேலியாவை நோக்கிச் சென்று கொண்டிருந்தபோது கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 110 பேரையும் மாத்தறை நீதிமன்றம் தலா 20 ஆயிரம் ரூபா அபராதமும் ஆறு மாத காலத்துக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனையும் விதித்து கடந்த வெள்ளிக்கிழமை விடுதலை செய்தது.

சுமார் நான்கு மாதங்களுக்கு முன்னர் இவர்கள் காலி கடற்பரப்பில் வைத்துக் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டனர்.

இவர்கள் அனைவரும் கடந்த வெள்ளிக்கிழமை மாத்தறை பிரதம நீதிவான் உதேஷ் ரணதுங்க முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டபோது தமது குற்றத்தை ஒப்புக்கொண்டனர்.

இதனையடுத்து தலா 20 ஆயிரம் ரூபா அபராதமும், ஆறுமாத கால ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது எனத் தெரிவிக்கப்படுகிறது. (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

### மேடம்



உங்களை பார்த்து சிலர் அனுதாபப்படும் அல்லது பாராட்டும் வகையிலான சம்பவங்கள் நடக்கலாம். உங்களின் ரகசியம் ஒன்றை நண்பர்களிடம் சொல்லி யோசனை கேட்பீர்கள். நீங்கள் எதிர்பார்த்த ஒருவர் உதவி செய்யாமல், எதிர்பாராத ஒருவர் உதவி செய்யலாம். மனதில் இனம் புரியாத கவலை குடிகொள்ளும்.

### இடபம்



எதிர்பார்ப்பு ஒன்று நிறைவேறாமல் ஏமாற்றம் தரலாம். வேகமாகச் சில வேலைகளை துவக்கிவிட்டு பாதியில் விட்டுவிடுவீர்கள். குடும்ப உறுப்பினர்கள் உங்களை விமர்சனம் செய்யலாம். மனதிற்கு சங்கடம் தரும் அனுபவம் ஒன்றை எதிர்கொள்ளலாம். சபலங்களால், பேராசைகளால் சங்கடங்களுக்கு ஆளாகலாம்.

### மிதுனம்



நிதி நிலைமையில் மேம்பாடு காணலாம். உறவினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பு, சந்தோஷம் உண்டாகும். பணிபுரிவோர் மேலதிகாரிகளின் பாராட்டுகளைப் பெறுவர். பிள்ளைகள் வழியில் சுபச் செலவுகளைச் சந்திக்கலாம். வழக்கு விவகாரங்களில் எச்சரிக்கை அவசியம். உற்சாகம் கூடும் நாள்.

### கடகம்



கடன் நிலுவைகளை, கட்டண நிலுவைகளை செலுத்துவீர்கள். தொல்லை கொடுத்தவர்கள் எல்லை விட்டுச் செசல்வர். உதிரி வருமானங்களைப் பெறலாம். பெண்கள் வழியில் மனதிற்கு இனிய உதவிகள் கிடைக்கலாம். அலைந்து திரிந்து முடிக்க நேரிடும் என நினைத்த வேலை ஒன்று சுலபமாக முடிவுக்குவரும்.

### சிங்கம்



பெதியவர்கள் சிலரிடம் உதவி கேட்கலாம். பெற்றோர் உங்களிடம் அதிக பாசமாக நடந்து கொள்வர். உடன் பணிபுரியும் சிலரே ஏட்டிக்குப் போட்டியாக செயற்படலாம். தொழில் ரீதியான விடயங்களில் மிகுந்த எச்சசரிக்கை அவ்சியம். அடுத்தவர் விவகாரம் ஒன்றில் மூக்கை நுழைத்து அவதிகளுக்கு ஆளாகலாம்.

### கன்னி



உங்களின் பெருமையான செயற்பாடு ஒன்றைப் பற்றி மற்றவர்களிடம் சொல்வீர்கள். குடும்ப உறுப்பினர்கள் அல்லது நண்பர்கள் உங்களின் யோசனைக்கு பலத்த எதிர்ப்புத் தெரிவிக்கலாம். உறவினர்கள் சிலருக்காக உங்களின் கைப்பணத்தைச் செலவிடலாம். அரசியல்வாதிகளுக்கு அலைச்சல், கூடும்.

### துலாம்



கையில் பணப்புழக்கம் அதிகரிக்கும். வாழ்க்கைக்கு வழிகாட்டியாக இருந்த சிலரைச் சந்திப்பீர்கள். வியாபாரிகள் புதிய வாடிக்கையாளர்களைப் பெறலாம். நடக்குமோ, நடக்காதோ என சந்தேகத்தில் இருந்த விடயம் ஒன்று நல்ல விதமாக நடந்துவிடலாம். தேக ஆரோக்கியத்திற்காக சிறு தொகையைச் செலவிடலாம்.

### விருச்சிகம்



வீட்டுக்குத் தேவையான பொருள்களை வாங்குவீர்கள். சாப்பிடக்கூட நேரமில்லாமல், அடுக்கடுக்காக பல வேலைகளைச் செய்யலாம். பழகிய சிலரின் வார்த்தைகளுக்குக் கட்டுப்பட்டு நடக்க நேரிடலாம். சில விடயங்களில் எதிர்பார்த்தது ஒன்றாகவும், நடப்பது ஒன்றாகவும் அமையலாம்.

### தனுசு



எந்த வேலையையும் நாளை என தள்ளி வைக்காமல் இன்றே செய்து முடிப்பீர்கள். தம்பதியர் இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். பதவி உயர்வை எதிர்பார்ப்போர் நல்ல செய்திகளைக் கேட்கலாம். பெண்கள் தொடர்பான விடயங்களில் எச்சரிக்கை அவசியம். சக ஊழியர்கள் விடுமுறையால் வேலைப்பளு கூடும்.

### மகரம்



வீண் விவாதங்களை, சர்ச்சைகளைத் தவிர்க்க வேண்டிய நாள். குடும்ப உறுப்பினர்கள் சொல்லிய வேலைகளை மறப்பதன் மூலம் அவர்களின் கோபத்திற்கு ஆளாகலாம். வழக்கத்திற்கு மாறாகக் கூடுதல் நேரம் பணியாற்றலாம். உறவினர்கள் வழியில் அன்புத் தொல்லைகளைச் சந்திக்கலாம். பக்தி நாட்டம் கூடும்.

### கும்பம்



மற்றவர்கள் தயங்கும் வேலைகளை நீங்கள் வெற்றிகரமாகச் செய்து முடிப்பீர்கள். சக ஊழியர்கள் ஆதரவாக இருப்பர். புதிய ஆடை, ஆபரணங்கள் வாங்கப் போட்டதிட்டம் நிறைவேறலாம். அரசியல்வாதிகள் மூலம் காரியம் சாதிக்க மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. நீண்ட நேரம் ஓய்வெடுக்கலாம்.

### மீனம்



நடக்குமோ, நடக்காதோ என நினைத்த காரியம் ஒன்று நல்ல விதமாக நடந்து விடலாம். வியாபாரிகள் ஏதோ ஒரு வகையில் கணிசமான இலாபம் பெறலாம். புதிய சொத்துகள் வாங்கும் விவகாரங்களில் அவசரம் காட்ட வேண்டாம். தம்பதியர் இடையே அன்யோன்யம் உண்டாகும். பெரிய மனிதர்களின் நட்பைப் பெறுவீர்கள்.

## தேசிய எந்திரவியல் டிப்ளோமா கற்கைக்கு விண்ணப்பிக்கலாம்

கட்டுநாயக்காவிலுள்ள எந்திர தொழில்நுட்பவியல் நிறுவகத்தினால் நடத்தப்படுகின்ற தேசிய எந்திரவியல் விஞ்ஞான டிப்ளோமா பாடநெறி (NDES) இற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

நான்கு வருடப்பயிற்சிக் காலத்தைக் கொண்ட இப்பயிற்சி நெறிக்கு ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் கணித பாடங்களில் சித்திபெற்ற 18வயது முதல் 25 வயதுக்குட்பட்டவர்கள் விண்ணப்பிக்க முடியும். இதுதொடர்பான மேலதிக விவரங்களை www.iet.edu.lk என்ற இணையதளத்தினூடாக அல்லது தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை, இல.7, கோயில் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியிலுள்ள வடமாகாண அலுவலகத்தில் பெற்று விண்ணப்பங்களை அடுத்த மாதம் 18ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு மாவட்ட முகாமையாளர் கி.கிருஷ்ணபாலன் கேட்டுள்ளார். (50-16)


## ஓராண்டு நினைவஞ்சலிகள்





கி.ஜெயக்கிருஸ்ணன் கி.கிருஸ்ணவேணி

திதி: ஷஷ்டி

பிறப்பு 02-04-1983 இறப்பு 29-04-2009 பிறப்பு 11-04-1993 இறப்பு 15-05-2009

நல்முத்தெனக் கிடைத்த என் செல்வக் குஞ்சுகளே!
தாய்க்குத் தலைமகனாய் நீ இருப்பாய் என நினைத்தேனே
என்கடமையை உனக்காக்கி, தங்கையை துணையாக்கி,
சகோதரர்களை தனியாக்கி சென்றாயே!
இளையவனாய் இருந்தாலும் சிரித்த முகத்துடன் இருப்பாயே
அண்ணன் தனியே செல்ல கடமை செய்ய துணையானாயோ!
தனிமரமாய் நாமிருக்கின்றோம் துணையாவீர் என்று
நிம்மதியாய் இருந்தோமே அண்ணா!
பழையபடி தனிமரமாய் தவிக்கின்றோமே!
ஆலமர விழுதுகளாய் ஆறுதல் தந்தீரே
ஆலமரம் துயரத்தில் சாய்வது தெரியலையா?
உங்கள் ஆத்ம சாந்திக்காய் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இருபாலை,
கோண்டாவில் வீதி,
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

(97535)

தாய் (ராதா), மாமா (செல்வராசா),
சகோதரர்கள், உறவினர்கள்.



## சுரேன் குக் ஏஜென்சீஸ்

கிருமிகளைக் கட்டுப்படுத்துவதில் தேர்ச்சிபெற்ற சேவையாளர்கள்

**புகையூட்டி இயந்திரம் (Pulsfog K10 SP)**



டெங்கு, மலேரியா போன்ற நுளம்பினால் பரவும் தொற்று நோய்களுக்கு (Pulsfog K10 SP)புகையூட்டி இயந்திரம் மூலம் நுளம்புகளைக் கட்டுப்படுத்தலாம்.

**சுவர்கில் நுளம்பு பொறி (Surekill Mosquito Trap)**



சுவர்கில் நுளம்பு பொறி முழுமையான நஞ்சுத் தன்மையற்ற நுளம்புபொறி, குழந்தை அறை மற்றும் படுக்கை அறைகளில் பொருத்தி வைக்கலாம்.

**மின் இலையான் கட்டுப்படுத்தி (Electronic Fly Control Machine)**



இலையான் போன்ற தொற்றுநோய் காவிகளை கட்டுப்படுத்தும். (மின் இலையான் கட்டுப்படுத்தி) உலக தரம் வாய்ந்த தொழில்நுட்பம் வீடுகள், அலுவலகம், உணவகம் மற்றும் தொழிற்சாலைகளுக்கு உகந்தது.

**சுவர்கில் பாம்பு விரட்டி (Surekill Snake Repellant)**



சுவர்கில் பாம்பு விரட்டி கொடிய விஷப் பாம்புகளைக் கட்டுப்படுத்தும்.

**ரேசிடெக்ஸ் (Residex)**



இலையான் கரப்பான் பூச்சி போன்றவற்றைக் கட்டுப்படுத்தும். மிதமான நஞ்சுத்தன்மையுள்ள கிருமிநாசினி. வீடுகள், பாடசாலை, உணவகம், வெதுப்பகம் கோழிப் பண்ணை போன்ற இடங்களுக்கு உகந்தது.

**பிசின் தடவிய இலையான் பொறி / குச்சி (Glue Stick)**



முற்றிலும் நஞ்சுத் தன்மையற்ற பிசின் தடவிய இலையான் பொறி/குச்சி வீடுகளுக்கு உகந்தது.

**பல்லி விரட்டி**




வீடுகளில் காணப்படும் பல்லிகளை விரட்டும். முற்றிலும் பாதுகாப்பானது.

**கறையான் கண்டுபிடிப்பு கமரா (Termite Camera)**



கறையான்களைக் கண்டறியும் கமரா புரட்சிகரமான புதிய தொழில்நுட்பத்திலான கமரா. இதன் மூலம் கண்களுக்கு புலப்படாத இடங்களில் உள்ள கறையான்களைக் கண்டறிந்து தக்க சிகிச்சை அளிக்கப்படும்.

உடன் தொடர்புக்கு ஒலிவர் 0777 681679 மோகன் 077 3591791

பிரித்தானியா கிருமிகள் கட்டுப்படுத்தும் சங்கத்தின் உறுப்பினர்
305, [illegible] வீதி, கொழும்பு 10. தொ.பே. இல. 2688203 / 2686020 / 5338078
மின்னஞ்சல்: sheranc@hotmail.com. இணையத்தளம்: www.surencooke.com


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கொடுமை கொடுமை



ஹிரோசிமா நகரக் கடிகாரத்தின் மணிகள் எச்சரிக்கை செய்வதுபோல் ஒலிக்கின்றன. இந்த மணிகள் நண்பகலில் ஒலிப்பதில்லை. காலையில் 8.15மணிக்கே ஒலிக்கின்றன. அந்த நகரை தீப்பிழம்புகளும், கரும்புகையும், சாம்பலும்,சாவும் ஆட்கொண்ட வெந்துயர் மிக்க அந்தக் கொடுமையான நேரத்தையே அவை நினைவுபடுத்துகின்றன.

1945, ஒகஸ்ட 6ஆம் திகதி காலை 8மணி. ஓர் அமெரிக்கவெடிகுண்டு விமானம் ஹிரோசிமாவை நெருங்கிக்கொண்டிருப்பதை ஜப்பானிய மக்கள் காண்கின்றனர். நகர வானொலி நிலையம் விமான எச்சரிக்கைச் சங்கை ஊதுகிறது. அதே சமயம், இந்த விமானம் வேவுப்பணியை நிறைவேற்ற வந்துள்ளது என்றும் வானொலி அறிவிக்கிறது. மக்கள் தங்கள் அன்றாட வேலைகளில் ஈடுபடுகின்றனர்.

காலை 8.11மணி.விமானத்திலிருந்து கேணல் திப்பெத்ஸ் தான்ஓட்டிவந்த எனோலா - கே வெடிகுண்டு விமானத்தை இலக்கை நோக்கிச் செலுத்துகிறார். விமனத்திலுள்ளவர்கள் தங்களது பிரணவாயு முகமூடிகளுக்கு மேல் பாதுகாப்புக் கறுப்புக் கண்ணாடிகளை அணிந்துகொள்கின்றனர்.

காலை 8.14மணி. விமானத்திலிருந்து அணுகுண்டு வீசப்படுகிறது. அது பல நூறு மீற்றர் உயரத்துக்கு வரும்போது, ஒரு பரசூட் விரிகிறது.

காலை 8.15 மணி. தரைக்கு இன்னும் 500மீற்றர் தூரம் இருக்கிறது. ஒரு பயங்கர வெடிப்பு.... ஆயிரம் சூரியன்களைவிட பிரகாசமான ஒரு பெரிய தீப்பந்து ஹிரோசிமா மீது சூழ்கிறது. ஒரு பிரமாண்டமான தீப்பந்தம் போல ஹிரோசிமா முழுவதும் பற்றி எரிகிறது. கொடுமை!

ஹிரோசிமா மீது வீசப்பட்ட அணுகுண்டின் வெடிப்பு சக்தி 20000தொன் டிஎன்டிக்கு சமம். தீப்பந்தத்தின் குறுக்களவு 17மீற்றர்கள். அதன் வெப்பம் 3,00,000டிகிரிசென்ரிகிரேட். அணுகுண்டு வெடித்தபோது அந்த நகரத்தின் மக்கள் தொகை 4,00,000க்கும் அதிகம். இந்த அணுகுண்டு வீச்சினால் 2,40,000பேர் ஒரே சமயத்தில் கொல்லப்பட்டனர். 1,63,000பேர் காயமடைந்தனர். ஹிரோசிமாவில், கதிர் இயக்கத்தால் பல பயங்கர நோய்கள் பரவின. இன்றுவரையிலும் இங்கு புற்றுநோயினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை, ஜப்பான் முழுவதும் இந்நோயால் அவதிப்படுபவர்களின் எண்ணிக்கையைவிட பத்து மடங்கு அதிகம்.

''அமைதியாக உறங்குங்கள். இனி இந்தத் தவறு மீண்டும் நிகழாது' எனும் சொற்கள் ஹிரோசிமாவிலுள்ள பொதுக்கல்லறையில் காணப்படுகின்றன. ஆனால் 1945ஆகஸ்ட் 6ல் ஹிரோசிமாவில் மூன்று நாள்களுக்குப் பிறகு நாகசாகியிலும் அணுகுண்டுகள் விழுந்தன என்பது பொய் அல்லவே! மனிதன்-தன் இனமான-மனிதனையே கொன்றான். அதுவும் ஒரே சமயத்தில் இலட்சக்கணக்காக கொடுமை! கொடுமை! மீண்டும் மனிதஇனம் காட்டுமிராண்டிகளாக ஆகிக்கொண்டிருக்கிறதே.

# ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளைந்ததே!

இந்த வயதில் இனி நான் என்ன சாதிக்கப்போகிறேன்? என்று அலுத்துக்கொள்ளுவது தோல்வி மனப்பான்மைக்கு அடையாளமாகும். சாதனை புரிவதற்கு நேரம் காலம் பார்க்கத் தேவையில்லை. வயது ஒரு பொருட்டல்ல. செயல் வீரர்கள் தான் சாதனையாளர்களாகத் திகழமுடியும்.

ஐம்பது வயதுவரை அரிஸ்டோட்டில் உருப்படியான ஒரு காரியத்தையும் செய்யவில்லை. அதன் பிறகு அவர் வாழ்ந்த பன்னிரண்டு ஆண்டுகளில் செய்த செயல்கள் தான் -உலகம் உள்ள அளவும் அவரது புகழை நிலைபெறச் செய்துள்ளது. ஆபிரகாம் லிங்கன் ஐம்பது வயதுக்குப் பிறகு தான் அமெரிக்காவின் குடியரசுத் தலைவர் ஆனார். உட்ரோ வில்சனுக்கு ஐம்பது வயது வரை அரசியல் ஈடுபாடே கிடையாது. புகழ்பெற்ற கல்லூரிப் பேராசிரியரா கத்தான் பணியாற்றிக்கொண்டிருந்தார். அதன் பிறகு தான் அவர் குடியரசுத் தலைவராகப் புகழ்பெற்றார்.

மாவீரன் அலெக்சாந்தர் இருபதாம் வயதிலேயே முடி சூடிக்கொண்டான். பிறகு 33 வயது முடிவதற்குள் இந்த உலகை விட்டே மறைந்தான். அந்தக் குறுகிய காலத்தில் அவன் செய்த சாதனைகள் நிறைய உண்டு. அன்றைய உலகின் பாதியையே கைப்பற்றி விட்டான். துணிவின் திருவுருவம் என்று வரலாறு பேசுகின்றது அவனை.

காலத்தையெல்லாம் கடத்தி விட்டு கடைசியில் தனது அறுபதிலிருந்து எழுபது வயதிற்குள்தான் உலகத்திலேயே மிகப்பெரிய பணக்காரரானார், ஜே.பி.மார்கன் என்னும் அமெரிக்கக் கனவான். பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஐரோப்பிய இலக்கியத்திற்கு ஒரு திருப்புமுனை ஏற்படுத்திய கவிஞன் 'பைரன்' சாகும் பொழுது வயது முப்பத்தாறேதான். இளமைக் கவிஞன் என்று அழியாப் புகழ்பெற்ற ஷெல்லி முப்பது வயது இளைஞனாக இருக்கும்பொழுதே தனது கவிதைப் புதையலை உலகுக்கு அளித்துவிட்டு மறைந்தான்.

எனவே எந்த வயதிலும் சாதனை புரியலாம். அதற்கு மூலப்பொருள் தேர்ந்த மூளைதான். பார்க்கப் போனால் மனிதர்கள் அனைவருமே சரிசமமானவர்கள்தான். யாருக்கு எந்தத்துறை சரியாகவரும் என்று தேர்ந்தெடுப்பதில் வேண்டுமானால் வித்தியாசம் இருக்கலாம். எந்தத் துறையிலும் யாரும் முயன்றால் வெற்றிபெற முடியும். தெய்வத்தால் செய்ய முடியாததைக் கூட முயற்சியால் செய்துவிடமுடியும்.

தெய்வத்தால் ஆகாது எனினும் முயற்சி தன்
மெய் வருந்தக் கூலிதரும்.

என்று தெய்வப்புலவர் திருவள்ளுவரே கூறியுள்ளாரே.



ஒன்றைச் செய்தே தீரவேண்டும் என்று மனத்தில் ஆழ்ந்து எண்ணிவிட்டால் ஒரு மகத்தான மனோபலம் நம்மை அவசியம் ஆட்கொண்டுவிடும். அதன்பிறகு கேட்க வேண்டுமா? மாபெரும் மலை கூட சிறு கடுகாகிவிடும். எடுத்த காரியத்திலெல்லாம் வெற்றிதான். தோல்வியே கிடையாது. உலகத்தின் சாதனையாளர்கள் பலர் இவ்வண்ணம் மனோபலத்தால் ஆட்கொள்ளப்பட்டவர்கள் தாம்.

# அழகுக்கு அழகு செய்ய....



ஜயந்தினி
(அழகுக்கலை நிபுணர், நியூலுக் அழகு நிலையம்)

(சென்றவாரத் தொடர்ச்சி)

★ முதலில் முகத்தை பால் அல்லது தயிர் கொண்டு பஞ்சினால் நனைத்து சருமத்தைச் சுத்தப்படுத்தவும்.

சிறிதளவு ரவையுடன் தயிர் கலந்து முகத்தில் மிதமாக சிறிது நேரம் தேய்த்து துடைத்து விடவும். பின்னர் பழங்களினால் ஆன கலவையை (பப்பாளி, வெள்ளரி) மசித்து முகத்தில் பூசி 10 நிமிடம் மசாஜ் செய்யுங்கள். பிறகு 'பன்டேஜ்' துணியை முகவடிவத்தில் வெட்டி முகத்தின் மேல் வைக்கவும். பின்னர் பழக்கலவையை அதன் மேல் நன்கு பரப்பி விடவும். 10 நிமிடம் கழித்து முகத்தை கழுவிவிடவும். இப்படி வாரம் 1அல்லது 2 முறை செய்தால் முகம் பளபள என்று ஆகிவிடும்.

அது மட்டுமல்லாமல் இந்தப் பழக்கலவை சருமத்திற்குக் குளிர்ச்சியைக் கொடுக்கும். இதனால் பிற ஹைட்ராவின் மாஸ் எனப்படும் பேக்கை (Pack) உபயோகப்படுத்தினால் சருமம் மேலும் குளிர்ச்சி பெறும். இது கண்ணுக்குக் கீழ் உள்ள முடிச்சுக்கள், கருவளையங்கள் என்பன போன்ற கருமையான அடையாளங்களை முற்றிலும் போக்கிவிடும்.

இவ்வகையான சருமத்தில் உள்ள பி.எச் (p.h ) அளவைச் சரியாக வைத்துக்கொள்ள உதவுகிறது.

இந்த வகையான சிகிச்சைகள் வெளிப்புறச் சருமத்துக்கு மட்டுமே. நமது உடலையும் குளிர்ச்சியாக வைத்துக்கொள்ள வேண்டும். இதற்கு இயற்கையே நமக்கு பலவிதமான கனிகளை அந்தந்தப் பருவநிலைகளுக்கு ஏற்றாற்போல் அளிக்கிறது.

தர்பூசணி, ஒரேஞ், மற்றும் முள்ளங்கி போன்ற காய்கறிகளை உட்கொள்ளுவதால் நமது உடல் மட்டுமன்றி நமது வெளிப்புறச் சருமமும் பொலிவு பெறும்.



**கோடை வெயிலைச் சமாளிக்க சில எளிய குறிப்புகள்.**

1. குளிர்ந்த நீர் கொண்டு முகத்தை அடிக்கடி கழுவவும்.
2. இளநீர், மோர், நுங்கு, வெள்ளரி போன்ற குளிர்ச்சியான பொருள்களை அடிக்கடி உணவில் அதிக அளவில் சேர்க்கவும்.
3. வெயிலிலிருந்து பாதுகாக்கக்கூடிய தகுந்த கிறீம் உபயோகப்படுத்தவும்.
4. வாரம் ஒரு முறை நன்றாக உடல் முழுவதும் மற்றும் தலையில் எண்ணெய் தேய்த்துக் குளிக்கவும். உடலுக்கு உஷ்ணத்தை ஏற்படுத்தும் பொருள்களைத் தவிர்க்கவும்.
5. தண்ணீரை நன்றாகப் பருகவும்.

வெயில் காலங்களில் வியர்வைச் சுரப்பிகளின் செயற்பாடுகள் அதிகமாக இருக்கும். இதனால் சுரப்பிகளின் துவாரங்கள் அதிக அளவு திறந்து [illegible] 'கிளிஸ்-அப்' பண்ணி 'பேக்' போடுவதால் துவாரம் மூடப்படுகிறது. (இன்னும் வரும்)

# கூலி வாங்கிய எழுத்தாளர்



உலகப் புகழ்பெற்ற ரஷ்ய எழுத்தாளர் லியோடால்ஸ்டாய். அவர் எழுதிய நூல்களுள் போரும் சமாதானமும் என்ற நூல் மிகவும் பிரசித்தி பெற்றது.

வசீகரமான எழுத்துக்குச் சொந்தக்காரரான டால்ஸ் டாய் எழுத்தை மட்டுமே தனதுமுழுநேரப் பணியாகக் கொண்டு வாழவில்லை. எழுதிய நேரம் போக மீதி நேரங்களில் தனது வயலுக்குச் சென்று வேலை பார்ப்பார். அவ்வப்போது சிறு சிறு வேலைகளைத் தானே செய்து கொள்வார்.

ஒருமுறை ரயில் நிலையத்தில் டால்ஸ்டாய் நின்றுகொண்டிருந்தார். அவரது எளிமையான உடையைக் கண்டு அவரை ஒரு கூலிக்காரன் என்று ஒரு பெண்மணி நினைத்து விட்டாள்.

அவரது அருகே பதற்றத்துடன் வந்து,

''ஐயா... நானும் என் கணவரும் ஒன்றாக ரயிலில் வந்தோம். என்னை ரயிலில் காத்திருக்கச் சொல்லிவிட்டு உணவு வாங்கச் சென்ற என் கணவர் நீண்ட நேரமாகியும் திரும்பவில்லை. எனக்குப் பயமாக இருக்கிறது. தயவு செய்து என் கணவரைக் கண்டுபிடித்துத் தாருங்கள். நீங்கள் செய்யும் வேலைக்கு நான் கூலி தருகிறேன்'' என்றாள்.

டால்ஸ்டாயும் அவள் கணவனின் அங்க அடையாளங்களை விசாரித்துக் கொண்டு அவரைத் தேடிச் சென்றார்.

நீண்ட நேரத் தேடுதலுக்குப் பின் ஒருவழியாய் அவள் கணவனைக் கண்டுபிடித்துக்கொண்டு வந்து அப்பெண்ணிடம் சேர்ப்பித்தார்.

அவர் செய்த வேலைக்காக அப்பெண் ஒரு சிறு தொகையைக் கூலியாகக் கொடுத்தாள். டால்ஸ்டாயும் அப்பணத்தை மகிழ்ச்சியுடன் வாங்கிக் கொண்டார்.

சற்று நேரம் கழித்த பின்னர் அந்தப் பெண்ணுக்குத் தன் கணவரைக் கண்டுபிடித்துக் கொண்டுவந்தவர்தான் புகழ்பெற்ற எழுத்தாளர் லியோ டால்ஸ்டாய் என்ற விஷயம் தெரியவந்தது.

உடனே அவளுக்குத் தூக்கிவாரிப் போட்டது.

பதற்றத்துடன் ரயிலில் இருந்து இறங்கி டால்ஸ்டாயிடம் வந்தாள்.


''ஐயா... என்னை மன்னித்து விடுங்கள். நீங்கள் தான் டால்ஸ்டாய் என்று தெரியாமல் உங்களை ஒரு கூலிக்காரன் என்று நினைத்துவிட்டு வேலை ஏவினேன்'' என்றாள்.

அதற்கு டால்ஸ்டாய் புன் முறுவலுடன்,

''பெண்ணே... நீ என்னைக் கூலிக்காரனாக நினைத்ததில் தவறு ஒன்றும் இல்லை. இதில் தாழ்ந்து விட்டதாக நான் எண்ணவில்லை. அதற்காக நான் டால்ஸ்டாய் என்று தெரிந்ததும் நீ கொடுத்த கூலிப் பணத்தை நீ திரும்பக் [illegible]ல் நான் தரமாட்டேன். ஏனென்றால், அது நான் கஷ்டப்பட்டு உழைத்துச் சம்பாதித்த பணம்'' என்றார்.

தகவல்: அன்புமதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பண்டத்தரிப்பு- கீரிமலை வீதியில் பற்றிமா அன்னை ஆலயத்துக்குச் செல்லும் வீதியில் பற்றிமா அன்னையின் திருச்சொரூபம் கடந்த சனிக்கிழமை திறந்து வைக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

திறப்பு விழாவுக்குப் பக்தர்கள் பவனியாக வருவதையும், பண்டத்தரிப்புப் பங்குத்தந்தை அருட்பணி ம.யேசுரட்ணம் திருச்சொரூபத்தை ஆசீர்வதித்துத் திறந்து வைப்பதையும், இந்த வைபவத்தில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்: சரவணன்)

# இலஞ்ச ஆணைக்குழு செயலிழந்துள்ளதால் 500 முறைப்பாடுகள் தேக்க நிலையில்!

கொழும்பு.மே 4

இலஞ்சக் குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்யும் குழு செயலிழந்துள்ளதால் 500 இற்கும் மேற்பட்ட முறைப்பாடுகளை விசாரணை செய்யமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

இலஞ்சக் குற்றச்சாட்டு முறைப்பாடுகளை விசாரணை செய்யும் ஆணைக் குழுவின் மூன்று உறுப்பினர்களின் பதவிக் காலம் கடந்த மார்ச் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவுக்கு வந்தது.

அரசமைப்பின் 14ஆவது சரத்தின் கீழ் புதிய உறுப்பினர்களை ஜனாதிபதி நியமிக்கவேண்டும். ஆனால் இது வரை புதிய உறுப்பினர்கள் நியமனம் செய்யப்படவில்லை.

ஆணைக்குழுவின் செயற்பாடுகள் முடங்கியதால் இலஞ்சக்குற்றச்சாட்டு முறைப்பாடுகள் மேலும் அதிகரித்து வருகின்றன எனத் தெரிவிக்கப்பட்டது.

(ஒ-1)


JEYATHEEBAM INVESTMENT LTD - JAFFNA

ஜெயதீபம் முதலீட்டு நிறுவனம் • யாழ்ப்பாணம்

## பதவி வெற்றிடம்

01)அபிவிருத்தி உத்தியோகத்தர்

02)பிரதேச கண்காணிப்பாளர்

கல்வித்தகைமை

1.க.பொ.த.(சா/த) ஆறு பாடம் சித்தி.
2.வெளிக்கள வேலைகளில் முன் அனுபவம்.
3.வயது எல்லை 18-45
4.ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

03)அலுவலக ஊழியர்

கல்வித் தகைமை

1.க.பொ.த. (சா/த)
2.வயது எல்லை 18-45
3.ஆண்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம்.

தகுதி உடையவர்கள் விண்ணப்பங்களை 12.05.2010இற்கு முன்னர் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

முகாமையாளர்,
ஜெயதீபம் முதலீட்டு நிறுவனம்,
இல.31, குறுக்குவீதி, நல்லூர்.
தொ.பே.:077 9705736, 077 6717204,
021 222 1721, 021 4921299


"ஜெயதீபம் என்றால் அபிவிருத்தி" (சி/567269)

## காணியுடன் கடை விற்பனைக்கு


3ஆம், குறுக்குத் தெருவில் கடை கட்டடத்துடன் கூடிய 2 பரப்புக் காணி உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:
077 020 1529

(97541)


## ஓராண்டு நினைவு ஸ்தோத்திர ஆராதனை


கந்தையா பேரானந்தம்
(ஓய்வுபெற்ற தபால் ஊழியர்)

பிறப்பு
08.10.1934

இறப்பு
04.05.2009

கர்த்தருக்குள் நித்திரையடைந்த கந்தையா பேரானந்தம் அவர்களின் ஓராண்டு நினைவில் ஸ்தோத்திர ஆராதனை செய்கின்றோம்.

புதிய செங்குந்தா வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
திருநெல்வேலி.

(97540)

மகள்,
மருமகன்.


# ஜி.சீ.ஈ சாதாரணதரப் பரீட்சை முடிவுகள் மற்றும் சில பாடசாலைகளின் பெறுபேறுகள்

யாழ்ப்பாணம்,மே4

2009ஆம் ஆண்டு டிசெம்பரில் நடைபெற்ற ஜி. சீ.ஈ சாதாரணதரப் பரீட்சையின் பெறுபேறுகள் அண்மையில் வெளியாகின. இதில் சிறந்த பெறுபேற்றினை எய்திய மாணவர்களின் விவரத்தை சில பாடசாலைகள் அனுப்பிவைத்துள்ளன. அந்தப் பெறுபேறுகள் இங்கு பிரசுரமாகின்றன.

**சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி**

த. வெங்கடேஸ்வரன்- 8ஏபி, த.பாதுஜன்-7ஏ2பி, சி.சண்மதுரன்-7ஏபிசி, ம.மிதுலா - 6ஏபி2சி, ப. சிந்துஜன் - 4ஏ5பி, சி.ஜெயரஞ்சினி-4ஏ2பி2சி, நா.நிரஞ்சனா-4ஏ,2சி,3எஸ்,ப.பிரதீபா- 3ஏ4பி2சி, சி.சுகிந்தன்-3ஏ4பிசிஎஸ், ச.பகீதரன்-3ஏ3பி2சி, ப.தயாபரன் -3ஏ2பி3சி.

**அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை**

இ. சுகன்யா - 4ஏபி3சிஎஸ், க.டிபிசன் - 2ஏ2பிசி4எஸ், பூ.டிலானி - 2ஏ2பிசி4எஸ், ச.கீர்த்திகா -2ஏபி2சி4எஸ், ஜெ.றெகோப்பியம் - ஏ3பி2சி3எஸ், கு.கனிஸ்ரா - ஏ3பிசி3எஸ், பா.சஜிதா-2பிசி3எஸ், ஜோ.மேரி நிஷிதா -3சி3எஸ்.

**பொலிகண்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை**

பா.பிரியதர்ஷினி - 9ஏ, உ.சோபிதா - 5ஏ2பி2சி, க.றஜீவன் - 4ஏ2பி3எஸ், ஞா.வினோதினி-4ஏ5சி, சி.கௌசிகன்-4ஏ4சி, அ. கான்சியூஸ் அனிஸ்ரன்-3ஏபி4சிஎஸ், சி.தனுஷா -3ஏபி3சி2எஸ், த.சுமிலா-2ஏபிசி4எஸ், வ.அருந்தஷா -2ஏ2பிசி3எஸ், சு.விக்னேஸ்வரன் - 2ஏசி5எஸ், மு.உஷாராணி-2ஏ2சி4எஸ், சோ.நிதர்சன்- ஏ3சி3எஸ், தே.தேவமலர்- 3பி5எஸ்.

**வட.இந்து மகளிர் கல்லூரி**

**தமிழ்மொழி மூலம்**

சு. ஜெயந்தினி -7ஏபிஎஸ், தி.ரஜிதா - 6ஏபிசிஎஸ், தி.சரூபி-5ஏ3பிசி,மெ. சோபனா-4ஏபி3சிஎஸ், நா.துர்க்கா -3ஏ2பி2சி2எஸ், த.தரண்யா -3ஏபிசி3எஸ், அ. ஆரணி -3ஏ5பிஎஸ், ப.சரண்யா-3ஏபி2சி2எஸ்,தே.கௌசிகா -3ஏ3பி2சிஎஸ், த.சாத்வீகா -3ஏ2பி2சி2எஸ், பு.பௌஸ்ரீனா-3ஏபி5சி.

**ஆங்கிலமொழிமூலம்**

ச.சாருசா-8ஏபி, செ.தர்சிகா -8ஏபி, கோ.தேனிகா-6ஏபி2சி, ஜெ.கீர்த்தனா - 6ஏபி2சி, ம.கௌசிகா -6ஏ3பி, சு.சுகன்யா - 6ஏ2பிசி,அ.யஸ்மின்-5ஏ2பிசிஎஸ்,ப. ஜனனி-5ஏபிசி2எஸ், க.கஜேந்தினி-3ஏ2பி3சிஎஸ், சி.விசியர்னா- 3ஏ3பிசி2எஸ்.

**வல்வை சிவகுரு வித்தியாசாலை**

செ. துவாரகா -3ஏ3சிஎஸ், பி.ஜோபிதா -2ஏ2பி3சி2எஸ்,ம.மாதுளாணி-2ஏபி3சி3எஸ், ப.பகீரதி -2ஏ3சி3எஸ்,ஜெ.சுகண்யா - ஏ2பி2சி3எஸ், த.ரியந்தினி - ஏபி2சி4எஸ், க.பிரபாகரன்- ஏ4சி3எஸ், க.விபூசுதன் -ஏ4சி3எஸ், சி.கமலினி- ஏபி5சி2எஸ்.


## தவறிவிட்டது

சந்திரசேகரம் குருசாந்த் என்பவரது 860132095V என்னும் தேசிய அடையாள அட்டை இலக்கம் இடப்பட்ட கடவுச் சீட்டு 27.04.2010 அன்று மனோகராச் சந்திக்கும் நாச்சிமார்கோயிலடிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

பத்திரகாளி கோயிலடி, வண்ணார் பண்ணை,
யாழ்ப்பாணம். தொ.பே: 0773926471.

## விற்பனையாளர்கள் தேவை

பருத்தித்துறை பஸ் நிலையச் சூழலில் ஆரம்பிக்கப்படவுள்ள அபிவிருத்தி லொத்தர் விற்பனை நிலையத்திற்கு விற்பனையாளர்கள் தேவை.

சம்பளம் பேசித் தீர்க்கப்படும்.

தொடர்பு: 0773913686,
0715982376

(97546)

## வேலையாள்கள் தேவை

1. மெசின் மைன்டர் (OFFSET)
2. பக்கவடிவமைப்பாளர்
3. பைன்டர்

முன் அனுபவமுள்ள / பழக விரும்புபவர்கள் தேவை.

ஞாயிறு தவிர்ந்த நாள்களில் பிற்பகல் 2 மணி முதல் 6 மணிவரை நேரில் வரவும்.

பொதிகை
கொம்பியூட்டர் கிராபிக்ஸ்,

(97546)

JAFFNA MEDICAL ASSOCIATION

## Annual General Meeting

The Council Members have decided to have the Annual General Meeting, to elect new members on 18th May 2010 at 11.00 am at the NTS Lecture hall.

The Office bearers will be elected.

All the Members and Doctors are cordially invited.

Teaching Hospital,
Jaffna.

Secretary JMA.

(c/567266)

## அறிவித்தல்

கணக்காய்விற்கான மீதிகளை உறுதிப்படுத்தல்

வலி.கிழக்கு (தெ.ப) ப.நோ.கூ.சங்கத்தின் 01.06.2008- 31.05.2009 காலப்பகுதிக்கான கணக்காய்வு நடைபெற்றுக் கொண்டிருப்பதனால் சங்கக் கிராமிய வங்கி

01. நீர்வேலி கிராமிய வங்கி
02. கோப்பாய் கிராமிய வங்கி
03. உரும்பிராய் கிராமிய வங்கி

கணக்கு வைத்திருக்கும் சகல வாடிக்கையாளரும் எதிர்வரும் 11.05.2010, 12.05.2010 ஆகிய திகதிகளில் கடமை நேரத்தில் 31.05.2009இல் தங்கள் புத்தகப்படியான மீதிகளைக் கிராமிய வங்கிப் புத்தகங்களின் மீதியுடன் ஒப்பிட்டு உறுதி செய்யும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

சங்கத்துடன் கொடுக்கல் வாங்கல்களை வைத்திருக்கும் சகல வாடிக்கையாளர்களும் மேற்படி கணக்காய்விற்காக 31.05.2010 இற்கு முன்னர் சங்கக் காரியாலயத்தில் கடமை நேரத்தில் சமுகமளித்து 31.05.2009இல் தங்கள் மீதிகளை உறுதிப்படுத்தும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

(சி/567268)

கணக்காய்வாளர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலைக்கழகம் நடத்திய ஹொக்கி; சம்பியன் வென்றது கிறாஸ்கொப்பர்ஸ்

யாழ்ப்பாணம்,மே.4

யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு அவை உதயன் ஊடக அனுசரணையுடன் நடத்திய ஹொக்கி சுற்றுப் போட்டியில் கிறாஸ் கொப்பர்ஸ் விளையாட்டுக் கழகம் சம்பியனாகியது.

யாழ்.பல்கலைக்கழக மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இறுதியாட்டத்தில் வட்டுக்கோட்டை ஒல்ட் கோல்ட் விளையாட்டுக் கழகமும் கிறாஸ்கொப்பர்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

முதல் பாதி ஆட்டத்தில் இரண்டு அணி வீரர்களும் எதுவித கோல்களையும் போடாமையால் ஆட்டம் சமநிலையில் முடிவுற்றது.

இரண்டாவது பாதி ஆட்டம் ஆரம்பமாகியதும் கிறாஸ்கொப்பர்ஸ் அணி வீரர் சக்தி தனது அணிக்காக ஒரு கோலினை பெற்றுக் கொடுத்தார்.

ஆட்ட நிறைவில் கிறாஸ்கொப்பர்ஸ் விளையாட்டுக் கழகம் 1:0 என்ற கோல் கணக்கில் வட்டுக்கோட்டை ஒல்ட் கோல்ட் விளையாட்டுக்கழக அணியை வென்று சம்பியனாகியது.



இதில் சிறந்த ஆட்டநாயகனாக கிறாஸ் கொப்பர்ஸ் விளையாட்டுக் கழக அணிவீரர் சி.ஏ.அரவிந்தனும் சிறந்த தொடர் ஆட்டநாயகனாக கிறாஸ் கொப்பர்ஸ் விளையாட்டுக்கழக வீரர் இ.சக்தியும் தெரிவு செய்யப்பட்டனர். (50-23)

## இறுதியாட்டம்

யாழ்ப்பாணம்,மே.4

யாழ்.மாவட்டப் பாடசாலைகளின் 19 வயது பிரிவு ஆண்களுக்கான மென்பந்துச் சுற்றுப போட்டியின் இறுதியாட்டம் நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 8.30 மணியளவில் கனகரத்தினம் மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இறுதியாட்டத்தில் யாழ்.மத்திய கல்லூரி அணியை எதிர்த்து யாழ்.இந்துக் கல்லூரி அணி மோதவுள்ளது. (50-23)

## யாழ்.பல்கலை ஹொக்கி அணி நாளை மறுதினம் கொழும்புக்கு

யாழ்ப்பாணம்,மே.4

கொழும்பு பல்கலைக்கழகம் நடத்தும் அனைத்து பல்கலைக்கழகங்களுக்கு இடையேயான ஹொக்கி சுற்றுப் போட்டி எதிர்வரும் 7ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொழும்பு பல்கலைக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த ஹொக்கி சுற்றுப் போட்டியில் பங்கு கொள்வதற்காக யாழ்.பல்கலைக் கழக அணி நாளை மறுதினம் வியாழக்கிழமை கொழும்பு பயணமாகின்றது. (50-23)

# தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மூன்றாவது தடவையாகவும் சம்பியன்

வலி.வடக்கு,மே4

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற 19 வயதுப் பிரிவு பெண்களுக்கான கரபந் தாட்டப் போட்டியில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மூன்றாவது தடவையாகவும் வலிகாமம் கல்வி வலய சம்பியனாகியது.

மல்லாகம் மகா வித்தியாலயம் மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் மானிப்பாய் மகளிர் கல்லூரியும் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியும் மோதிக் கொண்டன.

மூன்று சுற்றுக்கள் கொண்ட இப்போட்டியில் முதல் இரண்டு நேர் சுற்றுக்களில் மகாஜனக் கல்லூரி வெற்றிபெற்றது.

முதல் சுற்றில் காட்டிய எதிர்ப்பைக் கூட மானிப்பாய் மகளிர் கல்லூரி இரண்டாம் சுற்றில் காட்டாத நிலையில் மகாஜனக் கல்லூரி முதல் இரண்டு சுற்றுக்களையும் முறையே 25.21, 25.14 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றி பெற்று மூன்றாவது தடவையாகவும் மகாஜனக் கல்லூரி சம்பியனாகியது.

மூன்றாம் இடத்துக்கான போட்டியில் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியும் சங்கானை சிவப்பிரகாசம் வித்தியாலயமும் மோதிக்கொண்டன. இதில் முதல் இரண்டு சுற்றுக்களை பண்டத்தரிப்பு மகளிர் பாடசாலை 26.24, 25.14 புள்ளிகள் என்ற அடிப்படையில் சங்கானை சிவப்பிரகாசம் வித்தியாலயத்தை வெற்றிபெற்று மூன்றாம் இடத்தை தனதாக்கிக் கொண்டது. (50-86)

# கற்கோவளம் உதயதாரகை நடத்தும் 7பேர் கொண்ட உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம்,மே4

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் கற்கோவளம் ஐஸ் தொழிற்சாலையின் அனுசரணையுடன் கற்கோவளம் உதய தாரகை




விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 7 பேர் கொண்ட விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமையும் நாளை புதன்கிழமையும் கற்கோவளம் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ள ஆட்டங்களில் மோதும் அணிகளின் விவரம் வருமாறு-

**இன்றைய போட்டி**

* அண்ணாசிலையடி('பி') விளையாட்டுக் கழகம் எதிர் கலைமதி('பி') விளையாட்டுக்கழகம்(பி.ப. 3.30 மணி)
* யங்கம்பன்ஸ்('பி') அணி எதிர் சென் சேவியர்('ஏ') அணி(மாலை 4.30 மணி)

**நாளைய போட்டி**

* சென்.சேவியர் ('பி') அணி எதிர் வல்வை விளையாட்டுக் கழகம் (பிற்பகல் 3.30 மணி)
* கலைமதி('ஏ') அணி எதிர் டயமன்ஸ் ('ஏ') அணி (மாலை 4.30மணி) (50-23)







வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளின் 19 வயதுப் பிரிவுப் பெண்களுக்கு இடையே நடைபெற்ற கரபந்தாட்டப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, மானிப்பாய் மகளிர் கல்லூரி, பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி வீராங்கனைகள், விருந்தினர்கள், கல்வி அதிகாரிகள் அதிபர்கள், ஆசிரியர்கள், பயிற்றுவிப்பாளர்கள் ஆகியோருடன் நிற்பதைப் படங்களில் காணலாம். (படங்கள்: நேசன்)

# 15வயதுப் பிரிவுக்கான வலைபந்தாட்டம்; கோக்குவில் இந்துக் கல்லூரி வெற்றி

வலி.வடக்கு,மே4

யாழ்ப்பாணம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற 15 வயதுப் பிரிக்கான வலைபந் தாட்டப் போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரி சம்பியனாகியது.

கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப்போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரியும் வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையும் மோதிக்கொண்டன.

இருஅணிகளும் கடுமையாக மோதிக் கொண்டதுடன் புள்ளிகள் பெறும் வாய்ப்புகளும் மிகவும் குறைவாகவே இரு அணிகளுக்கும் கிடைக்கப்பெற்றன.

முதல்பாதி ஆட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி 06.03 புள்ளிகள் என்ற நிலையில் காணப்பட்டது. இரண்டாம் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் கடுமையாகப் போராடிய போதிலும் கொக்குவில் இந்துக் கல்லூரி 05.04 புள்ளிகள் என்ற நிலையில் ஆட்டம் முடிவடைந்தது.

ஆட்ட இறுதியில் கொக்குவில் இந்துக் கல்லூரி 11.07 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றிபெற்று யாழ்.வலயச் சம்பியனாகியது.

மூன்றாம் இடத்துக்கான போட்டியில் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியும் சுண்டிக்குளி மகளிர் கல்லூரியும் மோதிக் கொண்டன. இதில் சுண்டிக்குளி மகளிர் கல்லூரி வெற்றிபெற்று மூன்றாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது. (50-86)

# 17வயதுக்குட்பட்டோருக்கான உதைபந்தாட்டம்; 8 பிரிவுகளாக பாடசாலை அணிகள் களத்தில்

வலி.வடக்கு,மே4

யாழ்.மாவட்டத்தில் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையேயான 17 வயதுப் பிரிவு ஆண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டிகள் நேற்றுத் திங்கட்கிழமை காலை 8 மணிமுதல் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானங்களில் நடைபெற்றுவருகின்றன. .



தமிழ் சிங்[illegible] 513 ஆவது [illegible]படையணியினர் நடத்திய விளையாட்டு[illegible]களும் இணைந்து விநோத உடைப் போட்டியில் கலந்துகொள்டுள்ளதைப் படத்தில் காணலாம்.(படம்:நேசன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்.மாவட்ட பாடசாலை அணிகள் எட்டுப் பிரிவுகளாக பிரிக்கப்பட்டு இப் போட்டிகள் நடைபெற்றுவருகின்றன.

'ஏ' பிரிவில் கரவெட்டி தேவரையாளி இந்துக் கல்லூரி, நாரந்தனை றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை

'பி' பிரிவில் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி, தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி.

'சி' பிரிவில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி, புங்குடுதீவு கணேசா வித்தியாலயம்

'டி'பிரிவில் மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதயக் கல்லூரி, புங்குடுதீவு மகா வித்தியாலயம்

'ஈ' பிரிவில் மானிப்பாய் இந்துக் கல்லூரி யாழ்ப்பாணம், புனித பத்திரிசியார் கல்லூரி.

'எவ்' பிரிவில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி சாவகச்சேரி, இந்துக் கல்லூரி.

'ஜி' பிரிவில் நாவாந்துறை றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் வித்தியாலயம், இமையாணன் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை

'எச்' பிரிவில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியும் இடம்பெற்றுள்ளன. (6-86)

# ஆபத்தான நோய்களை ஏற்படுத்தும் மன அழுத்தத்தை இல்லாமல் செய்வதற்கான ஆறு எளிய வழிகள்

தொழில் கொள்ளும் நிறுவனங்கள் தமது ஊழியர்களுக்கு மன அழுத்தம் அற்ற சூழ்நிலையை வழங்கவேண்டியது அவசியமாகும். ஊழியர் மன அழுத்தத்துடன் வேலை செய்யும்போது உற்பத்தித்திறன் மிகவும் குறைவடையும். மேலைநாடுகளிலும்' ஆசியாவின் முன்னுதாரண நாடுகளாகிய மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளிலும் மன அழுத்தமற்ற சூழ்நிலையை உருவாக்குதல, ஊழியர்களை அதை எதிர்கொள்ளப் பயிறறுவித்தல் போற்றவற்றில் நிறுவனங்கள் அதிக அககறை காட்டுகின்றனர். ஊழியர்கள் குறைந்தது நான்கு மாதங்களுக்கு ஒரு முறை Soft Skills Trainers மூலமாக இப்படிப்பட்ட பல்வேறுபட்ட திறன்களுக்காக பயிற்றுவிக்கப்படுகிறார்கள். மன அழுத்த முகாமைத்துவம்(Stress Managemnet)பற்றிய எனது விசேட பயிற்சிப்பட்டறைகளில் நான் வழங்கும் சில குறிப்புகளை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

மன அழுத்தம் - புள்ளிவிவரம்

2006 ல் Chartered Management Institute and Workplace Health நிறுவனத்தினால் 1542 முகாமையாளர்களிடம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்படி பின்வரும் தரவுகள் பெறப்பட்டன.

•1542 நபர்களிலும்,தாம் மன அழுத்தம் இன்றி இருப்பதாக உணர்பவர்கள் 50% வீதமானவர்கள் மட்டுமே.

• 43வீதமனவர்கள் தாங்கள் அதிகம் கோபப்படுவதாகவும், 31வீதமானவர்கள் தாஙகள் நகைச்சுவை உணர்வை இழந்து விட்டதாகவும் தெரிவித்தனர்.


•55வீதமானவர்கள் தாங்கள் தசைநார் சம்பந்தமான உபாதைகளிற்கும் உடல் நோக்களிற்கும் உள்ளாவதாகவும் 44வீதமானவர்கள் அடிக்கடி தலையிடியால் பாதிப்படைவதாகவும் குறிப்பிட்டிருந்தனர்.

•55வீதமானவர்கள் செய்யும் வேலைகளில் விரைவில் களைப்படைவதாகவும் 57 வீதமானவர்கள் தூக்கமின்மை சம்பந்தமான பிரச்சினைகளை கொண்டிருப்பதாகவும் தெரிவித்திருந்தனர்.

மன அழுத்தத்துடன் ஊழியர்கள் வேலை செய்வதால் ஐக்கிய இராச்சியத்தில் வருடத்தில் 13 மில்லியன் வேலை நாட்கள் வீணாகின்றன. 85% உயிருக்கே உலை வைக்கும் நோய் அதிகரிப்பு காணப்படுகின்றது (UK HSE stress statistics 2006). மன அழுத்தமுள்ள ஊழியர்கள் தாம் வேலை செய்யும் நிறுவனங்கள் பற்றிய தப்பபிப்பிராயங்களை வெளியே பரப்புகின்றனர். எனவே நிறுவனங்கள் தமது கட்டடங்கள், பொருள்கள் என்பவற்றில் கொள்ளும் அக்கறையைவிட ஊழியர்களின் மன நலன்களில் கொள்வது இலாபம் தரும் விடயமாக நோக்கப்படுகிறது.

மன அழுத்தத்தினால் மூளையின் செயல்திறன் 50வீதத்திற்கு மேலாக குறைவடைகின்றது. ஞாபக சக்தி,கவனித்தல், கற்பனாவளம் போன்ற பகுதிகள் மிக விரைவாக குறைவடைய ஆரம்பிக்கிறது. மன அழுத்தத்தை நீக்குவதன் மூலம் மாரடைப்பு ஏற்படும் சந்தர்ப்பத்தை 75விகிதத்தினால் குறைக்க முடியும் என அமெரிக்காவில் நடைபெற்ற ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

மிக வேகமாக இயங்கும் தொழில் நிறுவனங்களில் சிறிய பதவி வகிப்போருக்கு கூட வேலைப்பழுவினாலும் மேலதிகாரிகளின் மற்றும் சக ஊளியர்களின் நடத்தை, தொழிலின் தன்மை போன்ற பல்வேறு காரணங்களினாலும் மன அழுத்தம் (stress) ஏறபடுகிறது .



மன அழுத்தத்தை முகாமைத்துவம் செய்யாவிடில்,

உடல்,மன சம்பந்தமான ஆபத்தான நோய்கள் ஏற்படும் அல்லது அதிகரிக்கும் (மாரடைப்பு,சர்க்கரை நோய்,மன விரக்தி)

குடும்ப வாழ்வில் அமைதியாக ஈடுபட முடியாத நிலையும் தன்னிலை வெறுப்பும் ஏற்படும்.

வேலையிலிருந்து நீக்கப்படும் அல்லது நீங்கும் சூழ்நிலை ஏற்படும

மன அழுத்தம் என்பதை ஒருபோதும் மிகச்சிறிய விடயமாக நீங்கள் கருதலாகாது. உங்களை அறியாமலே அலுவலகம் செல்லும் போது வெறுப்பு ஏற்படுவது கூட மன அழுத்தத்தின் விளைவுதான்.

தொழில் தலங்களில் மன அழுத்தம் ஏற்படும் சூழ்நிலைகளுக்கான உதாரணம்

•விருப்பமில்லாத துறையில் தொழில் புரிதல்.

•தொழிலில் நிலைத்திருப்து பற்றிய நிச்சயமின்மை

•அதிக வேலை நேரம்

•மிக அதிக நேரம் வேலையின் நிமித்தம் குடும்பத்தை பிரிந்திருக்க வேண்டி வருவது.

•ஒவ்வொரு முறையும் குறிப்பிட்ட ஒரு வேலையை செய்யும் போது உங்கள் மேலதிகாரி(Boss) சிறிய தவறுகளையும் சுட்டிக்காட்டி உங்களை புண்படுத்துவது

•மற்றவர்களின் தவறுகளுக்கு நீங்கள் பொறுப்பேற்க வேண்டி வருவது

•அதிக சிரத்தையுடன் வெற்றிகரமாக நீங்கள் செய்த வேலைகள் எவையும் பாராட்டப்படாதது.

•சக ஊழியர்களின் தவறான நடத்தைகளை விமர்சிக்க முடியாமலும் மேலதிகாரியிடம் முறையிட முடியாமலும் சகித்துக் கொள்ள வேண்டி வருதல்.

•வேலை செய்யுமிடத்தில் உங்கள் கருத்துகளுக்கு மரியாதை கிடையாமை

இப்படி இன்னும் பல வகைகளில் உங்களுக்கு மன அழுத்தத்தை உங்கள் தொழில் ஏற்படுத்தலாம். நவீன உலகின் வேகமான நகர்வுகளில், மன அழுத்தம் ஏற்படும் சந்தர்ப்பங்களை நீங்கள் தவிர்க்கவே முடியாது. மன அழுத்தம் ஏற்படுத்துபவரிடமிருந்து நாசூக்காக விலகி நடப்பதும் அதனை குறைக்கக்கூடிய புதிய பழக்கவழக்கங்களையும் உருவாக்கிக்கொள்வதுமே இதற்கான சிறந்த வழியாக அமையும்.

மன அழுத்தம் ஏற்படுத்தும் சம்பவங்களின்போது நீங்கள் கையாளக்கூடிய வழிமுறைகள் சில இங்கே தரப்பட்டுள்ளன, இந்த முறைகள் உங்கள் மன அழுத்தத்தை உடனடியாக தீர்க்கும் நோக்குடன் வழங்கப்பட்டவை அல்ல ,மன அழுத்தத்தினால் ஏற்படக்கூடிய விளைவுகளை குறைக்கும் நோக்குடன் வழங்கப்பட்டவை. (உங்கள் அதிக கோபம் மற்றும் அதனால் எடுக்கக் கூடிய உடனடி தவறான முடிவுகள் போனறன) :

இது ஒரு சுய வைத்திய முறையாகும் (Self Healing),பல்தேசிய நிறுவன ஊழியர்களிடம் பரீட்சிக்கப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட முறைகளே இங்கு வழங்கப்படுகின்றன.

மன அழுத்தம் ஏற்படுத்துபவரிடமிருந்து அல்லது சம்பவம் நடந்த இடத்திலிருந்து விலகுங்கள்.

முடியுமாயின் அலுவலக கட்டடத்திலிருந்து வெளியே வாருங்கள். இயற்கையான காற்று,மரங்கள், தெருவில் வாகனங்கள்,மனிதர்கள் என்று பலதையும் பார்ப்பது உங்கள் பிரச்சினை பற்றிய உணர்வு கலந்த நிலையிலுருந்து உங்களை படிப்படியாக மாற வைக்கும். இப்படி வெளியே போகும் போதே பின்வருமாறு சொல்லியபடியே செல்லுங்கள்

"நான் XXXXXX(உங்கள் பெயர்) " இப்போது இந்த கட்டடத்தை விட்டு வெளியே செல்கிறேன்"

"நான் XXXXXX(உங்கள் பெயர்) " இப்போது இந்த கட்டடத்தை விட்டு வெளியே வந்துவிட்டேன்.

தொடர்ந்து துள்ளல்(jogging )போன்ற சிறிய உடல் பயிற்சியை சிறிது நேரத்திற்கு செய்யலாம். அல்லது அருகில் இருக்கும் நாயை செல்லமாக உதைக்கலாம்(பிராணி வதை சங்கத்தினர் கண்ணில் படாமல்...) கொஞ்சம் சாப்பாடு போடலாம் ,பூமரம் சிலவற்றிற்கு தண்ணீர் உற்றலாம்.

ஒரு கப் தேநீர் எப்படி ?

நீங்கள் தேனீர் அல்லது கோப்பி பிரியராக இருந்தால் இது உகந்த வழி . தேனரை சுடச்சுட அருந்தியவாறே பத்திரிகை படிக்கலாம் அல்லது நண்பர் ஒருவருடன் தொலைபேசியிலாவது வம்பளக்கலாம்.

தேநீரை நீங்களே தயாரிக்க முடிந்தால் சிறிது எலுமிச்சம் சாறு கலந்து தயாரித்து ஐஸ் கட்டிகளையும் போட்டு (Ice Lemon Tea ) அருந்தவும்.

அதிக நீர் அருந்துங்கள் (தேனீர் அல்ல )

எமது உடலின் சிறப்பான உள் அவயவச் செயற்பாட்டிற்கு(metorbolism ) நீர் முக்கியமானது. எமது மூளையின் செயற்பாடும் இதில் அடங்கும். ஒரு போத்தல் நீர் அல்லது ஒரு கப்பை விட அதிக அளவான நீரை அருந்துங்கள். அதிக நீர் அருந்திய பின் உடல் ஆறுதலான ஒரு தன்மையை உங்களில் தோற்றுவிக்கும். உங்கள் மேசையில் எப்போதும் தண்ணீர் போத்தலை வைத்திருங்கள் ,உங்கள் அருகே நீர் இருந்தால் உங்களால் அடிக்கடி அருந்த முடியும். நீர் அருந்தினால் சிறுநீர் கழிக்கவும் அடிக்கடி செல்ல வேண்டி இருக்கும. இது சிறிய ஓய்வு நேரத்தையும் மன அழுத்த குறைவையும் உங்களை அறியாமலே உருவாக்கும்.

நகைச்சுவையை அனுபவியுங்கள்.

மனம்விட்டு சிரிப்பதால் மூளை புத்துயிர் பெறுகின்றது. அத்துடன் மூளை வேறு வழியில் சிந்திக்கவும் ஆரம்பிக்கிறது ,எனவே மன அழுத்த சம்பவத்திலிருந்து உடனடி விடுதலையை இது வழங்கும். நகைச்சுவை துணுக்குகளை வாசிக்கலாம். நகைச்சுவை காட்சிகளை உங்கள் போன் திரையிலோ ,அலுவலக கணினியிலோ பார்க்கலாம். (வசதி இருப்பின்) உங்களுக்கு தெரிந்த வகையில் சிரிக்கக்கூடிய சந்தர்ப்பத்தை உருவாக்கிக்கொள்ளுங்கள்.

பிடித்ததை உண்ணுங்கள்

உங்களுக்கு வழமையாக மிகவும் பிடிக்கும் உணவு வகையை உண்ணுங்கள். உதாரணமாக உங்களுக்கு மிகப்பிடித்த ஐஸ் கிறீமை தேடி அருந்துவது. இல்லையென்றால் ஒரு முழு ஆட்டு பிரியாணியையே ஒரு பிடி பிடிக்கலாம். கடைக்கு செல்வது, உணவின் மணம, மற்றும் சுவையை அனுபவிப்பது போன்ற விடயங்கள் உங்களது மன அழுத்த நிலையை மாற்றிவிடும்.

6.பூனைத்தூக்கம் அல்லது குட்டித் தூக்கம்.

தூங்கி எழுவது உங்களை Re charge செய்யும்(மீள் உயிர் ஊட்டும்)இயற்கையான செயற்பாடாகும். 15 முதல் 30 நிமிடங்கள் உங்களால் தூங்க முடியுமாயின் நிச்சயம் புத்துணர்ச்சி பெறுவீர்கள். ஊங்கள் வேலைத் தலத்தில் அதற்கு சூழ்நிலை இல்லாவிடில் உங்கள் மேசையிலேயே கண்களை மூடி மூச்சை ஆழ இழுத்து விடுவதை 10 நிமிடங்கள் செய்யுங்கள்.

இங்கே நான் குறிப்பிட்ட வழிகள் ஒரே நபருக்கு பொருந்துவன அல்ல. உங்களுக்கு எந்த முறை முடிகிறதோ அதை பினபற்றுங்கள். உங்களுக்கேற்ப புது உத்திகளையும் உருவாக்கி பயன்படுத்த கற்றுக் கொள்ளுங்கள். உங்கள் கருத்துக்களை எனக்கு தெரியப்படுத்தலாம். "Life is the process of learning"



S.Manimaraa
B.A(Hon),Dip(Mkt)Dip(IT)
Soft Skills Trainer
Knowledge Universe-Jaffna
enq@kugroup.info

# கறையான்களைக் கட்டுப்படுத்த நவீன சிகிச்சை முறை

'சுரேன் குக் எஜென்சீஸ்' இலங்கையின் முன்னோடியான கிருமிப்பூச்சிகளை கட்டுப்படுத்தும் ஒரு நிறுவனமாகும். மேலும் கறையான்களை கட்டுப்படுத்தும் புதிய சிகிச்சை முறையை அறிமுகப்படுத்திச் சாதனைபடைத்துள்ளார்கள். இப்புதிய சிகிச்சை முறையானது கறையான்களை இரைவைத்து அல்லது கண்ணிவைத்து அழிப்பதாகும் (Termite Bait Station) கறையான்களைக் கட்டுப்படுத்த தற்போது வழக்கத்தில் உள்ள முறையானது நிலத்தை துளையிட்டு கிருமிநாசினிகளை உட்புகுத்துவதாகும். ஆனால் இப்புதிய கறையான் அழிப்பு சிகிச்சை முறையின்படி நிலத்தை துளையிடுவதோ கிருமி நாசினிகளைத் தெளிப்பதோ தவிர்க்கப்படுகின்றது.

மேலும் ஒரு புதிய தொழில்நுட்பமான கறையான் கண்டுபிடிப்பு கமராவை (Termite Camera) இலங்கை யில் முதல் முறையாக அறிமுகப்படுத்தியுள்ளார்கள். இதன் சிறப்பம்சம் கண்களுக்குப் புலப்படாத நிலத்தின் அடியினிலோ அல்லது ஆழமான சுவர் உட்புறங்களிலோ காணப்படுகின்ற கறையான்களை இந்த கமராவினால் இலகுவாகக் கண்டறியலாம்.

மரபு வழியிலான கறையான் அழிக்கும் முறை என்பது கிருமிநாசினிகளைக் கொண்டு ஒரு தடுப்பு முறையைக் கட்டடத்தைச் சுற்றி அமைத்தலாகும். இதன்போது பெறுமதிமிக்க டயில்ஸ், மரத்தரை போன்றவற்றுக்குச் சேதம் ஏற்படுகின்றது.

நிலத்தை ஒவ்வொரு மீற்றர் இடைவெளிகளிலும் துளையிட்டு அழுத்தப் பம்பியினால் கிருமிநாசினிகளை உள்ளே செலுத்துவது ஒரு வழக்கத்திலுள்ள முறையாகும்.

சுரேன் குக் ஏஜென்சீஸ் சர்வதேச தரத்திலான அங்கீகரிக்கப்பட்ட கிருமிநாசினிகளைக் கொண்ட உலக சுகாதார நிறுவன (W.H.O.) அமைப்புக்களினால் உத்தரவாதம் பெற்ற உயரிய பாதுகாப்பான கிருமிநாசினிகளைக் கொண்டு சேவையை வழங்குகின்றது.

விளம்பர வரணம்

தலைமை அலுவலகம் கொழும்பிலும் நாடுமுழுவதும் கிளைகளைக் கொண்டு 24 மணி நேரமும் வாடிக்கையாளர்களுக்குச் சேவையில் ஈடுபடுகின்றது.

புதிய கண்டிக் கிளை அலுவல்கம் வாடிக்கையாளர்களின் நலன்கருதி கிழமையில் ஏழு நாள்களும் உடன் அழைப்புக்குச் சேவையில் ஈடுபடக் காத்திருக்கின்றது. (விரைவு தொலை பேசி இலக்கம் 077 2398098)

நவீன முறையிலான கறையான் ஒழிப்பைப் பற்றி (Termite Bait Station) நிறுவனத்தின் நிர்வாகி திரு.ரஜிதகுக் தெரிவிக்கையில் ஏறக்குறைய 2000 கறையான் இரை அழிப்பு நிலையங்கள் வெற்றிகரமாகக் குறைந்த நாள்களில் பொருத்தப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

கறையான் அழிப்பு இரை நிலயங்களைப் பொருத்துவதினால் எற்படுகின்ற சாதகமான காரணிகள்.

* மிக இலகுவாக பொருத்திக் கொள்ளலாம்
* விரைவான செயற்பாடு
* துளையிடுதல், கிருமிநாசினி தெளித்தல் தேவையேற்படாது.
* நம்பகத்துவமான சுற்றுச்சூழல்
* உத்தரவாதம்

மேலும் விவரங்களை அறிந்து கொள்ள இணையத்தள முகவரி www.surencooke.com அல்லது தொலைபேசி அழைப்பு திரு.ஒலிவர் 0777 681679 மூலம் தொடர்பு கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்களாதேஷில் கடும் மழை; சூறாவளி 15 பேர் உயிரிழப்பு; 50 பேர் படுகாயம்!

## ஆயிரக்கணக்கானோர் வீடுகளை இழந்தனர்

டாக்கா, மே 04

பங்களாதேஷைக் கடும் மழையோடு தாக்கிய சூறாவளி, மின்னல், வெள்ளம் ஆகியவற்றின் அனர்த்தங்களுக்கு 15 பேர் கொல்லப்பட்டனர். ஐம்பதுக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர் என பொலிஸாரும், பேரிடர் நிவாரண முகாமைத்துவ அதிகாரிகளும் தெரிவித்தார்கள்.

பங்களாதேஷில் ஞாயிற்றுக்கிழமை விளைந்த அனர்த்தங்களால் ஆயிரக்கணக்கானோர் வீடுவாசல்களை இழந்துள்ளனர். நூற்றுக்கணக்கான வீடுகள் சேதமடைந்துள்ளன. வட மைமென்சிங் பிராந்தியத் தில் நான்கு மாவட்டங்கள் பலத்த சேதங்களுக்குள்ளாகியுள்ளனஎன்றும்அவர்கள்விவரித்தார்கள்.

கடும் மழையோடு கூடிய புயலால் மரங்களும், மின்கம்பங்களும் பிடுங்கி எறியப்பட்டுள்ளன. பெருவாரியான பயிர் நிலங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. மண்சரிவுகளால் பல இடங்களில் பாதைகள் துண்டிக்கப்பட்டு, போக்குவரத்துகள் தடைப்பட்டுள்ளன என்றும் அவர்கள் ஊடகங்களுக்குத் தெரிவித்தார்கள்.

வருடாந்தம் பங்களாதேஷில் ஏப்ரலில் ஆரம்பமாகும் கடும் மழையும், புயலும் ஜூன் மத்திவரை நீடிக்கும். இந்த அனர்த்தங்களுக்கு ஒவ்வோர் ஆண்டும் டசின் கணக்கானோர் சிலவேளைகளில் நூற்றுக் கணக்கானோர் பலியாவது [illegible] பேரிடர் நிவாரண முகாமைத்துவம் [illegible] கூறியது.

கடும் புயலோடு தற்போது பெய்யும் பலத்த மழை நீடிக்கக் கூடிய சாத்திய முண்டு என பங்களாதேஷ் காலநிலை அவதானிப்பு மையம் தெரிவித்தது.

வீடுவாசல்களை இழந்த ஆயிரக்கணக்கானோர் பாடசாலைகளிலும், மண்டபங்களிலும், வழிபாட்டு ஸ்தலங்களிலும் தங்கவைக்கப்பட்டுள்ளார்கள். நதிகளின் நீர்மட்டம் துரிதமாக அதிகரித்து வருவதால், தாழ்ந்த பகுதிகளிலுள்ள மக்கள் வெளியேற்றப்பட்டு வருகிறார்கள் என அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# நியூயோர்க்கில் கார் வெடிகுண்டு: பாக். தலிபான் அமைப்புப் பொறுப்பேற்பு

வாஷிங்டன், மே 04

நியூயோர்க்கின் முக்கிய பகுதியான ரைம்ஸ் சதுக்கத்தில் வெடிகுண்டுடன் கார் நிறுத்திவைக்கப்பட்டதற்குப் பாகிஸ்தான் தலிபான் அமைப்பு பொறுப்பேற்றுள்ளது.

தெரிக்-இ-தலிபான் என்ற அமைப்பு யூட்யூப் இணையத்தள ஒலிநாடா மூலம் வெளியிட்டுள்ள செய்தியில் இத்தகவலை தெரிவித்துள்ளது.

ஈராக்கில் அண்மையில் அல்-குவைதாவின் முக்கிய தலைவர்கள் இருவர் கொல்லப்பட்டமை, பாகிஸ்தானில் அமெரிக்கப் படைகள் தாக்குதல் நடத்தியமை, பாகிஸ்தானைச் சேர்ந்த நரம்பியல் விஞ்ஞானி ஒருவரை அமெரிக்கா தரக்குறைவாக நடத்தியமை ஆகிய காரணங்களுக்குப் பழிவாங்கும் நடவடிக்கையாக இந்த முயற்சியில் தாங்கள் ஈடுபட்டனர் என அவர்கள் தெரிவித்துள்ளனர்.


## Network Engineer

**Government Scholarship**

① System Admin., System Engineer போன்ற வருமானம் கூடிய வேலைவாய்ப்பு

① வெளிநாட்டு விசாவிற்கான மேலதிக புள்ளிகள்.

① USA,UK பல்கலைக்கழகங்களில் Master Degree

*Carrier Guidance, Student Visa, Work Permit

① செயன்முறையுடன் கூடிய விரைவான வகுப்புக்கள்

**Per Module- ~~15000/=~~ 4800/=**

Microsoft நிறுவன அதிபர் Bill Gatesஇன் கையொப்பத்துடன் கூடிய சர்வதேச தர சான்றிதழ்

**Free** Diploma in Hardware Technology-DHT, Diploma in English, COMPUTER DRIVING LICENCE-ICDL

இச்சலுகை இன்னும் சில நாட்கள் வரை [illegible]

MCS Supported By UNDP/JRRP T.P-772395895

324, பலாலி வீதி, பரமேஸ்வராசந்தி அருகில் யாழ்ப்பாணம்


# நியூயோர்க் கார்க்குண்டுத் தாக்குதல் முயற்சி: புலனாய்வுத்துறையினர் தீவிர விசாரணை

நியூயோர்க், மே 04

நியூயோர்க் ரைம்ஸ் சதுக்கத்தில் காரொன்றுக்குள் குண்டு வைக்கப்பட்டிருந்தமை தொடர்பாக புலனாய்வுத் துறையினர் துப்பு துலக்குவதில் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

இக்குண்டுத் தாக்குதல் முயற்சிக்கும், தலிபான் தீவிரவாத அமைப்புக்கும் தொடர்பு இருக்காது. இதற்கான அறிகுறிகளும் கிடையாதென நியூயோர்க் பொலிஸ் ஆணையாளர் ரே கெலி ஞாயிற்றுக்கிழமை காலை பத்திரிகையாளர் மாநாடொன்றில் தெரிவித்தார்.

வெடிப்பொருள்களுடன் இரு கடிகாரங்கள் கொள்கலன் ஒன்றோடு கம்பிகளால் இணைக்கப்பட்டிருந்தன. இது தன்னியக்கக் கருவியாக இருக்கலாம் என நம்பப்படுகிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்தப் பகுதியில் 82 புகைப்படக் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன. 30 கருவிகள் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளன. மூன்று கருவிகளிலிருந்து சுதந்திரமான தகவல்கள் கிடைத்துள்ளன என்றும் ரே கெலி விவரித்தார்.

40 வயது மதிக்கத்தக்க வெள்ளை மனிதரொருவர் அப்பகுதியில் கறுப்பு நிற ஷேர்ட்டைக் கழற்றி தனது உறைக்குள் வைப்பது புகைப்படக்கருவியில் பதிவாகியுள்ளது. பென்சில்வேனியாவிலுள்ள நபர் ஒருவருடனும் பொலிஸார் தொடர்புகொண்டுள்ளனர். அவர் தனது வீடியோப் புகைப்படக்கருவியில் சந்தேக நபரை படம் பிடித்திருக்கக்கூடும் என நம்பப்படுகிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

அமெரிக்காவின் நியூயோர்க்கிலுள்ள 'ரைம்ஸ்' சதுக்கத்தில், ஞாயிற்றுக்கிழமை அதிகாலை மர்ம காரில் இருந்த வெடிகுண்டால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

நியூயோர்க் பொலிஸார் விரைந்து செயற்பட்டு அக்குண்டை செயலிழக்கச் செய்தனர். இதனால், பயங்கர குண்டுவெடிப்பு தவிர்க்கப்பட்டது.

பொலிஸாரின் விரைவான நடவடிக்கைக்கு அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா பாராட்டுத் தெரிவித்துள்ளார். அமெரிக்காவின் நியூயோர்க் நகரத்திலுள்ள, 'ரைம்ஸ்' சதுக்கம், உலகின் பிரபலமான சுற்றுலாத் தளங்களில் ஒன்று. உலகின் பல பகுதிகளி லிருந்து சுற்றுலாப் பயணிகள் இங்கு வந்தவண்ணம் இருப்பர். அதனால் இப்பகுதி எப்போதும் பரபரப்பும் நெரிசலும் மிகுந்த தாக இருக்கும்.

சனிக்கிழமை மாலை, இங்குள்ள 45 ஆவது தெருவில், ஒரு மர்மக் கார் நின்றிருந்தது. விளையாட்டுப் போட்டியில் பயன்படுத் தப்படும், 'நிசான் பாத்பைண்டர்' ரக அடர்பச்சை நிறம் உடைய அந்தக் காரின் பின்புறத்திலிருந்து புகை வெளிவந்திருக்கிறது. ஆபத்துக் காலத்தில் எரியும் விளக்குகள் ஒளிர்ந்து கொண்டிருந்தன.

அருகிலிருந்த 'டி-ஷேர்ட்' கடையின் வியாபாரி, மர்ம காரிலிருந்து வரும் புகையையும், விளக்கு ஒளிர்வதையும் பார்த்துவிட்டு, பொலிஸாருக்குத் தகவல் அனுப்பினார். உடனடியாக அப்பகுதியில், நியூயோர்க் பொலிஸார் குவிக்கப்பட்டனர். தொடர்ந்து காரிலிருந்து புகை வந்து கொண்டிருந்ததால், உள்ளே வெடிகுண்டு ஏதேனும் இருக்கிறதா என்று பரிசோதிப்பதற்காக, வெடிகுண்டு சோதனை நிபுணர்கள் வரவழைக்கப்பட்டனர்.

அதன்பின், காரின் பின்புற ஜன்னல் உடைக்கப்பட்டு, ரோபாட் கருவி ஒன்று உள்ளே அனுப்பப்பட்டது. அதில், காரின் பின்புற இருக்கையில், 'ப்ரோபேன்' வாயு அடங்கிய மூன்று பெட்டிகள், பெட்ரோல் நிரப்பப்பட்ட 18 லீற்றர் கொள்ளளவு கொண்ட இரண்டு கேன்கள், குறைந்த சக்திகொண்ட வெடி பொருள் பவுடர், இரண்டு டைமர் கடிகாரங்கள் இருந்தமை கண்டறியப்பட்டது.

உடனடியாக, செயலில் இறங்கிய வெடிகுண்டு நிபுணர்கள் அவற்றின் இணைப்பைத் துண்டித்து வெடிகுண்டை செயலிழக்கச் செய்தனர்.


## 33ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர் கந்தையா தர்மராசா

கடந்த 03.04.2010 அன்று இறைபதமடைந்த எமது குடும்பத்தலைவரின் மரணச்சடங்கில் நேரிலும், தொலைபேசியிலும் எமது துக்கத்தில் பங்கு கொண்டோருக்கும், இறுதிவரை பல்வேறு வழிகளிலும், பற்பல உதவிகள் புரிந்த அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அன்னாரின் வீட்டுக் கிருத்திய கிரியைகள் நாளை (05.05.2010) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால், அத் தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அரசடி வீதி,
வடலியடைப்பு, பண்டத்தரிப்பு. (97561) குடும்பத்தினர்.



## 45ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 1983 ★ 12 ★ 01



மறைவு 2010 ★ 03 ★ 22

செல்வி தனுசா செல்வராசா

(வேலணை மேற்கு, வேலணை, 6ஆம் வட்டாரம்)

எமது குடும்பத்தின் ஏக புத்திரியாகத் தோன்றிக் குல விளக்காக வாழ்ந்த அன்பு மகள் காலமாகிய செய்தி அறிந்து வருகை தந்து பல்வேறு வழிகளிலும் உதவிகள் புரிந்தும், மரணச் சடங்கின் போது கலந்து துயரில் பங்கு கொண்ட சகல அன்பு உள்ளங்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நாளை [05.05.2010] புதன்கிழமை முற்பகல் 11மணிக்கு எமது கோப்பாய் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகளிலும், ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

கந்தசாமி கோயிலடி,
கோப்பாய் மத்தி,
கோப்பாய். (97565) குடும்பத்தினர்.



## முதலாம் ஆண்டு நினைவலைகள்



அமரர் நடேசன் சந்திரமோகன்

(ஊழியர், மருதங்கேணி கடற்றொழிலாளர் சமாசம்)

மண்ணில் 01.08.1967 விண்ணில் 04.05.2009

ஆண்டொன்று போனதைய்யா-உன்
அழகிய நினைவுகளே ஆழ் நெஞ்சில்
மீண்டும் மீண்டும் உதிக்குதைய்யா-உன்
உருவம் மட்டும் தெரியலையே.

அன்னாரின் இல்லத்தில் இன்று (04.05.2010)செவ்வாய்க்கிழமை நடைபெறவிருக்கும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளும்படி பணிவுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

குறிப்பு: இந்த அழைப்பினைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

[illegible]. (97571) மனைவி.



## கொழும்பு பல்கலைக்கழக டிப்ளோமா

கொழும்பு பல்கலைக்கழக தகவல் தொழில்நுட்ப டிப்ளோமா கற்கை நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.

பகுதி நேரமாக பயிலக்கூடிய இக்கற்கைநெறிக்கான காலம் ஓர் ஆண்டு ஆகும். பட்டதாரி மாணவர்கள், அரச உத்தியோகத்தர்கள், தனியார் துறை ஊழியர்கள் அனைவரும் விண்ணப்பிக்க முடியும். பூர்த்தி செய்வோர் பல்கலைக் கழகத்தின் தகவல்தொழில் நுட்பமாணி பட்டக்கற்கை நெறியையும் தொடர முடியும்.

A/L, O/L பரீட்சைக்கு தோற்றத் தவறியோரும் பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் அடிப்படைக்கணனிக் கற்கை நெறியை பூர்த்தி செய்வதன் மூலம் மேற்படி கற்கை நெறியை தொடர முடியும். மேலதிக விபரங்களையும் ரூபா 100,000 பெறுமதியான புலமைப்பரிசில் சம்பந்தமான தகவல்களையும் இல. 324 பலாலி வீதி. பல்கலை[illegible] துள்ள எம்.சி.[illegible] வளாகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.



## [illegible]1 ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பு



கிட்ணர் நாகலிங்கம்

பிறப்பு 1941.02.28 இறப்பு 2010.04.05

எமது குடும்பத் தெய்வத்தின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நாளை (05.05.2010) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். அந்நிகழ்விலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

காளிகோயிலடி,
தாவடி தெற்கு, கொக்குவில். (97550) கனகம்மா (மனைவி).


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழகத்தில் பார்வதி அம்மாள் சிகிச்சை பெற மத்திய அரசுக்கு முதல்வர் பரிந்துரைக் கடிதம்

## சட்டசபையில் ஸ்டாலின் தெரிவிப்பு

சென்னை, மே 04

விடுதலைப் புலி களின் தலைவர் பிரபாகரனின் தாயார் பார்வதிஅம்மாள் தமிழகத்தில் தங்கி மருத்துவ சிகிச்சை பெறுவதற்கு அனுமதி அளிக்க வேண்டும் - என்று மத்திய அரசுக்கு தமிழக அரசு பரிந்துரைக் கடிதம் அனுப்பியுள்ளது - என்று துணை முதல்வர் ஸ்டாலின் நேற்று சட்டசபையில் தெரிவித்தார்.

சட்டசபையில் நேற்று துணை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அறிக்கை ஒன்றை தாக்கல் செய்தார். அதில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

மலேஷியாவில் இருந்து சென்னைக்கு சிகிச்சைக்காக வந்த விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனின் தாயார் பார்வதி அம்மாள் சென்னை விமான நிலையத்தில் குடியுரிமை அதிகாரிகளால் திருப்பி அனுப்பிய நிகழ்வு குறித்து கடந்த மாதம் 19 ஆம் திகதி சட்டசபையில் விவாதிக்கப்பட்டது.

இதுதொடர்பாக உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த நீதி பேராணை விண்ணப்பம் விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்டபோது தமிழக அரசின் சட்டத்தரணி, மாநில அரசுக்கு மருத்துவ சிகிச்சை கோரி பார்வதி அம்மாள் மனு அளித்தால் மனிதாபிமான அடிப்படையில் பரிசீலனை செய்யுமாறு மத்திய அரசுக்கு தக்க முன் முடிவுகள் அனுப்பப்படும் என்ற கருத்தை உயர்நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

இதன் மீது கருத்து தெரிவித்த உயர்நீதிமன்ற நீதிபதிகள், பார்வதி அம்மாள் மருத்துவ சிகிச்சை முறையீட்டை மனுதாரரோ அல்லது அவரது தரப்பிலோ கொடுக்க வேண்டும் என்றும் அவ்வாறு கொடுக்கப்படும் மனுவை தமிழக அரசு பரிசீலிக்க வேண்டும் என்றும் ஆணையிட்டனர்.

இதற்கிடையே பார்வதி அம்மாள் பெருவிரல் ரேகை பதித்த கடிதம் ஒன்று தனது வைத்திய வசதிக்காக கோலாலம்பூரில் இருந்து திருச்சிக்கு விமானத்தில் வருவதற்கு மலேஷியாவில் உள்ள இந்தியத் தூதரகம் மூலமாக ஏற்பாடு செய்து தரும்படி கோரி முதலமைச்சர் கருணாநிதிக்கு கடந்த 30 ஆம் திகதி அனுப்பப்பட்டது.

முதலமைச்சர் ஏற்கனவே சட்டசபையில் அறிவித்ததற்கு இணங்க பார்வதி அம்மாள் அனுப்பியுள்ள கடிதத்தில் கேட்டுகொண்டுள்ளபடி மருத்துவ சிகிச்சைக்காக தமிழ்நாட்டுக்கு அவர் வந்து செல்ல சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஆராய்ந்து அனுமதி அளிக்கலாம் என்ற பரிந்துரை கடிதம் மத்திய உள்துறை செயலாளருக்கு தமிழக அரசால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது - என்றுள்ளது.

# சோனியாவைச் சந்தித்தார் கலைஞர்

சென்னை, மே 04

காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியை தமிழக முதல்வர் கருணாநிதி நேற்றுச் சந்தித்தார்.

முதல்வர் கருணாநிதி இரண்டு நாள் பயணமாக நேற்றுமுன்தினம் காலை புதுடில்லி சென்றார். குடியரசுத் தலைவர் பிரதீபா பாட்டீலை நேரில்ச் சந்தித்து கோவையில் நடைபெற உள்ள உலகத் தமிழ்ச் செம் மொழி மாநாடுக்கான அழைப்பிதழை கொடுத்தார். பின்னர் ரூபா 10 கோடி செலவில் புதுடில்லியில் கட்டப்பட்டுள்ள பெரியார் மையத்தை திறந்து வைத்தார்.

நேற்றுக்காலை காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியை அவர் சந்தித்தார். அப்போது உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடுக்கான அழைப்பிதழை கொடுத்தார். அப்போது தி.மு.க. நாடாளுமன்றத் தலைவர் டி.ஆர்.பாலு, மத்திய அமைச்சர் தயாநிதி மாறன், மாநிலங்களவை உறுப்பினர் கனிமொழி ஆகியோர் உடனிருந்தனர்.

பிரதமர் மன்மோகன் சிங்கையும் சந்தித்து உலகத் தமிழ் மாநாடுக்கான அழைப்பிதழை முதல்வர் நேரில் கொடுக்க உள்ளார்.



புதுடில்லிக்கு விஜயம் மேற்கொண்ட முதல்வர் கருணாநிதி நேற்று முன்தினம் ஜனாதிபதி பிரதீபா பட்டிலைச் சந்தித்த போது.....

# இந்தியச் செய்திகள்

# வரதராஜப்பெருமாளின் மகளுடன் மலையாளத்தில் நடிக்கும் அமர்சிங்!

சென்னை, மே 04



சமாஜ்வாடி கட்சி பொதுச்செயலாளராக இருந்த அமர்சிங், உட்கட்சி பூசல் காரணமாக சமீபத்தில் கட்சியில் இருந்து விலகினார். பொலிவுட் நடிகர் அமிதாப் பச்சனின் நெருங்கிய நண்பரான இவர் தற்போது 'பாம்பே மிட்டாய்' என்ற மலையாள படத்தில் நடிக்கிறார்.

இந்தப் படத்தின் கதாநாயகி நீலாம்பரி பெருமாள். இலங்கையில் வடக்கு - கிழக்கு மாகாண சபையில் முன்னாள் முதல்வர் வரதராஜ பெருமாளின் மகள்தான் இவர். இந்தப் படம் ஹிந்தியிலும் டப்பிங் செய்யப்படுகிறது. அமர்சிங், மாலிக் மன்சூர் என்ற இந்துஸ்தானி இசை கலைஞராக நடிக்கிறார். இவருக்கு ஜோடியாக டிம்பிள் கபாடியா நடிக்கிறார். இந்த படத்தின் படப்பிடிப்பு நேற்றுமுன்தினம் கொச்சியில் தொடங்கியது.

இதுகுறித்து அமர்சிங் கொச்சியில் செய்தியாளர்களிடம் பேசுகையில் -

எனது இளம் வயதில் டிம்பிள் கபாடியா நடித்த ஒரு படத்தையும் தவற விட்டதில்லை. சூப்பர் ஹிட் படமான 'பாபி' படத்தை நான் பலமுறை பார்த்துள்ளேன். நான் ஷாருக்கானோ, அமிதாப் பச்சனோ இல்லை - என்றார்.

இதற்கு முன் அமர்சிங் ஜெயபிரதாவுடன் ஒரு பெங்காலி படத்தில் நடித்துள்ளார். அமர்சிங் நடிக்கும் இந்த படத்தில் மலையாள நடிகர்கள் வினுமோகன், ஜெகதி ஸ்ரீகுமார், ஹரிஸ்ரீ அசோகன் மற்றும் பலர் நடிக்கிறார்கள்.

# இன்றுமுதல் 'அக்னி நட்சத்திரம்' ஆரம்பம்; சென்னையில் சுட்டெரிக்கின்றது வெயில்!

சென்னை, மே 04

சுட்டெரிக்கும் அக்னி நட்சத்திரம் இன்று முதல் ஆரம்பமாகிறது. இது இந்த மாதம் 28 ஆம் திகதி வரை நீடிக்கும்.

தமிழகத்தில் மார்ச் மாதம் முதல் மே மாதம் வரை கோடை காலமாகும். அதிலும் ஏப்ரல் 15 முதல் மே இறுதிவரை வரை வெயிலின் தன்மை கடுமையாக இருக்கும்.

ஆனால், பருவநிலை மாற்றம் காரணமாக கடந்த வருடம் கோடை காலம் முடிந்த பிறகும் 2 ஆவது கோடை வந்துவிட்டதோ என்று எண்ணும் அளவுக்கு வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்தது.

இந்த ஆண்டு கோடை தொடங்கி ஒரு மாதம் தாண்டிவிட்டது. சென்னை, வேலூர், திருச்சி, மதுரை உள்ளிட்ட பெரும்பாலான மாவட்டங்களில் வெயில் சுட்டெரிக்க தொடங்கிவிட்டது. சென்னையை பொறுத்தவரை கடந்த சில நாள்களாக வெயிலின் தன்மை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. கடந்த சில நாள்களாக சென்னையில் வெயில் அளவு 100 டிகிரியை தாண்டி 101 ஆக பதிவானது. இந்த நிலையில் கடந்த 2 நாள்களாக சென்னை உட்பட தமிழகத்தில் பல பகுதிகளில் பரவலாக மழை பெய்ததால் பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

கோடை மழை பெய்த போதிலும் சென்னையில் கடுமையான வெப்பம் நிலவி வருகிறது. இதன் காரணமாக வீதிகள் எங்கும் அனல் காற்று வீசுவதால் வாகனங்களில் செல்வோர், நடந்து செல்வோர் கடும் சிரமத்திற்கு ஆளானார்கள். பஸ்களில் சென்றவர்களும், ரயிலில் சென்றவர்களும் வியர்வை மழையில் நனைந்தனர். வீடுகளிலும், அலுவலகங்களிலும் உள்ள மின்விசிறிகள் வெப்ப காற்றையே கக்கின.

இந்த நிலையில் இன்று அக்கினி நட்சத்திரம் தொடங்குகிறது. இன்று தொடங்கும் அக்கினி வெயில் 28 ஆம் திகதிவரை மொத்தம் 25 நாள்கள் நீடிக்கிறது.


இந்திய கலாசார பண்பாட்டுக் கழகம்

ICCR

பெருமையுடன் வழங்கும்

மஹாகவி காளிதாஸின் சிறப்புமிகு காவியம்

அபிக்ஞான சகுந்தலம்

நாட்டிய நாடகம் வழங்குபவர்கள்: அரு ஸ்ரீ கலையகம்



காதல், அவமானம், அவநம்பிக்கை, மனஉறுதி, இனிய மறு இணைப்பு, இணைந்த ஒரு காதல் காவியம்

தயாரிப்பு நெறியாள்கை: கலாசூரி அருந்ததி ஸ்ரீரங்கநாதன்



மே 5 ஆம் திகதி புதன்கிழமை மாலை 5 மணிக்கு

வீரசிங்கம் மண்டபம், 12 கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அனுமதி இலவசம்

ஊடக அனுசரணை : Shakthi TV சக்தி FM உதயன்








உலகக் கிண்ணப் பரிசுப் போட்டி

'உலகக் கிண்ணத்தை முன்னிட்டு 'உதயன்' பத்திரிகை ஆனது தனது விளம்பரதாரரின் அனுசரணையுடன் தனது வாசகர்களுக்கிடையே நடத்தும் மாபெரும் பரிசுப்போட்டி இன்று முதல் ஆரம்பம்.

விதிகள்:

1. நாளாந்தம் ஒரு வெற்றியாளர் தெரிவுசெய்யப்படுவர்.
2. ஒவ்வொரு வெற்றியாளருக்கும் பரிசுப் பொதியானது 1500/- இற்கு மேற்பட்டதாக இருக்கும்.
3. ஒருவர் எத்தனை போட்டிகளிலும் பங்குபற்றலாம்.
4. மேலும் இவற்றுடன் அனைத்துப் போட்டியாளர்களில் இருந்து மூன்று மேலதிக வெற்றியாளர்கள் தெரிவுசெய்யப்படுவர். இவர்களுக்கான பரிசு விபரம்:

★முதலாம் பரிசு 5000/- ★இரண்டாம் பரிசு 3000/- ★மூன்றாம் பரிசு 2000/-

★'உதயன்' பத்திரிகையில் பிரசுரமாகும் கூப்பனில் மட்டுமே விடைகள் அனுப்பப்படவேண்டும்.

★ஒரு போட்டி தொடர்பாக ஒருவர் எத்தனை விடைகளையும் அனுப்பலாம்.

★அனைத்துப் போட்டிகளுக்குமான முடிவு திகதி 20.05.2010

★வெற்றிபெற்றவர்களின் விவரம்: தபால் மூலமும் பத்திரிகை வாயிலாகவும் அறிவிக்கப்படும்.

★இப்போட்டி தொடர்பாக நடுவரின் தீர்ப்பே இறுதியானது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ICC WORLD TWENTY20 WEST INDIES 2010

# கிரிக்கெட் கோலாகலம்

30.04.2010 – 16.05.2010

## ஜெயவர்த்தனா அதிரடி விளாசல்! இலங்கைக்கு கிட்டியது இலகு வெற்றி!!



கஜானா, மே. 04

மஹேல ஜெயவர்த்தனாவின் அதிரடிச் சதம் கைகொடுக்க டக்வேக் லூயிஸ் முறைப்படி 14 ஓட்டங்களால் சிம் பாவே அணியை வென்றது இலங்கைஅணி.

மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெற்று வரும் மூன்றாவது ஐ.சி.சி. ருவென்ரி-20 உலகக்கிண்ணப் போட்டிகளில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் இலங்கை - சிம்பாவே அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. ஆரம்பவீரர்களாக ஜெயவர்த்தனாவும், டில்சஷானும் களமிறங்கினர். டில்ஷான் 2 ஓட்டங்களுடன் சிகும்புராவின் பந்தில் ஆட்டமிழந்தார்.

அறிமுக வீரர் பெரேரா 19 பந்துகளில் ஒரு பௌண்டறி 2 சிக்ஸர்களுடன் 23 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழக்க சங்கக்கார 3, சந்டிமால் 9, மத்தியூஸ் 4, கப்புக்கெதர 13 என வேகமாக ஆட்டமிழந்தனர்.

மஹேல ஜெயவர்த்தனா அதிரடியாகவும் பொறுப்பாகவும் ஆடி 64 பந்துகளில் 10 பௌண்டறிகள் 4 சிக்ஸர்களுடன் ருவென்ரி - 20யில் முதலாவது சதம் அடித்தார் (100). பிறைஸ் வீசிய பந்தை அடித்தாட முற்பட்டபோது கிறெமரிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். ஜெயசூரியாவும் மலிங்கவும் 3, 2 ஓட் டங்களுடன் களத்தில் நின்ற போது 20 ஓவர்களும் நிறைவடைந்தன.

இலங்கை அணி 7 விக்கெட்டுக்களை இழந்து 173 ஓட்டங்களைப் பெற்றது.

சிம்பாவே அணி சார்பில் பந்து வீசிய பிறைஸ், லம்ப் தலா 2 விக்கெட்டுக் களைக் கைப்பற்றினர். 174 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கைத் துரத்த ஆரம்பித்த சிம்பாவே அணியின் ஆரம்ப வீரர் மஸகட்ஷா 4 ஓட்டங்களுடன் 'ரன் அவுட்' ஆனார். தைபு (12), ரெய்லர் (11) ஆகியோர் ஆடிக் கொண்டிருந்தபோது மழை குறுக்கிட்டது.

அப்போது சிம்பாவே அணி 5 ஓவர்கள் நிறைவடைந்த நிலையில் ஒரு விக்கெட்டை இழந்து 29 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

காலநிலை சீரில்லாத காரணத்தினால் ஆட்டம் நிறுத்தப்பட்டு 'டக்வேக்-லூயிஸ்' முறைப்படி இலங்கை அணி 14 ஓட்டங்களால் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. ஆட்ட நாயகனாக மஹேல ஜெயவர்த்தனா (100) தெரிவானார். (6)

### இன்றைய ஆட்டங்கள்

| குழு 'ரி' | குழு 'டி' |
|---|---|
| நியூஸிலாந்து - சிம்பாவே | அயர்லாந்து - இங்கிலாந்து |
| இடம் : கஜானா | இடம் : கஜானா |
| நேரம் : இரவு 7 மணி | நேரம்: இரவு 11 மணி |


உங்களுக்காக ஒரு சில நிமிடம் !

வேலைதேடும் பட்டதாரிகளே. இளைஞர்களே. யுவதிகளே கல்விசார் தகைமைகள் இருந்தும் ஆளுமை விருத்தியின்மை. நேர்முகத் தேர்வினை எப்படி எதிர்கொள்வது என்று தெரியாத காரணங்களினால் ஏராளமான வேலை வாய்ப்புக்கள் உங்களை விட்டுச்செல்கின்றது. வங்கிகள். தனியார் நிறுவனங்கள் தகுதியான பணியாட்களை எம்மிடமிருந்து எதிர்பார்க்கின்றார்கள். எனவே. இன்றே எமது பயிற்சிப்பட்டறையில் இணைந்து எதிர்காலத் தொழில் வாய்ப்பினை உறுதி செய்து கொள்ளுங்கள். பயிற்சிப் பட்டறையில் இணையும் அனைத்து மாணவர்களும் எமது தொழில் வங்கியில் இணைத்துக் கொள்ளப்படுவார்கள்.

British College of Higher Studies

Tel: 021-2224550, Mobile: 0777222422, 0714299935, 0773501499 web: www.bchs.lk Email:info@bchs.lk

யாழ். மாநகரிலே...

British College of Higher Studies ஏற்பாட்டில்

வேலைவாய்ப்பினைப் பெற்றுத்தர உதவும் பயிற்சிப்பட்டறைகள் (Personality Development Work shops)

உள்ளடக்கம்: நேர்முகத் தேர்வினை எவ்வாறு எதிர்கொள்வது, உரையாடுவது, முகாமைத்துவம், மனிதவளப் பயன்பாடுகள், அலுவலகப் பிரயோகத்திற்கான கணினிப் பயிற்சிகள், ஆங்கில உரையாடற் பயிற்சிகள் என்பன அடங்கலான

பயிற்சிப் பட்டறைகள் : 15 மணித்தியாலங்கள்

சனி, ஞாயிறு மற்றும் வாரநாட்களிலும் நடாத்தப்படும்

வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தில் இருந்து பங்குபெறும் பட்டதாரிகளுக்குச் சிறந்த கட்டணக் கழிவுடன் குழுக்களாகவும் பயிற்சிப் பட்டறைகள் நடாத்தப்படும்.

பயிற்சிப் பட்டறையில் பயிலும் அனைவரும் எமது தொழில் வங்கியிற் பதியப்பட்டு அதனூடாக நல்ல நிறுவனங்களில் (Bank & Private firms) வேலை வாய்ப்பைப் பெற ஆவன செய்து தரப்படும்.


## பாகிஸ்தானை 34 ஓட்டங்களால் வீழ்த்திச் சாதித்தது அவுஸ்திரேலியா!

செயின் லூசியா, மே. 04

பாகிஸ்தான் அணியுடன் கடுமையாகப் போராடி வெற்றி பெற்றது அவுஸ்திரேலிய அணி.

மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெற்றுவரும் ஐ.சி.சியின் மூன்றாவது ருவென்ரி-20 உலகக்கிண்ணப் போட்டிகளில் நேற்று முன்தினம் நடந்த ஆட்டத்தில் பாகிஸ்தான் - அவுஸ்திரேலிய அணிகள் மோதின.



இதில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற அவுஸ்திரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தனர்.

இதன்படி அவுஸ்திரேலிய அணியின் வார்னர் - வட்சன் ஜோடி ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாகக் களமிறங்கினர். வார்னர் 18 பந்துகளில் 4 பௌண்டறிகள் ஒரு சிக்ஸர் அடங்கலாக 26 ஓட் டங்களைப் பெற்று சமியின் பந்து வீச்சில் உமர் அக்மலிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

வாட்சன் அதிரடியாகத் துடுப்பெடுத்தாட அணித்தலைவர் மைக்கல் கிளார்க் 2 ஓட்டங்களுடன் முஹமட் ஹபீஸின் பந்தில் விக்கெட்டைப் பறிகொடுத்து வெளியேறினார்.

வட்சனுடன் ஜோடி சேர்ந்த டேவிட் ஹசி அதிரடியான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்தினார். 29 பந்துகளில் 2 பௌண்டறிகள் 5 சிக்ஸர்களை விளாசி 53 ஓட்டங்களைக் குவித்து ருவென்ரி-20 உலகக்கிண்ணத்தில் தனது முதலாவது அரைச் சதத்தைப் பூர்த்தி செய்தார்.

49 பந்துகளைச் சந்தித்த வட்சன் 7 பௌண்டறிகள் 4 சிக்ஸர்களுடன் 81 ஓட்டங்களைப் பெற்று அக்மலினால் 'ஸ்ரொம்ப்' செய்யப்பட்டு வெளியேற்றப்பட்டார்.

அடுத்து வந்த வைற் 9 ஓட்டங்களுடன் அஜ்மலின் பந்தில் பவாட் ஆலமிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அவுஸ்திரேலிய அணி 19ஆவது ஓவரில் 5 விக்கெட்டுக்களை இழந்து 19ஆவது ஓவரை வீசிய முஹமட் ஆமெர் முதலாவது பந்தில் ஹடினை ஒரு ஓட்டத்துடன் வெளியேற்றினார். இரண்டாவது பந்தில் ஜோன்சனை (0) ஆட்டமிழக்கச் செய்தார்.

மூன்றாவது பந்தில் அக்மல், மைக்கல் ஹசியை 17 ஓட்டங்கள் பெற்ற நிலையில் 'ரன் அவுட்' செய்தார். நான்காவது பந்தில் ஸ்மித்தை ஓட்டம் எதனையும் பெறாத நிலையில் அக்மல் 'ரன் அவுட்' செய்து வெளியேற்றினார்.

ஆமெரின் இறுதிப்பந்து ரைட்டின் விக்கெட்டைப் பதம் பார்க்க ஓட்டம் எதனையும் பெறாத நிலையில் ரைட் வெளியேறினார்.

20 ஓவர்கள் நிறைவில் அவுஸ் திரேலிய அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 191 ஓட்டங்களைப் பெற்றது.

பாகிஸ்தான் அணி சார்பில் பந்து வீசிய முஹமட் ஆமெர், சயீட் அஜ்மல் தலா 3 விக்கெட்டுக்களினைக் கைப்பற்றினர்.

174 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய பாகிஸ்தான் அணியின் அக்மல் - சல்மான்பட் ஜோடி ஓட்டம் எதனையும் பெற முன்னரே நானெஸினால் பிரிக்கப்பட்டது.

நானெஸின் முதலாவது பந்தை எதிர்கொண்ட அக்மல் அப்பந்திலேயே ஓட்டம் எதனையும் பெறாமலேயே ஸ்மித்திடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்துவந்த ஹபீஸ் 12 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க சல்மான்பட் 15 ஓட்டங்களுடன் ரைட்டின் பந்தில் டேவிட் ஹஸியிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

உமர் அக்மல் 18 ஓட்டங்களுடன் ஸ்மித்தின் பந்தில் மைக்கல் ஹஸியிடம் பிடிகொடுத்து ஆட்டமிழக்க மிஸ்பா - உல் ஹக் பொறுப்பாக ஆடினார்.

31 பந்துகளில் 2 சிக்ஸர்கள் ஒரு பௌண்டறி அடங்கலாக 41 ஓட்டங்களைப் பெற்ற மிஸ்பா நானெஸின் பந்தில் கிளார்க்கிடம் பிடிகொடுத்து பெவிலியன் திரும்பினார்.

அணித்தலைவர் சயீட் அப்ரிடி 3 பௌண்டறிகள் ஒரு சிக்ஸருடன் 33 ஓட்டங்களைப் பெற்று ரைட்டின் பந்தில் ஆட்டமிழந்தார்.

அப்துல் நஸாக் 1, ஆலம் 16, ஆமெர் 2, அஜ்மல் 4 என வேகமான ஆட்டமிழக்க பாகிஸ்தான் அணி 20 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 157 ஓட்டங்களைப் பெற்று 34 ஓட்டங்களால் தோல்வி அடைந்தது.

அவுஸ்திரேலிய அணி சார்பில் பந்து வீசிய நானெல், ரைட் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களையும், ஜோன்சன் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

ஆட்டநாயகனாக அவுஸ்திரேலிய அணியின் வட்சன் தெரிவானார். (6)

### போட்டி இல.03

**2010 ரி-20 உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டியை முன்னிட்டு 'உதயன்' நடத்தும் பரிசுப்போட்டி**

- அனுப்புபவர் பெயர் : ......................................
- முகவரி : ......................................
- தொ.பே.இல. : ......................................

**கேள்வி:**

1. சர்வதேச ருவென்ரி-20 போட்டிகளில் ஒரு இன்னிங்ஸில் அதிகூடிய ஓட்டங்களைக் குவித்த நாடு எது?

   ......................................

2. 3 ஆவது உலகக் கிண்ண ருவென்ரி-20 போட்டியில் முதலாவது சதத்தை பூர்த்திசெய்த வீரர் யார்?

   ......................................

3. இல.252, 254, நாவலர் வீதி, இலுப்பையடிச் சந்தி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள ABHI கணனி (PC PARADISE இன் கிளை நிறுவனம் ) நிறுவனத்தின் பெயர்ப் பலகையில் எத்தனை வர்ணம் பாவிக்கப்பட்டுள்ளது.

   ......................................

போட்டி இலக்கம் 03 இல் வெற்றி பெறும் போட்டியாளருக்கு ABHI கணனி நிறுவனத்தினால் ரூபா 2500/- பெறுமதியுள்ள வெப்கமரா ஒன்று வழங்கப்படும்.

★ பூர்த்தி செய்யப்பட்ட கூப்பனை 'உதயன் பனிமனை', 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

அனுப்பும் போது கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் போட்டி இலக்கத்துடன் T-20 உலகக் கிண்ணப் போட்டி எனக்குறிப்பிடப்பட வேண்டும்.


Barnabas

இன் மலிவு விற்பனை

247, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(ஸ்ரீதர் தியேட்டர் அருகில்)




★ 40 % Special Offer, 40% கழிவுடன்...
★ 14" Wega Sony, 21" Wega Sony, 29" Wega Sony மற்றும் G 21 T.V. கள்
★ DVD Player, Amp, Box, Dish Antenna, Home தியேட்டர் மற்றும் இலத்திரனியல் பொருள்கள் மிகக்குறைந்த விலையில்

5 வருட உத்தரவாதம்

Life Time Free Service

மதன் எலக்ரோனிக்ஸ்
சுதுமலைச் சந்தி, மானிப்பாய்.
0217901574, 0777448668.

பர்ணபாஸ் எலக்ரோனிக்ஸ்
360/1, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 0217900728, 0777448668

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொன்சேகா.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோத்தபாய ராஜபக்ஷ, இராணுவத் தளபதி ஜகத் ஜயசூரிய, கொழும்பு பாதுகாப்புப் பிரிவுப் பொறுப்பதிகாரி மேஜர் ஜெனரல் சுமித் மணவடு, இராணுவப் பொலிஸ் உயரதிகாரி பிரிகேடியர் விஜேஸ்ரீ, சட்டமா அதிபர் ஆகியோர் எதிர்மனுதாரர்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர். இம்மனுவை நீதிபதிகள் குழு நேற்று ஆராய்ந்தது.

மனுதாரரின் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டீ சில்வா ஆஜரானார்.

இரு இராணுவ நீதிமன்றங்களும் அரசமைப்புக்கு எதிராகவும் இராணுவச் சட்டங்களுக்கு மாறாகவும் அமைக்கப்பட்டுள்ளன என்று அவர் மன்றில் வாதாடியதுடன், பொன்சேகாவுக்கு எதிரான இராணுவ நீதிமன்ற விசாரணைகள் மீது தற்காலிக தடை உத்தரவு பிறப்பிக்கவேண்டுமெனக் கோரினார்.

அரசுத் தரப்பில் எதிர்மனுதாரர்கள் சார்பாக பிரதி சொலிசிட்டர் ஜெனரல் பி.அலுவிகாரே ஆஜரானார். அவர் இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பிக்கப்படுவதைக் கடுமையாக ஆட்சேபித்தார்.

இருப்பினும், பொன்சேகாவுக்கு எதிரான இராணுவ நீதிமன்ற விசாரணைகள் அனைத்தும் எதிர்வரும் 22ஆம் திகதி வரை இடைநிறுத்தப்பட வேண்டுமென மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டது.

இராணுவத் தளபதியாக இருந்து இராணுவ சட்டங்களை மீறிச் செயற்பட்டார், அப்பதவிக் காலத்தில் அரசியலிலும் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டுகளின் பேரில் பொன்சேகா இராணுவத் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார். அவர் மீதான இராணுவ விசாரணைகளை நடத்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இரு தனித்தனி இராணுவ நீதிமன்றங்களை அமைத்து அவற்றுக்கென இராணுவ நீதிமன்ற விசாரணையாளர்களை நியமனம் செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-சி)

## அவசரகாலச்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பயங்கரவாத விசாரணைகள் சட்டம் ஆகியவற்றில் திருத்தங்கள் எவையும் மேற்கொள்ளப்பட மாட்டாது என்றும் அவர் சொன்னார்.

வெளிவிவகார அமைச்சில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்த நாட்டில் இப்போது பயங்கர வாதம் முற்றாக ஒழிக்கப்பட்டுவிட்டமையால் அவசரகால ஒழுங்குவிதிகளில் திருத்தங்கள் சிலவற்றை மேற்கொள்வதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

தேசிய பாதுகாப்புக்குப் பாதிப்பு ஏதும் ஏற்படாத வகையில் இந்தத் திருத்தங்கள் மேற்கொள்ளப்படும். ஞாயிற்றுக்கிழமை உத்தியோகப்பற்றற்ற முறையில் கூடிய அமைச்சரவை இந்தத் தீர்மானத்தை எடுத்தது.

தற்போதைய நிலைமையின் கீழ் இந்தத் தீர்மானம் வரவேற்கத்தக்க ஒன்றாகும். இந்தத் திருத்தங்களைப் பிரதமர் டி.எம்.ஜயரட்ண நாடாளுமன்றில் சமர்ப்பிப்பார். அவை மீதான விவாதம் செவ்வாய் மற்றும் புதன் கிழமைகளில் இடம்பெறும்.

இருப்பினும் பயங்கரவாதத்திற்கு எதிரான சட்டங்கள் மற்றும் பயங்கரவாத விசாரணைகள் சட்டம் ஆகியவற்றில் எதுவித திருத்தங்களும் மேற்கொள்ளப்பட மாட்டாது - என்றார். (அ-சி)

யூனிவேர்சல் (யா/இந்து மகளிர் கல்லூரி அருகே)
O/L Day Class
ஆரம்பம்: 06.05.2010 வியாழன் 7.30am
(திங்கள் - வெள்ளி வரை)
(97536)

வீடு வாடகைக்கு தேவை
நிறுவனமொன்றிற்கு யாழ்.மாநகர சபை பிரதேசத்திற்கு உட்பட்ட பகுதிக்குள் வீடு வாடகைக்கு தேவை. (மாடி வீடு விரும்பத்தக்கது)
தொடர்பு கொள்ள வேண்டிய
தொலைபேசி இல:
0776622981, 0778561744
(சி/567280)

Paper Class
[illegible]கல்வி திரு: பாலே[illegible]
செவ், புதன், வியா. 4.45pm
(வெளி மாணவருக்கும் அனுமதி உண்டு)
யூனிவேர்சல் (யா/இந்து மகளிர் கல்லூரி அருகே)
(975357)

முகாமைத்துவ உதவியாளர்
போட்டிப்பரீட்சை வகுப்புக்கள் மூன்று இடங்களில் நடைபெறுகின்றன.
★ யாழ்ப்பாணக்கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு (யாழ்)
(செவ்வாய் - வெள்ளி 1-5வரை)
★ கிறிஸ்ரல் (நெல்லியடி)
★ உயர்கலைக்கல்லூரி (மீசாலை)
(97568)

## வல்லை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீதி அபிவிருத்திச் சபையின் பிரதம பொறியியலாளர் வி.சுதாகர் இதனை அறிவித்துள்ளார். இந்தப்பாதை மூடப்பட வுள்ளதால் மாற்று ஏற்பாடாக ஆவரங்கால், அச்சுவேலி வீதி, அச்சுவேலி நகரம், வல்லை ஊடாக வடமராட்சிக்கான பயணத்தை மேற்கொள்ளலாம் என அவர் அறிவித்துள்ளார். (ஓ-1)

## குடாநாட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த சில தினங்களுக்கு முன்னர் மாவின் விலை மூன்று ரூபாவால் அதி கரிக்கப்பட்டதன் எதிரொலியாக பாணின் விலை ஒரு ரூபாவால் அதிகரிக்கப்படுவ தாக கொழும்பில் அறிவிக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பாக யாழ். அரச அதிபருடன் தொடர்புகொண்டு கேட்டபோது - புதிய விலை விவரங்கள் தொடர்பாக இன்னமும் முடிவு செய்யப் படவில்லை. புதிய விலைவிவரங்கள் இன்று அறிவிக்கப்படும் என்று கூறினார். (ஓ-1)

## சாவகச்சேரி நீதிவானுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணம், மல்லாகம், ஊர்காவற்றுறை, பருத்தித்துறை, சாவகச்சேரி ஆகிய நீதிமன்றங்களின் சட்டத்தரணிகள் இன்றைய கூட்டத்தில் கலந்துகொள்ளவிருக்கின்றனர்.

நீதிபதியின் பணிக்கு இடையூறு விளைவிக்கும் நடவடிக்கையை நிறுத்துவது தொடர்பாக இக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டு அடுத்து எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் முடிவு செய்யப்படும் என்று சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (ஓ-1-207)

## மூத்த ஊடகவியலாளர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

''இதன் மூலம் ஜனாதிபதி பேச்சளவில் மாத்திரமல்ல, செயலிலும் ஊடக சுதந்திரத்தை உறுதிப்படுத்தி உள்ளார். சர்வதேச அளவில் இலங்கை குறித்த கருத்துகள் மாற்றமடைவதற்கு இது வழிவகுக்கும்'' என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

'நோர்த் ஈஸ்டர்ன் ஹெரால்ட்' என்ற சஞ்சிகையின் ஆசிரியராகப் பணியாற்றியதுடன் 'சண்டே ரைம்ஸ்' வார இதழின் கட்டுரையாளராகவும் விளங்கிய திஸநாயகம் 2008ஆம் ஆண்டு மார்ச் மாதம் கைது செய்யப்பட்டார்.

விடுதலைப் புலிகளிடமிருந்து நிதியைப் பெற்றுக்கொண்டு இனவன்முறையைத் தூண்டும் விதத்தில் எழுதினார் எனக் குற்றம் சாட்டப்பட்ட திஸநாயகத்துக்கு கொழும்பு உயர்நீதிமன்றம் 20 வருட சிறைத்தண்டனை வழங்கியிருந்தது. எனினும் இவர் இவ்வருடம் ஜனவரி மாதத்தில் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

திஸநாயகத்துக்கு விதிக்கப்பட்ட 20 வருட சிறைத்தண்டனைக்கு சர்வதேச ரீதியில் கடும் எதிர்ப்பு வெளியானதும் குறிப்பிடத்தக்கது.(சி)

## வடக்கு, கிழக்கு,....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர்களின் வாழ்வாதாரத் தேவைகள் பூர்த்தி செய்யப்படவேண்டும்.

* முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் அனைவரும் தமது சொந்த இடங்களில் முழுமையாக மீள்குடியமர்த்தப்பட வேண்டும்.
* கண்ணிவெடிகள் அகற்றப்படுவதாகக் கூறி மீள்குடியமர்வை தாமதப்படுத் திக் கொண்டு போகக்கூடாது.

### அரசு எங்களுடன் பேசினால் திறந்த மனதுடன் ஆதரவு

* நாங்கள் அந்த மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள். அந்த வகை யில் அந்த மக்களின் மீள்குடியமர்வு மற்றும் அபிவிருத்திப் பணிகளில் நாமும் பங்க ளிக்கவேண்டும். இது தொடர்பாக அரசு எங்களுடன் பேசவேண்டும். திறந்த மனது டன் அவர்களுக்கு ஆதரவு வழங்க ஒத்து ழைக்க நாங்கள் தயாராக இருக்கிறோம்.
* யாழ்ப்பாணத்தில் இருபது வருடங்களாக நடைமுறையில் உள்ள அதிஉயர் பாதுகாப்பு வலயங்களால் இடம்பெயர்ந்த மக்களை அவர்களது சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்தவேண்டும். இந்தப் பணியை துரிதமாக்கவேண்டியது அவசியம். அத்துடன் வடக்கு - கிழக்கில் உள்ள அதிஉயர் பாதுகாப்பு வலயங்கள் யாவும் உடன் நீக்கப்பட வேண்டும்.
* இந்தியாவில் தஞ்சம் அடைந்துள்ள ஈழ அகதிகளை மீண்டும் இலங்கைக்கு வரவழைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அவர்களை கௌரவமான முறையில் மீள் குடியமர்த்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேற்கண்ட விடயங்கள் உட்பட பல் வேறு விடயங்களைத்தாம் முன்வைத்தாக கூட்ட மைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கில் இந்தியா மேற் கொள்ளவுள்ள உதவிகள் குறித்து தூதுவர் கூட்டமைப்புக் குழுவிடம் தெரிவித்தவை வருமாறு:

* மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய இடங்களுக்கான ரயில் பாதைகளைப் புனரமைக்க உதவி.
* தூத்துக்குடி, தலைமன்னார் ஆகிய இடங்களுக்கு பயணிகள் கப்பல் சேவையை ஆரம்பித்தல்.
* காங்கேசன்துறை துறைமுகத்தை புனரமைக்க உதவி.
* முல்லைத்தீவு மாவட்டத்தில் பாடசாலைகளை திருத்தி அமைப்பதுடன் உபகரணங்களையும் வழங்குவோம்.
* கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் உள்ள வைத்தியசாலைகளுக்குத் தேவையான உபகரணங்களை வழங்க ஏற்பாடு செய்யப்படும்.

(அ-1)

முகாமைத்துவ உதவியாளர்
போட்டிப்பரீட்சைக்கான விஷேட கருத்தரங்கு
★ எதிர்பார்க்கை வினாக்கள் கலந்துரையாடப்படும்.
காலம்: 05.05.2010 புதன் 9-3வரை
(3மணிக்கு பயிற்சிப் பரீட்சை)
விரிவுரை வழங்குபவர்:
P.உமாசங்கர் (தொழில்நுட்பக்கல்லூரி விரிவுரையாளர்)
கருத்தரங்குக்கான கட்டணம் - 400/=
(சி/567281)
நாவலர்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்

பிரத்தியேக வகுப்பு
வரலாறு தரம் 9, 10, 11
தொடர்புகளுக்கு: 24, சீனியர் லேன், யாழ்ப்பாணம். தொ.பே. 0213207847
(97536)

பொருளியல்
N.B.கஜீதரன்
A/L 2012இற்கான
புதிய பிரிவுகள்
(பிந்தி வந்து சேரும் மாணவருக்கானது)
BPI (குருநகர்) (சின்னக்கடைச் சந்தை அருகில்)
நேர அட்டவணை அலுவலகத்தில்

## போரினால்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அளவில் தமக்கு நீதி கிடைக்கும், உண்மை வெளிவரும் என்ற எந்த நம்பிக்கையுமில்லாத நிலையில் உள்ளனர்.

மனித உரிமை மீறல்களுக்குக் காரணமானவர்களைப் பொறுப்புக் கூறச் செய்வதற்கான முதல் நடவடிக்கையாக இதில் சம்பந்தப்பட்ட சகல தரப்புகளிடமிருந்தும் தகவல்களைச் சேகரித்தவர்களை விசாரிக்க சர்வதேச சுயாதீன விசாரணைக்குழுவொன்றை ஐக்கிய நாடுகள் ஏற்படுத்த வேண்டும் என மன்னிப்புச்சபை தெரிவித்துள்ளது. (அ-சி)

## சாவகச்சேரி மாணவன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதுவரை காலமும் தலைமறைவாகியிருந்த நிலையில் கடந்த சனிக் கிழமை சாவகச்சேரிப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் நேற்று மன்றில் ஆஜராக்கப்பட்டார். ஏனைய ஐந்து சந்தேக நபர்களும் ஏற்கனவே கைதுசெய்யப்பட்டு தொடர்ச்சியாக விளக்கமறியலை எதிர்கொண்டு வருகின்றனர்.

யாழ்ப்பணத்தின் பிரபல வர்த்தகர் ஒருவரின் மகனான கபிலநாத் கடந்த பொதுத் தேர்தல் காலத்தில் கப்பம் கோரி கடத்தப்பட்டு பின்னர் படுகொலை செய்யப்பட்டார் என்பது தெரிந்ததே.

நீதிவானுக்ககு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல்களை கண்டித்து சாவகச்சேரி நீதிமன்றில் சட்டத்தரணிகள் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டதால் வழக்கு விசாரணை எதுவும் நேற்று இடம்பெறவில்லை.

## மரண அறிவித்தல்கள்

### வன்னியசிங்கம் பாலேந்திரன்

பழைய பஸ்கொம்பனியடி,2ஆம் வட்டாரம், வேலணை, கிழக்கைத் சேர்ந்த வன்னியசிங்கம் பாலேந்திரன் நேற்று (03.05.2010)திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வன்னியசிங்கம் மற்றும் பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நாகராஜா- சௌந்தரநாயகி ஆகியோரின் மருமகனும் பேரின்பராணியின் அன்புக் கணவரும் இராசேந்திரனின் அன்புச் சகோதரனும் , கமலகுமாரி,லோகராணி, சரவணபவன் (நோர்வே), இலட்சுமிகாந்தன் (பிரான்ஸ்), கிருஸ்ணகாந்தன் (பிரான்ஸ்), காலஞ் சென்ற ஜெயகாந்தன் மற்றும் ஜெயராணி, ராஜகாந்தன் (பிரான்ஸ்), ஜெயவாணி ஆகியோரின் அன்பு மைத்துனரும் , ஆனந்தசிவராசா, கந்தசோதி (நோர்வே),சிவயோகநாயகி (பிரான்ஸ்),புஸ்பமாலா (பிரான்ஸ்),செல்வராணி (பிரான்ஸ்), இளந்திரையன் (லட்சுமி மில்), கஜேந்தினி (பிரான்ஸ்), ஞானகுமார் (பிரான்ஸ்) ஆகியோரின் சகலனும் ஆசிரியர்களான அச்சுதா,சுதன்,அஜந்தன் ஆகியோரின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.05.2010) புதன்கிழமை நண்பகல் 12மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தளையம்பதி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பழைய பஸ் கொம்பனியடி,
2ஆம் வட்டாரம், வேலணை கிழக்கு. (97576)

தகவல்:
மனைவி.

### தம்பிஐயா கதிர்காமநாதன் (தில்லையர்)



குரும்பசிட்டியைச் சேர்ந்தவரும், குப்பிளானைப் பிறப்பிடமாகவும், தற்போது திருநெல்வேலி சைவப்பாடசாலை ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிஐயா கதிர்காமநாதன் நேற்று (03.05.2010) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிஐயா - சுந்தரம் தம்பதிகளின் மூத்த மகனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - நாகம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும், அன்னலட்சுமியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சொர்ணம்மா - சரஸ்வதி, சுந்தரலிங்கம் - தர்மலிங்கம், மகாலிங்கம் மற்றும் சிவலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிவஞானசுந்தரம் (ஜேர்மனி), திருச்செல்வம், அருட்செல்வம், காலஞ்சென்ற பஞ்சலிங்கம் மற்றும் ஸ்ரீதரன், கிருபாகரன், அனுஷா ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெயராணி (ஜேர்மனி), பிறேமிளா, மயூரா, கங்காதேவி, பிரபாகரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், டர்மிளா (ஜேர்மனி), ஜான்சி, யதுசன், நிதுஷன், சர்மிளா, கிரிஷாந், கிருஸ்டிகா, பிரியங்கன், பிரிந்தன், பிரகாஷ், பிரவீனா ஆகியோரின் அன்புப் பேரனும், டரனின் (ஜேர்மனி) பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.05.2010) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் திருநெல்வேலி இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சைவப்பாடசாலை வீதி,
திருநெல்வேலி.

தகவல் :
அன்னலட்சுமி (மனைவி), பிள்ளைகள்.

### மேரிமாக்கிறேட் (எலிசா) பொணிவஸ்



யாழ்ப்பாணம் மார்ட்டின் றோட்டைப் பிறப்பிடமாகவும், சுண்டுக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மேரி மாக்கிறேட் (எலிசா) பொணிவஸ் அவர்கள் நேற்று (03.05.2010) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கெஸ்லா மற்றும் திரேசம்மா தம்பதிகளின் அன்பு மகளும், அவுட்டன் பொணிவஸ் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான டோமினிக் பொணி வஸ் மில்றட் அவர்களின் மருமகளும், செறின், வலன்டைன், ஜொனி, ரமியா ஆகியோரின் அன்புத் தாயாரும், றஞ்சித், பியுட்டன், பிரமிளா, துஷாரா ஆகியோரின் மாமியாரும், றஜித், ரஞ்சன் ஆகியோரின் பேர்த்தியும், வயலட், தங்கா, செல்லா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (04.05.2010) செவ்வாய்க் கிழமை மாலை 4 மணிக்கு கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கொழும்புத்துறை வீதி,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

தகவல் :
குடும்பத்தினர்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 04.05.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org